Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | புரட்டாதி 6 | றஜபு 20 | ( 22—9—70 ) | செவ்வாய்க்கிழமை | இதழ் 223

**முக்கிய அறிவித்தல்**

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு விளம்பரம் எதுகாரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

ஆர். வி. ஜி. பீடி

'உற்பத்தியாளர்'

47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# 'தேசியஒற்றுமைக்காகபழைய சரித்திரத்தையே மாற்றலாம்

## வறுமைதான் இந்த நாட்டின் பொது எதிரி"

### இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் செனட்டர் நடேசன்

யாழ்ப்பாணம் செவ்

இன, மத, மொழிப் பிரச்னைகளால் இந்த நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கமுடியாதென்றும் இந்த நாட்டின் பொது எதிரியான வறுமையை எதிர்த்து முறியடிப்பதற்கு இந்த நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடுகளை விட்டு ஒன்று சேர்ந்து போராடவேண்டுமென்றும் செனட்டர் எஸ் நடேசன் கியூ ஸி நேற்று மாலை யாழ் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்

துவேஷத்தை விட்டு நட்புறவும் நல்லெண்ணமும் தான் இந்தநாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்து சந்தோஷமாக வாழ வழிவகுக்குமென்றும் அவர் சொன்னார் செனட்டர் நடேசன் மேலும் குறிப்பிட்டதாவது:-

தேசீய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு இப்போதுள்ள பாடப் புத்தகங்களையே மாற்றவேண்டும் சிங்களவரும் தமிழரும் எப்படிச் சண்டை பிடித்தார்கள் எங்கெங்கு சண்டை பிடித்தார்களென்ற சரித்திரத்தைப் படிப்பிப்பதால் பிளவும் பிரிவினையும் வேற்றுமையும் அதிகரிக்குமேயல்லாது ஒற்றுமையேற்பட முடியாது. இப்போதுள்ள பாடப்புத்தகங்களில் இவைதான் கூறப்பட்டிருக்கின்றன. தமிழரும் சிங்களவரும் எப்படி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்பதுபற்றிப் பிஞ்சு உள்ளங்களில் உறுத்தவேண்டும், தேவையானல் சரித்திரத்தையே மாற்றிப் புதிய சரித்திரத்தையே தேசீய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக எழுதவேண்டும். சோஷலிஸநாடுகள் பலவும் இதையேசெய்திருக்கின்றன

செனட்டர் நடேசன் மேலுப் பேசுகையில் தமிழரிடையேயுள்ள சாதி மற்றும் வேறுபாடுகள் நீக்கப்பட

(16-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு செயற் குழு ஆராய்ந்தது!

(நமது நிருபர்)

புதிய அரசியல் அமைப்புச் சம்பந்தமாகத் தமிழரசுக்கட்சியின் உப குழு தயாரித்த மகஜரை தமிழரசுக் கட்சி செயற்குழு நேற்று ஆராய்ந்தது

யாழ்ப்பாணத்திலும் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் ஊர்காவற்றுறை எம் பி திரு கா பொ இரத்தினம் தலைமையில் இந்த மகஜர் ஆராயப்பட்டது

இன்றும்தொடர்ந்து ஆராயப்படும்

## மொழிப்பிரச்னையை விட்டு பொருளாதாரத்தில் குதியுங்கள்

### சோஷலிச முன்னணி அமைப்புக் கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி.

—நமது அலுவலக நிருபர்—

**இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவரை எதிர்நோக்கியுள்ள சகல பிரச்னைகளையும் அரசாங்கத்துடன்ஒத்துழைத்தே ஜனநாயக முறைப்படி தீர்க்கலாமே ஒழிய அறப் போராட்டத்தின் மூலமோ சத்தியாக்கிரகத் தின்மூலமோ தீர்க்கமுடியாது.**

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில்நேற்று நடைபெற்ற வடமாகாண சேஷலிச முன்னணி அமைப்பு மகாநாட்டில் வட்டுக் கோட்டை எம்.பி. திரு.ஆ. தியாகராசா பேசுகையில் இவ்வாறு கூறினர்.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு.வி. ஆனந்தசங்கரி, நல்லூர் எம்.பி, தி. ஸி. அருளம்பலம், மற்றும் வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் உட்பட சுமார் 60 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

திரு. தியாகராசா மேலும் பேசியதாவது:

கடந்த 15 வருடகாலமாக தமிழ்மக்கள் மொழிப் பிரச்னையில் தங்கள் காலத்தைக் கழித்தனரே அன்றி பொருளாதாரப் பிரச்னையில் அக்கறைசெலுத்த வில்லை. இதனுலே தமிழ் மக்களின் நிலைமை மிகமிக மோசமடைத்துவருகிறது. மற்றும் பிரச்னைகளை எல்லாம் வைத்துவிட்டு, இன்னும் 10 வருடங்களுக்கு பொருளாதாரப் பிரச்னையில் அக்கறைகாட்டினுல் மற்றப் பிரச்னைகள் தாமாகவே ஒழிந்துவிடும்.

பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் கொள்கைக்கு அமையவே திட்டங்களை வகுத்தால்தான் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்.

கிளிநொச்சி எம்.பி. திரு. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது;-

''கடந்த காலத்தில் தமிழ் அரசியல்கட்சிகள் சோஷலிச திட்டங்களை எதிர்த்த காரணத்தினுல், தற்போதைய அரசாங்கம் அக்கட்சிகளை சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. ஆதலால் வடமாகாண சோஷலிச முன்னணி மூலமே இப்பகுதி அபிவிருத்திவேலைகளைச்செய்யவேண்டும். இம்முன்னணி கட்சிச்சார்பற்றதாகவே இயங்கவேண்டும். இப்படியான சோஷலிச முன்னணி அரசாங்கத்துக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரு பாலமாக விளங்கவேண்டும். வருங்

(16-ம்பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று வருகிறர்



கோட்டை, செவ்

வெளிநாடு சென்றிருந்த பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று நாடு திரும்புகிறர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நண்பகல் 12•35 மணிக்கு வந்து சேரும் பிரதமருக்கு உத்தியோகபூர்வமான வரவேற்பு எதுவும் அளிக்கப்படமாட்டாது. பிரித்ஓதும் வைபவம் மட்டும் நிகழும்.

## மலேஷியாவின் புதிய பிரதமர்

கோலாலம்பூர், செப்.21

மலேசியாவின் புதிய பிரதமராக திரு. துங்ரசாக் இன்று பதவிப்பிரமாணம் ஏற்கிறர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பிரதமராகஇருந்த துங்அப்துல் ரகுமான் நேற்று இராஜிஞமாக் கடிதத்தைச் சமர்ப்பிக்குமுன்னர் கடைசித்தடவையாக அமைச்சரவைக்குத் தலைமை தாங்கினர்.

## ஜோர்டானியா ரம்சா நகர் எங்கும் நெருப்பு ஜுவாலைகள்!

அம்மான், செப்.21

சிரியாத் துருப்புகள் மேலும் ஜோர்டானிய எல்லைக்குள் புகுந்து கனரகப் பீரங்கிகள்கொண்டு தாக்குவதாக ஜோர்டானியத் தளபதி பீர்மார்சல் மஜானி இன்று தெரிவித்தார்.

ஜோர்டானிய வடபகுதி முழுவதும் உக்கிரமான சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அம்மானில் இருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. சண்டை நடைபெறும் இடங்களில் குண்டுவீச்சுகளினுல் வீடுகள் பற்றி எரிவதையும், புகை மண்டலங்கள் வானத்தில் எழும்புவதையும் காணக் கூடியதாக இருக்கிறதென அம்மானில் உள்ள நிருபர்கள் தெரிவித்தனர்.

இதில் 5000 பேர்வரை இறந்தோ அல்லது காயமடைந்தோ இருக்கலாமென அஞ்சப்படுகிறது.

சிரியாவின் இத்தாக்குதலை அரபுத் தலைவர்கள் கண்டித்தனர். அமெரிக்க வெளியுறவு அமைச்சர். பிரித்தானிய வெளியுறவுக் காரியதரிசி சேர் அலெக்ஸ் கியூம் ஆகியோரில் கண்டித்துள்ளனர். ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் நாசரும், பாலஸ்தீன விடுதலை இயக்க கொமாண்டோக்களின் தலைவர் அரபாத்தும் விடுத்த வேண்டுகோளை ஜோர்டானியக் கொமாண்டோக்கள் நிராகரித்துவிட்டனர்.

அம்மானுக்கு 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ள றம்சா நகர் தம்வசம் இருப்பதாகவும், தங்களுக்கு சிரியாஇராணுவத்தின்உதவி கிடைக்குமெனவும் பாலஸ்தீன விடுதலை இராணுவம் இன்று பக்தாத் வானெலி மூலம் அறிவித்தது.

இப்பிரச்னையில் வேறுநாடுகள் பிரவேசித்தால், போர் நிலை மாறுவதோடு போரை விரிவுபடுத்துமென சிரியாவின் அதிபர் அடார் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஜோர்டானில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலைக்குத் தீர்வு காண அரபு நாடுகளின் தலைவர்களை உதவுமாறு ஜோர்டானிய மன்னர் ஹுசேன் அம்மான் வானெலி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜோர்டானில் ஏற்பட்டுள்ளகுழப்பநிலையை ஆராய பதினன்கு அரபு நாடுகளின் மகாநாடு நாளை கூடவிருக்கிறது. போர் முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிந்தெட்டிக்' புடவைகளில் புதிய தயாரிப்புகளின் அவதாரத்தைப் பெருமையுடன் அறியத் தருகிறோம்

## சீமா CEYMA SAREES சாறீஸ்

**நவீன முறையில் நங்கையர் இதுவரை அறிந்த டிசைன்களில் சிறந்தவையாக விளங்கியவற்றிலும் சிறப்புமிக்க உற்பத்திகள்!**

சகல சில்லறை வியாபாரிகளும் தங்கள் மொத்தத் தேவைகளுக்கு பின்வரும் அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்

★ கொழும்பு:-

1. றஞ்ஜனு ஸ்ரோர்ஸ், 52, பாங்ஷோல் வீதி.
2. எஸ்.பி. பெரியண்ணபிள்ளை அன் கோ, 180, 2-ம் குறுக்குத் தெரு.
3. கர்னுட் ரெக்ஸ்ரைல்ஸ், 164, கெய்ஸர் வீதி.
4. ஜனதா ரெக்ஸ்ரைல்ஸ், 182, கெய்ஸர் வீதி.

★ யாழ்ப்பாணம்:-

சாறி எம்போறியம், 124, கே. கே. எஸ். வீதி.

★ பதுளை:-

ஆர். வைத்தியலிங்கம் லிமிட். 40, பெரியகடை வீதி.

★ பண்டாரவளை:-

எஸ். கோபாலபிள்ளை அன் கோ. 146, பிரதானவீதி.

★ குருநாகல்:-

கண்டி ஸ்ரோர்ஸ், 65, பெரியகடை வீதி.

உற்பத்தியாளர்கள்:-

## சீமா சில்க் இன்டஸ்றீஸ் லிமிட்.,

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தந்தி: "சீமாசில்க்" தொலைபேசி : 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களை பாரிஸ் மகாநாடு அழைக்கவில்லை

[ நமது விசேஷ நிருபர் ]

பாரிஸ் நகரிலே சென்ற ஜூலை மாதம் 15-ந் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டதைப்பற்றி பலபல தப்பெண்ணங்கள் நிலவுகின்றன. இதைப் பற்றி விஷயமறிந்த வட்டாரங்களில் விசாரித்ததில் சில உண்மைகள் தெரியவந்தன.

தமிழ் நாட்டிலிருந்து நான்குபேர்களுக்குமட்டுமே தலைவரான பேராசிரியர் ஜீன் பிலியோஸா அழைப்புகள் அனுப்பியிருந்தார். அதாவது சென்னையில் நடைபெற்ற இரண்டாவது ஆராய்ச்சி மகாநாட்டு அமைப்பாளர் திரு. ஏ சுப்பையா, பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம், சென்னை ஹைகோர்ட் நீதிபதி எஸ். மகாராஜன், புதைபொருள் ஆராய்ச்சித்துறை டைரக்டர் திரு. ஆர் நாகசாமி இவர்கள் நால்வருக்கும் விமானத்தில் (சிக்கன) வகுப்பு 'ரிட்டர்ன் டிக்கெட்டுகள்' அனுப்பப் பெற்றன. இவர்கள் நால்வரையும் தெரிவுசெய்ததும் தலைவரான பேராசிரியர் பிலியோஸாதான்.

இவர்களைத்தவிரவேறு ஐவர் பெயர்களையும் குறிப்பிட்டு அவர்களை தமிழ்நாட்டு அரசாங்கம் தன் சொந்தப் பொறுப்பில் அனுப்பிவைக்கலாமென்று தலைவர் பிலியோஸா கேட்டிருந்தார். அதாவது சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் சுந்தரவடிவேலு. திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார், பேராசிரியர் டாக்டர் வரதராசன், மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தரான பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் இவர்கள் உள்ளிட்டு 12 பெயர்களை தமிழ்நாடு அரசாங்கம் மகாநாட்டுக்கு அனுப்பிவைக்கலாமென்றும் கேட்டிருந்தார்கள்.

தமிழ்நாட்டு அரசாங்கம் மேற்குறித்த ஐவர் உள்

## யாரார் வருவரென்ற பெயர் விவரமும் முன்கூட்டித் தெரியாதாம்

ளிட்டு 12 பெயர்களையும். தன் சொந்தச் செலவில் பாரிஸ் மகாநாட்டுக்கு அனுப்பிவைத்தது. அவர்களுக்கெல்லாம் முதல்வகுப்பு டிக்கெட்டை தமிழகஅரசு, இந்திய அரசின் அனுமதியுடன் வழங்கியதுடன் ஆளுக்கு நாளொன்றுக்கு 7 பவுண் வீதம் 10 நாட்களுக்கு 70 பவுண் பணமும் கொடுத்திருந்தது. தமிழக நிதிஅமைச்சர் மதியழகன் தலைமையில் திருவாளர்கள் கி. வா. ஜகந்நாதன், எம். பி. சிவஞான கிராமணியார், முதலியவர்கள் இக்கோஷ்டியில் இருந்தனர். இவர்களின் பெயர் விவரங்கள் மகாநாட்டு நிர்வாகிகளுக்கு முன் கூட்டி தெரிவிக்கப்படவில்லை

துணைவேந்தர்கள் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர் இவர்களே தமிழகத்திலிருந்து வருவரென்று எதிர்பார்க்கப்பட்டது. அரசியல் வாதிகள் யாரும் வருவரென்று மாநாட்டு நிர்வாகிகள் எதிர்பார்க்கவில்லை.

தமிழக முதல் அமைச்சர் திரு. கருணாநிதி இம்மகாநாட்டுக்கு வருவதாக முன்கூட்டி தெரிவிக்கவில்லை. அமைச்சர் நெடுஞ்செழியன் அல்லது அமைச்சர் மதியழகன் தமிழகக் குழுவின் தலைவராகச் செல்லலாமென்று கருதப்பட்டது. ஆனல் திரு. கருணாநிதி இல்லாத காலத்தில் முதல் அமைச்சர் பதவியை திரு. நெடுஞ்செழியன் பொறுப்பேற்கவேண்டி ஏற்பட்டதால் திரு. மதியழகன், அக்கோஷ்டிக்கு தலைமை வகித்து வந்ததாகத்தெரிகிறது. அவர் முன்னறிவித்தல் எதுவுமின்றி தமது பேச்சொன்றைத் தமிழில் அச்சடித்துக்கொண்டு வந்தார். அவர் புறப்பட்டுவருமுன் தமிழகத்திலே அவரது படத்துடன் கூடிய சுவரொட்டிகள் பல "சென்று வருக, வென்று வருக" என்று பல ஊர்களிலும் அரசியல் பிரசாரம் போல் ஒட்டப்பட்டிருந்தனவாம். உண்மையில் அவருக்கோ, அல்லது வேறு தமிழக அமைச்சருக்கோ தனிப்பட்ட முறையில் மகாநாட்டினர் அழைப்பு அனுப்பவில்லை. அவர்களிடமிருந்து எவ்வித கட்டுரையும் கேட்கவில்லை அவ்வித கட்டுரைகளைப் படிக்க மகாநாட்டிலே முன்னேற்பாடு எதுவும் செய்யவுமில்லை.

லண்டனில்கண் சிகிச்சைக்காகச் சென்றிருந்த முதல் அமைச்சர் கருணாநிதி மகாநாடு ஆரம்பமான நாளன்று பேசினர். தன் கண்ணைவிட தமிழ் முக்கியமானதென்று தாம் கருதியதாயும், அதனலேயே டாக்டர்கள் யோசனையையும்மீறி இம் மகாநாட்டுக்குவந்ததாகவும் குறிப்பிட்டார்.

அவர் இம்மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார்என்று கூறுவது அவ்வளவு சரியல்ல. முதலில் பிரதிநிதிகள் எல்லாரையும் தலைவர் பிலியோஸா வரவேற்றுப் பேசினர். அடுத்தபடி யுனெஸ்கோ பதில்தலைவர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா பேசினர். பிறகுதான் கருணாநிதி பேசினர் தாமும்பேசவேண்டுமென்றும் தாம் தமிழில் தம் பிரசங்கத்தை ஏற்கனவே அச்சிட்டுவதுள்ளதாகவும் அமைச்சர் மதியழகன் சுமார் முக்கால் மணி நேரம் தலைவருடன் வாதித்தார். திரு. சுப்பையாவும் அங்கிருந்தார். நிகழ்ச்சி நிரலில் அவர் பெயரில்லை. என்றாலும் அவர் வற்புறுத்திய தன் காரணமாக அவர் பெயரும் சேர்க்கப்பட்டது.

புதுச்சேரி முதல் அமைச்சர் பரூக் மரைக்காயரும் தன் பொறுப்பிலேயே பாரிசுக்கு வந்திருந்தார் புதுச்சேரியில் பிரஞ்சு ஆட்சி நடைபெற்றதால் தமக்கும் அம்மகாநாட்டில ஆரம்ப நாளில்பேச அனுமதி வேண்டுமென்று அவரும் வாதாடினர். தாமும் தம் பேச்சை தமிழில் அச்சிட்டு வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

என்றாலும் முதல் நாளன்று மகாநாட்டில்பேச அவருக்கு அனுமதி தரப்படவில்லை. கடைசி நாளன்றே அவருக்குப்பத்து நிமிடம் கொடுக்கப்பட்டது. அப்போதுதான் அவர் தமது பேச்சைப் படித்தார்.

இம்மகாநாட்டின் அடிப்படை நோக்கம் தமிழைப் பற்றி பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்வதுதான்.

ஆராய்ச்சியாளரைத் தவிர அரசியல்வாதிகளுககு அதில் இடமில்லை என்றாலும் சில அரசியல்வாதிகள் தமிழ் நாட்டிலிருந்து தங்கள் சொந்தப் பிரசாரத்துக்காக தாங்களே தங்களை அழைத்துக்கொண்டு வந்தது மாநாட்டு நிர்வாகிகளுக்குத் திகைப்பை அளித்தது.

அவர்கள் தங்கள் பேச்சை முன்சம்மதம் பெறாமல் அச்சிட்டுக் கொண்டு வந்ததும் சரியல்ல. புதுச்சேரி முதல் அமைச்சர் அம் மகாநாட்டின் கடைசிநாளன்று தாம் அச்சிட்டு வந்த பேச்சைப் படித்தாரென்றால் அதற்கான பொறுப்பு மாநாட்டு நிர்வாகிகளைச் சேராது.

அதில் எவ்வித ஆராய்ச்சியும் இல்லை ஏதோ பிரான்சிடம் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் புதுச்சேரியின் முதல் அமைச்சர் வற்புறுத்திக் கேட்கிறாரே என்று தாட்சண்யத்தின் பேரிலேயே இது அனுமதிக்கப்பட்டதாகவும் அவரது பேச்சை ஆராய்ச்சிக்காக மாநாட்டினர் எடுக்கவில்லையென்றும் பொறுப்புள்ளவர்கள் மூலம் அறியப்படுகின்றது.

உலகப் பிரசித்தி பெற்ற ஆசிரியர்களின்
நாவல்கள், சிறுகதைகள், நவீனங்கள்
என்பவற்றை
குறைந்த செலவில் எடுத்து வாசிப்பதற்கு
சிறந்ததோர் ஸ்தாபனம
'சிவானந்தாஸ்'
LENDING LIBRARY
இன்றே விஜயம் செய்யுங்கள்,
'சிவானந்தாஸ்'
49, 51 பிரதானவீதி, யாழ்ப்பாணம்
தலைமைக் காரியாலயம்: 'பொகுமால்ஸ்'

"தாய்க்கு அது தெரியும்!"

குழந்தைகளுக்கு, 18 மாத வயதாகிவிட்டால்,
பெரிய எண்ணம் பிறந்துவிடுகிறது. குளிப்பாட்டியவுடனே,
மொறிசன் பேபி கொலோன் தாராளமாகத் தடவி
புழுக்கத்தையும் படபடப்பையும் நீக்கிவிடுவதால்
குழந்தை நளினிக்குத் தாய்மேல் கொள்ள ஆசை.
அம்மா கெட்டிக்காரி! குழந்தைகளுக்கான மொறிசன்
உற்பத்திப் பொருள்கள் தூய்மையானவை,
மெத்தென்றிருப்பவை, பணிவிணக்கம் மிகுந்தவை,
நியாயமான விலைக்குக் கிடைப்பவை என்பதெல்லாம்
தாய்க்குத் தெரியும். நளினி, எவ்வளவு புத்துணர்ச்சியும்
நறுமணமும் பெற்று பொலிவுடன் விளங்குகின்றாள்.




மேம்பாடு மிக்க தாயாக விளங்குவதற்கு
உங்கள் குழந்தைகளுக்கு
மொரிசன்
பேபி கொலோன்
உபயோகியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை வாழையில் பத்தாயிரம் ரூபா

## தமிழ்நாடு பெறும் வருமானம் நம் நாட்டில் முடியாதா ?

**பச்சை வாழையில் பத்தாயிரம் ரூபாய் இலாபம் கிடைக்கிறதென்பதை இக்கட்டுரை தெரிவிக்கிறது. தமிழ்நாட்டில் பெருமளவில் உற்பத்திசெய்யப்படும் இந்தரக வாழை இலங்கையில் உற்பத்திசெய்ய முடியாதா? யாழ்ப்பாணப் பகுதியில் பல்ரக, வாழைகள் உற்பத்தியாகின்றன. பச்சைவாழையையும் பரீட்சித்துப் பார்க்க இக்கட்டுரை விவசாயிகளுக்கு உதவும்.- ஆ-ர்.**

"பச்சை வாழைப் பயிர் செய்து ஓர் ஏக்கரில் ஓர் ஆண்டில் ரூ. 10,000 ஆதாயம் அடைவதா? எப்படி முடியும்? நம்ப இயலவில்லையே?" என்று தான் கேள்விகள் கேட்கத்தோன்றும்.

ஆனால் இது முற்றிலும் உண்மை, மா, பலா, ஆரஞ்சு, ஆப்பிள் போன்ற கனி இனங்களைப் பயிரிட்டு பலனையடையப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலையில், ஒரே ஆண்டில் பச்சை வாழையைப் பயிரிடுக் காய்களையும், கனிகளையும் பெருமளவில்பெற்று மிகுந்த ஆதாயம் அடையலாம்.

பச்சை வாழை குள்ளமாக இருப்பதால் பெருங்காற்றினால் கூட பாதிக்கப்படுவதில்லை மூங்கில் கழிகளைக் கொண்டு கட்டவேண்டுவதில்லை குறைந்த இடைவெளி போதுமானதாதலின. அதிகக் கன்றுகளை நட வாய்ப்புள்ளது.

பச்சை வாழை பயிரிடுவோருக்கு எவ்விதபொருள் இழப்பும் ஏற்படுவதில்லை தாறுகள் பெருத்ததாக, அதிக சீப்புகளுடன் நிறையப் பழங்களுடனிருப்பதால் அவற்றைக் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து, நெடுந்தூரமுள்ள இடங்களுக்கும், பிற நாடுகளுக்கும் எளிதாக அனுப்பலாம்.

உழவர்கள் பச்சை வாழையைப் பயிரிடுவதற்குப் பெரிதும் விரும்புகின்றனர். இப்பழங்கள் மிக ருசியாகவும் இனிப்பாகவும் உள்ளதால், மக்கள் பெரிதும் விரும்பி உண்கின்றனர். பழங்களின் அளவு, நீளம், உருவம், எடை, தோலின் தன்மை, நிறம், சதைப் பற்றின் தன்மை, மணம் ருசி ஆகியவற்றில் இது ஓர் உயர் இடத்தைப் பெறுவதால் ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளில் வாழும் மக்கள் பச்சை வாழைப்பழங்களை மிக விரும்பி பெருமளவில உண்கின்றனர்.

### பயிரிடுவது எவ்வாறு?

பச்சை வாழையைப் பயிரிடுவது எவ்வாறு என்பதை இனிக் காண்போம்.

நிலத்தைச் செவ்வையாக உழுது கரைகளைச் செம்மைப்படுத்தி, சுற்றுக்கால் வெட்டி ஏக்கருக்கு 50வண்டி தொழு உரம் அல்லது நன்கு மக்கிய கலவையுரமிட்டு நிலத்தைப் பக்குவப்படுத்த வேண்டும்.

1 1/2 அடிக்கு 1 1/2 அடி என்ற பரப்பில் 1 1/2 அடி ஆழக் குழிகளைத் தோண்டுதல் வேண்டும். ஒன்றுக்கொன்று 6 அடி இடைவெளியில் ஒரு கன்று நட்ட பின்னர், அதன் பக்கத்தில் 9 அங்குல இடைவெளியில் மற்றொரு கன்று வீதம் கன்றுகளை நடவேண்டும். இம்முறையைத் தழுவிக் கன்றுகளை நடுகையில், ஓர் ஏக்கருக்கு 2,400 கன்றுகள் தேவைப்படும். அஃதாவது, ஒற்றை வாழைச் சாகுபடியில் ஓர் ஏக்கருக்குத் தேவைப்படும் கன்றுகளின் எண்ணிக்கையை விட இஃது இரண்டு பங்காகும்.

### எப்போது பயிரிட வேண்டும்?

குள்ளக்காவண்டிஸ் என்று அழைக்கப் பெறும் இப்பச்சை வாழையை ஆடித் திங்களிலிருந்து தைத் திங்கள் வரையில் தோட்டக் காலிலும், நஞ்செய்யிலும் பயிரிடலாம் நோய்வாய்ப் படாத தாய் மரங்களிலிருந்து 3 அல்லது 4 திங்கள் வயதுடைய ஈட்டிக்கன்றுகளாகத் தேர்ந்தெடுத்து. பிரித்தெடுத்து ஒரு வாரத்திற்குள் அவற்றை நடவேண்டும் கன்றுகளை நடுதற்கு முன்னர். அவற்றை 01 வீதம் கரையும் செரசானில் நனைத்து நடுதல் மிக அவசியம் இவ்வாறு செய்வதால்,

[15ம் பக்கம் பார்க்க]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிர் ஒரு தூசு!

குமார் தனபால்

எனக்கு உயிர் ஒரு தூசு! மணலில் உட்கார்ந்துவிட்டு எழுந்தவன்தன்உடையில் ஒட்டியிருக்கும் மண்ணைத் தட்டிக்கொட்டிவிட்டு நடப்பதைப் போல் - இந்த உலகத்தோடு ஒட்டியுள்ள சகல உறவு முறைகளையும் என் வீட்டுப் படலையுடன் உதறித்தட்டிவிட்டு, தெருவில் இறங்கிநடந்தேன்.

மதிய வெய்யில் சுள்ளென உடலைத்தகித்தது. தார் றோட்டு உருகி அடிப்பாதங்களில் ஒட்டி இழுபட்டது. அடடா, செருப்பைப் போடாமல் வந்துவிட்டேனே!

உயிரையே ஒரு தூசாக மதித்துப் புறப்பட்டுவிட்ட எனக்கு செருப்பும்குடையும் எதற்கு? மழையென்ன- வெய்யில்என்ன- சூடென்ன- குளிரென்ன? எல்லாமே எனக்கு ஒன்றுதான்!

நான் உழைக்கத்தெரியாதவனும்- வேலைக்குப் போகாமல் வெட்டிச் சோறுதின்று உடம்பை வளர்க்கும் சோம்பேறியாம்! என் தந்தையே என்னை இப்படி ஏசிவிட்டபோது...உயிர் எனக்கு ஒரு தூசுதான்! ரோசநரம்பே எனக்கு இல்லையா...?

கைக்கடிகாரத்தைப்பார்த்தேன்-மணி பன்னிரண்டு! கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி யாழ்தேவி வருவதற்கு இன்னும் ஒன்றரை மணிநேரம்தான்இருக்கிறது. அதற்குள் ரெம்பின் றோட்டில் இருக்கும் அந்தக் கதவுகள் இல்லாத றயில் பாதைக்குறுக்குக்குச்சென்றுவிடவேண்டும். ஆள்நடமாட்டம் அதிகம் இல்லாததகுந்த இடம் அதுதான்! இதற்கு முன்பும் அந்த இடத்தில் இரண்டுபேர்கள் தங்கள் உயிரைத் தூசாக மதித்து பாய்ந்து பரலோகம்சென்றிருக்கிறார்கள். இப்போது நான் மூன்றாவது ஆள்!

நல்லூர்ச் சந்தியால் திரும்பி ரெம்பின் றோட்டில் கால்வைக்கும்போது, கோவிலின் பன்னிரண்டு மணிப் பூஜைக்கான மேள, தாள ஓசை என் காதில்விழுகிறது. நான் நாள்தோறும்பயபக்தியுடன் தரிசனம் செய்யும் கோயில்அது-ஆனால்இன்று... மரியாதைக்காகக்கூட கோவில் பக்கமும் திரும்பாமல் ரெம்பின் றோட்டில் அலட்சியமாக நடந்தேன் உயிர் எனக்கொரு தூசாகிவிட்டபோது கடவுளென்ன-கத்தரிக்காயென்ன! எல்லாமே எனக்கு ஒன்றுதான். என்னுடைய பக்திக்கு அந்த நல்லூரான் நன்றிசெலுத்தியிருந்தால்... பறந்துவரும் யாழ்தேவியின் முன் குபீரெனப் பாய்ந்து என் உடலைத் துண்டு துண்டாக்கும் இறைச்சிக்கடை வேலைக்கு நானே துணிந்து ஈடுபடுவேனா?

இன்று என் உயிரைத் தடுத்தாட்கொள்ள அந்த நல்லூரானாலும் முடியவே முடியாது. என் உயிரை ஒரு தூசாக மதித்து நான் தான் முடிவான முடிவுக்கு வந்துவிட்டேனே!

தெருவில் எதிர்ப்படும் மனித முகங்களையெல்லாம் பயித்தியக்காரனைப்போல் உற்று.உற்றுப் பார்க்கிறேன். ''அட, மனித ஜென்மங்களே! நீங்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து அப்படி எதைத்தான் சாதிக்கப்போகிறீர்கள்? சாவுக்குப் பயப்படுகிறீர்கள் - துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறீர்கள்-வெறும் கடுதாசித்துண்டாலான பணத்துக்கு உயிருக்கும் மேலான மதிப்புக் கொடுக்கிறீர்களே! என்னைப் போல் உயிரை ஒரு தூசாக மதியுங்கள்!''

இப்படி நடுவீதியில் நின்று தொண்டை கிழியக் கத்த வேண்டும்போல் இருக்கிறது. இரண்டு காதுகள் படைத்த இந்த மனித ஜென்மங்களுக்கு எந்தப்பக்கத்தில் நின்று கத்தினாலும் அது மறுபக்கத்தால் வெளிச் சென்றுவிடுமே...! மௌனமாக நடக்கிறேன்.

''என்ன மச்சான், வெய்யிலுக்கை, வலு ஆறுதலாக... எங்கைபயணம்?''-என் நண்பன் சோமசேகரன் தன் வீட்டு வாசலில் நின்றுகேட்கிறான்.

''ஓமடா... நான் பயணம் தான் போகிறேன். திரும்ப முடியாத பயணம்! யாராலுமே திருப்பமுடியாத பயணம் தான் போகிறேன்''- இப்படி முணுமுணுத்துக் கொண்டு அவனைக் கடந்து அப்பால் நடந்தேன் எப்பவும் நான் இப்படித்தான் ஏதாவது குதர்க்கமாகப் பதில் சொல்வது அவனுக்குக் கேட்டுப்பழகிப்போன ஒன்று. அவன் சிரித்தபடி என்னைப்பார்க்கிறான்.

இப்போது சிரிக்காதே! இன்னும் சிறிது நேரத்தில் உயிரை ஒரு தூசாக மதித்து நான் செய்யப்போகும் தீரச் செயலை எண்ணிப் பிறகு சிரி- இல்லை அழு! எல்லாமே எனக்கு ஒன்றுதான்

நேரம் பன்னிரண்டு முப்பது.

இன்னும் ஒரு மணித்தியாலம்தான் இருக்கிறது. ஆள் கொல்லி யாழ்தேவி முன் நான் பாய்ந்து என் உயிரை மாய்த்துக்கொள்வதற்கு- அதன் பிறகு...? கைவேறு... கால் வேறு... குடல், மூளை எல்லாம் சிதறி... கோழி குப்பையைக் கிளறிவிட்டதைப்போல், என் உடலை யாழ்தேவி என்னும் அந்த இராட்சதரதம் கிளறிவிடப் போகிறது.

நடக்கிறேன்!

ஸ்...என்ன வெய்யில்!... என்ன புழுக்கம்...! உச்சி மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறதே! றோட்டில் கால் வைக்க முடியாமல் கொதிக்கிறதே! வீதியை விட்டு எட்டிப் பாய்ந்து வேலி ஓரமாக நடக்கிறேன் வாழ்க்கையின் ஓரத்துக்கே வந்து, தற்கொலை செய்யவே துணிந்துவிட்டபோது, எந்த ஓரத்தால் நடந்தாலென்ன?

இப்போது கைலாச பிள்ளையார் கோவிலை நெருங்கி சொக்கனின் தேநீர்க் கடைக்கு முன்னால் சற்று நின்றேன். சுத்தமான தேங்காய் எண்ணையில் கடலை வடை பொரியும் மணம் என் மூக்கைத் துளைக்க,அந்த மூன்று சதத்து வடையின் ருசியில் என் நா ஊறித் திளைத்து... சே! உமிழ் நீரையல்லவா சுரக்கச் செய்கிறது! சுரந்த நீரை முண்டி விழுங்கினேன்.

சாகத்துணிந்து தற்கொலை செய்யப் போய்க்கொண்டிருக்கும் என் ஆத்மா, கேவலம் சொக்கனின் இந்த மூன்று சதத்து வடைக்கு ஆசைப்படுகிறதே! வயிறு கடிக்கிறது-ஆத்மா ஆசைப்படுகிறது. என்ன செய்யலாம்?... சிறையில் தூக்குத் தண்டனை நிறைவேறிய நபருக்கு கடைசி நேரத்தில் அவன் விரும்பும் ஆகாரத்தைச் சுவைக்கக் கொடுப்பார்களாம். இன்னும் ஒரே ஒரு மணித்தியாலத்தில் மறைந்து, இறைச்சித்துண்டுகளாகச் சிதறப்போகும் உயிரில் ஒட்டியிருக்கும் இந்த நாக்கு, வடைக்கு ஏங்குகிறதே...! அதன் ஆசையைத் தான் நிறைவேற்றிவிடுவோமே, இல்லாவிட்டால் நான் இறந்ததும் மூன்று சதத்துக்கடலை வடைக்காக என் ஆவி சொக்கனின் கடையை அல்லவா சுற்றத் தொடங்கிவிடும்.

சொக்கனின் கடைக்குள் நுழைந்தேன். எட்டுக்கடலை வடை, ஒரு 'பிளேன்ரீ', ஒரு 'போர் ஏசஸ்!' அப்பா வயிறு நிறைந்த சுகம்! அட. உயிரை ஒரு தூசாக மதித்துப் புறப்பட்டு விட்டநான் இந்த அற்ப சுகத்தில் திளைத்து விட்டேனே!

சட்டைப்பையில் கையை விட்டு இழுத்தேன். ஒரே ஒரு இரண்டு ரூபாய்த்தாள் வெளியே வந்தது. அலட்சியமாக மேசையில் ரூபாயை எறிந்துவிட்டு அவசரமாகக் கடையைவிட்டு இறங்கி நடந்தேன்.

'தம்பி... மிச்சக்காசு வேண்டாமப் போறீர்!' கடைக்காரனின் குரல் பின்னால் ஒலிக்கிறது. சாவையே ஒரு தூசாக மதித்துப் புறப்பட்ட எனக்கு... மிச்சமும் சொச்சமும். கேட்காதவனைப்போல் விறுவிறுவென நடந்து பிள்ளையார் கோவில் சந்தியைக் கடந்தேன்.

என் மதிப்பிற்குரிய அண்ணரின் வீடு வீதியில் நின்றபடி அவர் வீட்டை எட்டிப் பார்த்தேன் அவர் வீட்டில் இருக்கும் அறிகுறி தெரியவில்லை.

'அண்ணை, எனக்கு வாழ்க்கை வெறுத்துப்போச்சு. நான் தற்கொலை செய்யப் போறன்' —என்று ஒருநாள் நான் அவரிடம் சொன்னபோது,

'வேலைக்குப்போய் உழைக்க முடியாதவனும் கடும் வியாதியால் பீடிக்கப்பட்டவனும் ஒரே மாதிரித்தான். இருவராலும் இந்த உலகத்தில் ஒன்றுமே சாதிக்க முடியாது. முயற்சி செய்து கூலி வேலைக்காவதுபோய் உழைத்து முன்னேற வழியைப் பார். அதைவிட்டு முட்டாள்தனமாக தற்கொலை செய்து கொண்டால்... கோழை. கோழை! நீயொரு கோழை!...' இப்படிச் சொல்லி என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாரே!

'கோழையா? முட்டாளா? நானா? இப்போது உயிரையே தூசாக மதித்துவிட்ட வீரனல்லவா? இன்னும் ஒரு மணித்தியாலத்தில் நான் வீரனா —தீரனா— கோழையா என் பதை அவரே தெரிந்துகொள்ளட்டும்.

நடக்கிறேன்! நடக்கிறேன்.

நேரம் ஒன்றேகால்! இன்னும் கால்மணி நேரம்தான். அதோ ... அந்தக் கதவுகள் இல்லாத ரயில்பாதைக்குறுக்கும் நெருங்கிவிட்டது. யாழ்தேவியின் உறுமல் தூரத்தில் கேட்கிறது. இனிஎன்ன... அருகில் வந்ததும் திடீரெனப் பாயவேண்டியது தான். சற்றுமுற்றும் பார்த்தேன், ஆள் நடமாட்டம் அதிகம் இல்லை.

இப்போது எனக்குப் பின்னால் சிங்கம்போல் ஏதோ உறுமுகிறதே! திரும்பிப் பார்த்தேன். இதென்ன இதென்ன! நாயா? மாடா? எந்தப்பெரிய அல்சேஷன் நாய்! அது ஏன் என்னைப் பார்த்து உறுமுகிறது!? சே! உயிரையே ஒருதூசாக மதித்துவிட்டநான் இந்தநாயின் உறுமலுக்குப் பயப்படுவதா?

அதோ ...... யாழ்தேவியும் பேரிரைச்சலுடன் நெருங்கிக்கொண்டிருக்கிறது. வேட்டியை மடித்துக் கட்டிடித் தயாராக நின்றேன்.

'ளொள் ...... ளொள் ...... ளொள் ...!' அட சனிப்பிடித்த அலுகோசன் நாயே! நீயேன் இந்தநேரத்தில் என்னைப்பார்த்துக் குலைக்கிறாய்? ஐயையோ ... குரைத்தபடி என்னை நோக்கியல்லவா வருகிறது! ....

'சூ—ய்... அடிக், அடி''- நான் விலகி நடந்தேன். அது குரைத்தபடி என்னைத் துரத்துகிறதே!

'ளொள்...ளொள்...!'

'நாயைப்பிடியுங்கோ... நாயைப்பிடியுங்கோ...! நான் தொண்டை கிழியக் கத்திக்கொண்டு தெருவில் ஏறி ஓடுகிறேன்,

குடல்தெறிக்கும் வேகம்!

எப்படியோ ஓடிவந்து, இரைக்க, இரைக்க சொக்கன் கடைக்குள் புகுந்துகொண்டு எட்டிப் பார்த்தேன். என்னைத் துரத்திக்கொண்டுவந்த அல்ஷேசன் நாயைக் காணவில்லை.

யாழ்தேவி இரைந்துகொண்டு அந்த றயில்கடவையைக் கடந்து சென்றுவிட்டது.

உயிரையே ஒருதூசாகமதித்து யாழ்தேவிமுன் பாய்ந்து, என் உயிரையே மாய்த்துக்கொள்ள வந்த என் திட்

(12-ம் பக்கம் பார்க்க)

படிப்பினைக் கதை

# நீல நரி அரசன்

வி. என். பி.

கோதாவரி நதிக்கரையிலுள்ள வேழவாரண்யம் என்னும் காட்டில் சம்புகேஸ்வரன் என்ற நரி வாழ்ந்து வந்தது அதற்கு நரிகளின் இயல்பான குள்ளப் புத்தியுடன்கூடக் கொஞ்சம் தைரியமுமிருந்தது.

இராத்திரி வேளையில் அது காட்டுக்கு வெளியேயுள்ள கிராமத்தில் நுழைந்து ஒவ்வொருவீடாக ஆராய்ந்து அகப்பட்ட தின்பண்டங்களை திருடித் தின்று வந்தது ஒருநாள் அது நீலம் காய்ச்சும் ஒரு வீட்டுக்குள் புகுந்து திருட முயன்றபோது நீலச் சாலுக்குள் தவறி விழுந்துவிட்டது. அதன் உடம்பு முழுவதும் நீலச்சாயம் தோய்ந்து அதன்நிறம் நீலமாகிவிட்டது

அடுத்தநாள் காலை அது காட்டுக்குப் போனபோது மற்ற மிருகங்கள் எல்லாம் அதை அச்சத்தோடும் ஆச்சரியத்தோடும் நோக்கி 'ஓஹோ, இது ஏதோ பொல்லாத பராக்கிரமம் வாய்ந்த மிருகம்போலும்' என்றெண்ணி நரியைத் தங்கள் அரசனாக்கிக் கொண்டன. சம்புகேஸ்வரனுக்கு இந்த ஏற்பாடு பரமசந்தோஷம் அளித்ததென்று கூறத்தேவையில்லை

அரசன் என்ற முறையில் ஒவ்வொருநாளும் மாலையில் நரி மற்ற மிருகங்கள் எல்லாவற்றையும்கூட்டி ஆலோசனை தர்பார் நடத்த வேண்டும். இந்நேரத்தில் நரிகள் எல்லாமே ஊளையிடுவது இயல்பு. சம்புகேஸ்வரனுக்கு அவைகளோடு சேர்ந்து ஊளையிடாமல் இருக்கமுடியவில்லை. இதை மற்ற மிருகங்கள் அறிந்துகொள்ளப்படாதென்பதற்காக தர்பாரின் முதல்வரிசையில் நரிக்கூட்டமும், அதற்குப் பின்னால் ஓநாய்களும். அடுத்து மான்கள், கரடிகள், புலிகள், சிங்கங்கள், யானைகள் முதலியனவும் நிற்கவேண்டுமென்று நீலநரி ஆக்ஞாபித்தது. மற்ற மிருகங்கள் யாவும் நரியரசனுக்கு கைகட்டி' வாய்புதைத்து நின்று சேவகம் புரிந்தன.

இப்படி இருந்துவரும் காலத்தில் சில நாட்கள் செல்ல மற்ற நரிகளுக்கு சம்புகேஸ்வரனின் இரகசியம் தெரிந்துவிட்டது. அவை அதைப் பரிகசித்து அவமதிக்க ஆரம்பித்தன. சம்புவுக்கும் அதிகாரப்பித்து தலைக்கேறிவிடவே நரிக்கூட்டங்களைத் தனது ஆலோசனை தர்பாருக்கு வராவண்ணம் தடுத்துவிட்டது!

மறுதினம் மாலைப்பொழுதில் வழக்கம்போல ஆலோசனை தர்பார் [illegible] நரி அக்கிராசனம் வகித்தது' கூட்டத்தில் பலவிதமான பிரச்னைகள் ஆராயப்பட்டன, திடீரென்று வெளியேயுள்ள காட்டிலிருந்து 'கீயோ மாயோ' என்று பெரிய அவலமான ஊளைச் சத்தம் கிளம்பியது. அந்திநேரத்தில் நரிகளுக்கு ஊளையிடாமல் இருக்க முடியாது. சம்புகேஸ்வரனால் வெளியேற்றப்பட்ட நரிக்கூட்டம் காட்டில் கச்சேரி ஆரம்பித்துவிட்டது.

சம்புகேஸ்வரன் சற்று நேரம் மனதை அடக்கிப் பார்த்தது. முடியவில்லை. அரசனென்றாலும் நரி நரிதானே! குலவழக்கத்தை அதனால் நிறுத்த முடியவில்லை. சட்டென்று தானும் வாயைப் பிளந்து கொண்டு ஓவென்று ஓலமிட்டு ஊளையிடத் தொடங்கியது. மிருகங்களுக்கு அப்பொழுதுதான் நீலநரியின் குட்டு வெளிப்பட்டது.

தாங்கள் இத்தனைநாளும் கேவலம் ஒரு நரிக்கல்லவா அடிமைச் சேவகம் புரிந்தோம் என்ற எண்ணத்தினால் வெட்கம் மேலிட, தாங்கமுடியாத கோபத்தில் எல்லாமாக ஒன்றுசேர்ந்து சம்புகேஸ்வரனைத் தும்பு தும்பாகக் கிழித்தெறிந்தன.

[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## 'நான் எனும் அகந்தை வேண்டாம்'

உலகப் பிரசித்திபெற்ற அமெரிக்க நீக்கிரோவப் பாடகி மாரியன் அன்டெர்ஸன் தன்னைப் பற்றிப் பேசும்போது 'நான்' என்பதை விடுத்து எப்பொழுதும் 'நாங்கள்' என்று பன்மையிலே பேசுவார். இதைப்பற்றிக் கேட்டபோது அவர் சொல்வார்: 'வயது செல்லச்செல்ல ஒருவருக்கு தம்மாலே தனித்து ஒரு காரியத்தைச் செய்ய முடியாதென்ற உண்மை புலனாகிறது. நாங்கள் செய்யும் தொழிலில் பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்: பாட்டு எழுதுபவர், அதற்கு இசைஅமைப்பவர், பியானோ பக்கவாத்தியக்காரர், பியானோவை செய்தவர் இப்படிப் பலர். ஏன், எங்கள் குரல், மூச்சு, உச்சரிப்பு-இவையெல்லாம் எங்கள் வயதால் உண்டானவையல்ல. ஆகையால் இவற்றால் 'நான்' என்பது மிகமிக அற்பமான ஒரு பொருள்.

0 0 0

பாதிரியார் ஒருவர் 'எல்லாம் ஆண்டவனுக்கே சொந்தம்' என்ற பொருள் பற்றி பிரசங்கம்செய்தார். இதைக்கேட்டுக்கொண்டிருந்த ஒரு செல்வப்பிரபு பிரசங்கம் முடிந்ததும் பாதிரியாரைத் தமது வீட்டுக்கு அழைத்துப்போய் நல்ல விருந்தளித்து. தமது மாளிகையையும் பூந்தோட்டங்களையும்பழத் தோட்டங்களையும் சுற்றிக்காட்டி, 'இப்பொழுது சொல்லும் பாதிரியாரே, இவையெல்லாம் யாருக்குச் சொந்தம்?' என்று கேட்டார்.

பாதிரியார் ஒரு குறுநகை புரிந்து, 'இந்தக் கேள்வியை இன்னும் நூறுவருடங்களுக்குப்பின் கேளும்' என்றார்.

0 0 0

## அவர் எழுதிய தமிழ்

'மக்கட்கு நேருந்துன்பங்கள் எல்லாம் ஒருங்கு திரட்டி ஒரு துறைப்படுத்தி எல்லார்க்கும் ஏற்றத்தாழ்வின்றி ஒரு நிகராகப் பங்கிடப்படுமாயின் தம்மை இப்போது நல்வினையற்றவராக நினைத்திருப்பார் பலரும், அங்ஙனந் தமக்குப் பங்கிடப் படுங்கூறு பெறுதற்கு முன்னரே, தமக்கு முன்னுள்ளதே போதும்போதுமென்று கூறியமைவர்' என்னும் ஓர் அரிய கருத்தைச் சான்றோர் ஒருவர்வெளியிட்டார் ஏனையொரு சான்றோர் இக்கருத்தின் ஆழத்தை ஆராய்ந்து பார்த்து. 'எமக்கு நேரும் இடர்களுந்துன்பங்களும் மற்றையோன் ஒருவனுக்கு நேர்வனவற்றைக் காட்டினும், எம்முடைய நுகர்ச்சிக்குஇசைந்தனவாய்இருக்கின்றனவென்பது அவனுடன் எமக்குள்ளவற்றை மாற்றிக்கொள்ளக் கூடுமாயின் நன்கு புலப்படும்' என்று இன்னும் நுணுக்கமாக அதனை எடுத்து மொழிந்திட்டார்.

இவ்விரு கருத்தினையும் பற்றி நினைந்தவாறே நான் எனது சாய்மானக்குறிச்சியில் இருந்தபோது என்னையறியாமலே அயர்ந்ததோர் உறக்கம்என்னை வந்து கவிந்தது. சடுதியிலே யான் என்றுங் கேளாத ஒரு புனித ஒலி என்முகமாய் வந்தது. அஃதென்னை என்றறியக் கண்விழித்துத் தென்றிசைப் பக்கமாய்க் காண்கையிற். பச்சை மஞ்சளைப் பிளந்தாற்போலப் பசுங்கதிர் பொழியும் அரசிருக்கை மண்டபம் ஒன்று தோன்றிற்று. அது நாற்பக்கங்களிலும் பொற்சுவர் எழுப்பி முகடு பொற்றகடு வேய்ந்துஅமைக்கப்பட்டிருந்தது. கொழுமையான செம்பவளத்தாற் கடைந்து திரட்டிய நூறு தூண்கள் அங்கு நிறுத்தப்பட்டிருந்தன. கீழே வழுவழுப்பாக இழைத்த வெள்ளைச் சலவைக்கற்களின் பொருத்துவாயில் நீலமணிகள் அழுத்திப் பதிக்கப்பட்டிருந்தன மேலே, பொற்சரிகை பின்னிய வெண்பட்டாடை படங்காகக்கட்டப்பட்டிருந்தது. யான் இந்நிலவுலகத்திற் கண்டறியாத மலர்கள் ஆங்காங்கு விடுபூவாகச்சிதறிக்கிடந்து ஒரு புனித மணங்கமழ்ந்தன. அம்மண்டபம் எங்கும் யாருமின்றி வெறுமையாயிருந்தது. இஃதென்னையென்று வியந்து நோக்குகையில், வைகறை மூடுபனியைக் கீறிக்கொண்டு இளஞாயிறு தளதளவென்று தோன்றுதல்போலப் புனித அருட்டிருமேனியுடையவராயும், காதிற் சங்கக்குழை துலங்குபவராயும், முறுக்கவிழ்ந்து இதழ்விரிந்த செந்தாமரை போன்ற முகமும் அருள்ஒழுகுவிழிகளும் விளங்கப்பொருப்பென அகன்ற திருப்பவள மார்பில் முத்தலைவேல் ஏந்தினவராயும், பிறைக்கொழுந்து நகுஞ்சிவந்த சடைக்கற்றை முடியுடையவராயும் உரைவரம்பமையாப் புரைபெருந்தோற்றத்துடன் அறக்கடவுள் அவ்வரியணை மீது அமர்ந்திருக்கும் நிலை கட்புலனாயிற்று

— தனித்தமிழ்த்தந்தை மறைமலையடிகள் 1925

0 0 0

## 'சேகுவேரா' என்றால் என்ன?

இந்நாட்களில் 'சேகுவேரா, சேகுவேரா' என்பதுதான் எங்கு பார்த்தாலும் பேச்சாயிருக்கிறது. இதென்ன இந்த 'சேகுவேரா'? அது ஒரு மனிதனா, மிருகமா, ஊரா, பட்டினமா, தத்துவமா, இயக்கமா?

1959-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி, பரீஸ்டா என்ற சர்வாதிகாரியின் கொடுங்கோலாட்சியிலிருந்து கியூபா தீவை ஃபிடெல் காஸ்ரோ விடுவித்தார் சுமார் ஆறுவருடங்களாக அவர் நடாத்திய கொரில்லா போராட்டத்தில் அவருக்கு உறுதுணையாக நின்றவர்களுள் முதன்மையானவர் ஏனெஸ்டோ 'சே' குவேரா என்பவர். அப்பொழுது 31 வயது நிரம்பியிருந்த இந்த ஆஜர்ஜென்டினா தேசத்தவர். கொரில்லா இயக்கங்களை நிர்வகிப்பதில் சமர்த்தர். குவாட்டிமாலா தேசத்தில் கொம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டபோது உதவியிருந்தவர். காஸ்ரோவின் வெற்றிக்குப்பின் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு திரும்பிவந்து கியூபாவின் கைத்தொழில் மந்திரியானார். தென் அமெரிக்காவிலுள்ள வெனிஸியூலா தேசத்தில் கொம்யூனிஸ்ட் கொரில்லா இயக்கம் ஒன்றை மேற்பார்வை செய்யப்போனபோது 1967-ம் ஆண்டில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

0 0 0

## கொலையாளிகள் உஷார்

கொலை செய்தவர்கள் தங்கள் உடைகளில் இரத்தக்கறை படிந்துவிட்டால் அது தாம் வெட்டிய ஆடு. மாடு, கோழி இவற்றின் இரத்தம் என்று கூறித் தவறிவிட நினைப்பது வழக்கம். ஆனால் அவர்கள் இப்படி இலேசாக பொலிசாரை ஏமாற்ற முடியாது. ஏனெனில் மனிதன் முதற்கொண்டு ஒவ்வொரு பிராணியின் இரத்தமும் வித்தியாசமான அமைப்புள்ளது பூதக்கண்ணாடியில்பார்த்தால்மனித இரத்தத்திலுள்ள செங்கிருமிகளின் நீளம் 1/3250 அங்குலம், குரங்குகளினது 1/3382''. குதிரையினது 1/4243'', பன்றியினது 1/4246''.

தரையிலோ, சுவரிலோ தெறித்த இரத்தத்தை சுரண்டி எடுத்துவிட்டால் பொலிசாரை ஏமாற்றிவிடலாம் என்றும் நினைக்கப்படாது. ஒரு சிறிய கடுகளவு இரத்தப்பொட்டை 18 வருடங்களுக்குப் பின் சோதித்து மனிதரத்தம் என்று நிரூபித்திருக்கிறார்கள். எத்தனை வருடம் சென்றாலும் இரத்த சோதனை பலன் தரும்.

உலகத்திலே ஒருவராவது தமது கையெழுத்தை ஒரே மாதிரி இரண்டுமுறை போடுவதில்லை. ஒவ்வொரு கையெழுத்தும் வித்தியாசமானதாகவிருக்கும். அப்படி ஒரே மாதிரி வருவதாயிருந்தால் 9,000,000,000,000ல் ஒரு தடவைதான் வருமென்று கணித விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வுண்மை தெரிந்தால் கள்ளக் கையெழுத்துப் போடுபவர்களின் தொகை குறையும்.

## சுடச்சுட மறுமொழி

ஐ. நா. வின் தர்மகர்த்தா சபைக் கூட்டமொன்றில் பிரிட்டிஷ் பிரதிநிதி பேசுகையில் பிரிட்டன் தனது பழைய குடியேற்ற நாடுகளுக்கெல்லாம் சுதந்திரம் வழங்கியதுபற்றி பெருமையடித்துக் கொண்டார். சோவியத் பிரதிநிதி இடையில் குறுக்கிட்டு. 'ஆமாம். அந்த நாடுகளின் தற்போதைய பிரதம மந்திரிகள் ஒரு காலத்தில் உங்களால்சிறையிலடைக்கப்பட்டவர்கள்தானே!' என்று ஏளனம் செய்தார்.

அதற்கு பிரிட்டிஷ் பிரதிநிதி, 'பிரதம மந்திரிகளை கைதிகளாக்குவதைவிட கைதிகளை பிரதம மந்திரிகளாக்குவது நல்லதல்லவா?' என்றார்.

—'வழிப்போக்கன்'.

# இறப்பைவிட உலகின் பிறப்பு விகிதம் அதிகம்!

உலகின் ஜனத்தொகைப் பெருக்கம் பிறப்பு-இறப்பு விகிதங்களைப்பொறுத்ததாகும். பொதுவாக இறப்பைக் காட்டிலும் உலகில் பிறப்புத்தான் அதிகமாக உள்ளது. இந்த விகிதம்தான் உலகின் ஜனத்தொகைப் பெருக்கத்தைத் தீர்மானிக்கிறது. சென்ற நூற்றாண்டின் பிற்பாதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகின் பல்வேறு நாடுகளில் இறப்பைக் காட்டிலும் பிறப்பு விகிதம் சுமார் அரை முதல் ஒன்றரைச் சத வீதமே அதிகமாக இருந்துவந்தது. பெருமளவுக்கு நகரவாசிகளைக் கொண்டிருந்த, தொழில் வளர்ச்சி பெற்ற 'பழைய' மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஜனத்தொகைப் பெருக்கம் மட்டுப்பட்டே இருந்தது எனலாம், அமெரிக்காவிலும் கனடாவிலும் ஜனத்தொகைப் பெருக்கம் சற்று அதிகமாக இருந்தது. இதற்கு வெளிநாடுகளிலிருந்து பலர் இளம் வயதிலேயே அங்கு வந்து குடியேறியதும் காரணமாகும். பின் தங்கிய நாடுகளில் அதாவது காலனி, அரைக்காலனி நாடுகளில் அக்காலத்தில்ஜனத்தொகை மிகவும் மெதுவாக அதிகரித்து வந்தது.

உலகில் பல நாடுகளில் சோஷலிசம் வெற்றி பெற்றதாலும் அநேகமாக காலனி நாடுகள் அனைத்தும் விடுதலை பெற்றுவிட்டதாலும், இந்த நூற்றாண்டின் மத்தியில் ஜனத்தொகைப் பெருக்கத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. மனித குலத்தில் பெரும் பகுதியினர் வசித்து வரும் வளரும் நாடுகளில் இறப்பு விகிதம் வெகுவிரைவாகக் குறையத் தொடங்கியது. அதேசமயம் பிறப்பு விகிதமும் அதிகமாகவே இருந்து வந்தது.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் அரசாங்கங்கள் அம்மை, மலேரியா, காலரா மற்றும் தொற்று வியாதிகளை ஒழிக்க நடத்திய போராட்டத்தினாலும், மேற்கொண்ட சுகாதார நடவடிக்கைகளாலும் விளைந்த பயனே எனலாம். இயல்பாகவே இது ஜனத்தொகைப் பெருக்கத்தை இரண்டரை முதல் நாலு சத வீதம்வரை அதிகரிக்கச் செய்தது.

இதனால் வளரும் நாடுகள் சில முக்கிய பிரச்னைகளை எதிர் நோக்க நேர்ந்துள்ளது. அதிகரித்துவரும் மக்கள் கூட்டத்துக்கு எவ்வாறு உணவளிப்பது என்பதுமட்டுமல்லாது, ஆண்டு தோறும் தேவைப்படும் எண்ணிக்கையில் புதிய வேலை வாய்ப்புக்களை எவ்வாறு உருவாக்குவது என்பதும் இந்நாடுகளை எதிர்நோக்கும் பிரச்னையாகும். வேலை என்றால் 'எந்த' வேலையும் என்று அர்த்தமாகிவிடாது. லாபகரமான பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய வேலைகளையே இப்பிரச்னை குறிக்கும். போதிய அளவுக்கு இத்தகைய புதிய வேலைகளை உருவாக்குவது வளரும்நாடுகளுக்கு ஒரு சிக்கலான பொருளாதாரப் பிரச்னையாகும். உதாரணமாக, இந்தியா தனது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1966—71) 2·1 கோடி புதிய வேலைகளுக்கு வகை செய்ய முடிவுசெய்துள்ளது. ஆயினும் அதே திட்டத்தில் கண்டுள்ளபடி, ஜனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாய் உண்மையில் 2 3 கோடி மக்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் தேவைப்படும். இவ்வளவுக்கும் இந்தியா மிகவும் வளர்ச்சி பெற்றுவரும், மிகவும் தொழில் மயமாகிவரும் நாடுகளில் ஒன்றாகும்.

சரி மனிதகுலம் எந்த அளவுக்குப்பெருகும்? 2000ம் ஆண்டில் உலக ஜனத்தொகை 500 கோடியிலிருந்து 700 கோடிவரை பெருகக்கூடும் என்று ஜன கணிதநிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர் ஐ நா. நிபுணர்கள் கணித்துள்ள மதிப்பீடுகளைப் பார்ப்போம். 2000ம் ஆண்டில் உலக ஜனத்தொகை 488 கோடியிலிருந்து 690 கோடிவரைஇருக்கலாம் என்று அவர்கள் 1957-இல் கருதினர்; ஆனால் 1963-ஆம்ஆண்டிலோ தமது மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்து இந்தத் தொகை 2000-ம் ஆண்டில் 544·9 கோடி முதல் 699·4 கோடி வரை இருக்கலாம் என்று கூறினர். உலக ஜனத்தொகை இப்போதிருப்பதைக்காட்டிலும் 150 கோடி முதல் 200 கோடிவரை அதிகரிக்கும் என்றால் அதுபெரிய தொகைதான், ஏனெனில் இது சென்ற நூற்றாண்டின் மத்தியில் இருந்த உலக ஜனத்தொகை முழுவதைக் காட்டிலும் அதிகமாகும். இத்தகைய வேற்றுமைகள் ஏன்?

தற்போது இருந்துவரும் ஜனத்தொகைப் பெருக்க விகிதாசாரத்தை யாந்திரிகமான முறையில் விஸ்தரித்துப்பார்க்கும் பல மேலைநாட்டு ஜனகணித நிபுணர்கள் அடுத்த நூற்றாண்டு பிறக்கும் சமயத்தில் உலக ஜனத்தொகை 700 கோடியாகப் பெருகிவிடும் என்று கருதுகின்றனர்; மேலும் அவர்கள் ஜனத்தொகைப் பெருக்க விகிதமும் இன்னும் அதிகரிக்கும் என்று ஆருடம் கூறுகின்றனர். ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைக்கும் விதத்தில் இப்போது தோன்றிவரும் போக்குகளையெல்லாம் இவர்கள் காண மறுக்கின்றனர். சோவியத் விஞ்ஞானிகளும் முற்போக்கான அயல்நாட்டு நிபுணர்களும் இந்தப் போக்குகளைக் கருத்தில் கொள்கின்றனர். புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் ஏற்பட்டுவரும் நகர்ப்புற மக்கட்தொகைப் பெருக்கம், இந்நாடுகளில் ஏற்பட்டுவரும் தொழில் வளர்ச்சி, சமுதாய உற்பத்தியில் மேன்மேலும் ஈர்க்கப்பட்டு வரும் பெண்களின் அந்தஸ்தில் ஏற்பட்டு வரும் மாற்றம் ஆகியவற்றில் இந்தப் போக்குகள் புலனாகின்றன.

இந்தச் சமுதாய மாற்றங்களையெல்லாம் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக ஜனத்தொகை 500 கோடியிலிருந்து 600 கோடி வரை இருக்கலாம் என்று நாம் ஊகிக்கலாம். அதே சமயத்தில் ஜனப்பெருக்கத்தின் வேகவிகிதமும் கணிசமான அளவுக்குக் குறையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

சரி. இவ்வளவு மக்களுக்கும் நமது உலகம் போதிய அளவுக்கு உயர்ந்த வாழ்க்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடனமேதை வழுவூர் இராமையாபிள்ளையின் மாணவிகளான ஸ்ரீகாந்தம் சகோதரிகளான தர்மா விசாக, சரோஜினி ஆகியோருடைய பரதநாட்டியம் இம்மாதம் 28-ந்திகதியாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. நடனத்தில் நல்ல தேர்ச்சிபெற்ற இவர்களது நடனத்தை யாழ்ப்பாண மக்கள் ரசிப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் திருமதி சபாரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

# எம். ஜி. ஆர். நாடு திரும்பியதும் நடிக்கப்போகும் வண்ணப்படம்!

"தேடிவந்த மாப்பிள்ளை" படத்தைத் தயாரித்த பத்மினி பிக்சர்சார் அடுத்து ஒரு புதியபடம் தயாரிக்கிறார்கள்.

### எம். ஜி. ஆர்.

இதில் எம். ஜி. ஆர். நடிக்கிறார். மற்ற நடிகர்கள், நடிகைகள் முடிவாகவில்லை. இதுவும் வண்ணப் படமே.

'அம்மா' என்ற கன்னடப் படத்தைத் தழுவிதமிழில் தயாரிக்கப்படுகிறது.

பந்துலு டைரக்ட் செய்கிறார். எம். ஜி. ஆர். 'உலகம் சுற்றும்வாலிபன்' படப்பிடிப்பை வெளிநாடுகளில் முடித்துவிட்டு திரும்பியதும் பத்மினி பிக்சர்சின் புதியபடத்தின் தொடக்கவிழா நடக்கும்.



### நடிகை ஜெயலலிதா ஜப்பான் போனார்!

நடிகை ஜெயலலிதாவும் அவருடைய அம்மா சந்தியாவும் கடந்த 3-ம் திகதி இரவு விமானம் மூலம் ஜப்பான் புறப்பட்டுப் போனார்கள்.

சிங்கப்பூர், ஹாங்காங், பாங்காக், டோக்கியோ, ஓசாகா அகிய இடங்களுக்கு போகிறார்கள். 2 வாரகாலம் வெளி நாடுகளில் சுற்றுப் பயணம் செய்கிறார்கள்.

## ஜெய் சங்கருக்கு காதலிக்க நேரமுண்டு!



ஜெய்சங்கர் நடிக்கும் "காதலிக்க நேரமுண்டு" என்ற புதிய படத்தின்படப்பிடிப்பு வாசு படப்பிடிப்பு நிலையத்தில் தொடங்கியது.

### சந்திரபாபு

ஜெய்சங்கரின் ஜோடியாக ஷீலா நடிக்கிறார். சந்திரபாபு, மனோகர், ஓ.ஏ.கே. தேவர் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

தமிழ்வாணன் கதைக்கு ச. அய்யாப்பிள்ளை வசனம் எழுதுகிறார். ஜி. கே.வெங்கடேசன் இசையமைக்க, ஜி. விசுவநாதன் டைரக்ட் செய்கிறார். ஸ்ரீலட்சுமி பிலிம் ஆலயா என்ற படக்கம்பெனியினர் தயாரிக்கிறார்கள்.

## கடல் அலையில் மிதந்த பாரதியை ரவிச்சந்திரன் கரை சேர்த்தார்

கல்லூரி மாணவி பாரதி கட்டழகி. கால் பந்தாட்டத் கெட்டிக்காரி. கலகல என்று பேசி தோழிகளுக்குமகிழ்ச்சி ஊட்டுவதில் சரியான வாயாடி. இத்துடன் கடலில் குளித்து கும்மாளம் அடிப்பதிலும் தனி விருப்பம் கொண்டவர்.

### கடலில் விளையாட்டு

ஒருநாள் தோழிகளுடன் கடற்கரைக்குப் போனார். மோதி அடிக்கும் அலைகளைப் பார்த்ததும் குஷிபிறந்தது. கடலில் இறங்கி ஆனந்தமாகக்குளித்தார்.

பாரதி கடலில் குளிப்பது அவருடைய காதலன் ரவிச்சந்திரனுக்கு எப்படித்தான் தெரிந்ததோ! அவரும் வந்தார். காதலி பாரதியுடன் கடலில் நீந்தி விளையாடினார். உயரமாகக் கிளம்பி வந்த அலை பாரதியைச் சுருட்டி இழுத்தது. அடுத்த நிமிடத்தில் ரவிச்சந்திரன் பாரதியை "அலாக்" காகத் தூக்கிக்கரைசேர்ந்தார்கரை சேர்ந்ததும் காதலர்கள் 'கல கல' என்று சிரித்தார்கள்.

### 'மீண்டும் வாழ்வேன்'

"கட்" என்றார். டைரக்டர் டி என் பாலு. இந்தக் காட்சி ராணி புரொடக்ஷன்சின் "மீண்டும் வாழ்வேன்" என்ற படத்துக்காக சென்னைக் கடற்கரையில் படம் ஆக்கப்பட்டது. இந்தப் படம் வேகமாக வளர்ந்து வருகிறது.

## இவர் சங்கீதரத்தினம்



இராமநாதன் இசைக்கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சித்தியெய்தி 'சங்கீதரத்தினம்' (மிருதங்கம்) பட்டத்தைச் செல்வன் ம இரவிச்சந்திரா பெற்றுள்ளார். மிருதங்கத்தில் சங்கீதரத்தினம் பட்டம் இம்முறைதான் முதன்முதலாக வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

இவர் இளமையிலிருந்தே இசையில் ஈடுபாடுடையவர். பிரபல மிருதங்க வித்துவான் சங்கீத பூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதனிடம் குரு—சிஷ்ய முறையில் மிருதங்க இசையைக் கற்று சிறுவயதிலேயே அரங்கேறியவர். 1968ல்- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்திய கர்நாடகஇசைப் போட்டியில் வாத்தியத்தில் கனிஷ்ட பிரிவுக்குரிய முதற்பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். வானொலியில் தாளவாத்தியக் கச்சேரி அளித்துவரும் கலைஞர்களுள் இவரும் ஒருவராவார். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பல இசைவிழாக்களில் பங்குபற்றியுள்ளார். இவரின் குருவாகிய மிருதங்க ஆசிரியர் திரு. ஏ. எஸ். இராமநாதன்அவர்களிடத்திலேயே தொடர்ந்தும் இராமநாதன் இசைக்கல்லூரியில் பயின்று இப்பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப நிலையத்து சிரேஷ்ட போதனாசிரியர் திரு ச. க. மதியாபரணம் அவர்களின் புதல்வராவார்.

## சௌகார் ஜானகிக்கு டென்னிஸ்வீரர் மீதுமோகம்!

"டென்னிஸ்" விளையாட்டு வீரர் ஒருவரை சௌகார்ஜானகி காதலிக்கிறார். இந்தக் காதல் விளையாட்டு மீது சௌகார் ஜானகி கொண்ட மோகத்தினால் ஏற்பட்டது.

கல்லூரி ஆசிரியையான சௌகார்ஜானகிக்கு 'டென்னிஸ்' விளையாட்டு வீரர் ஒருவரின் திரமும் சுறுசுறுப்பும் அவர் பந்தடிக்கும் திறமையும் பிடித்து விட்டது. அவர் மீது மனதைப் பறிகொடுத்தார் கல்லூரி ஆசிரியை சௌகார் ஜானகி.

சௌகார் ஜானகி 'டென்னிஸ்' விளையாட்டு வீரரான ஜெமினிகணேசனை காதலிக்கும் காட்சியை ஜெயகமலா மூவீசின் படத்தில் காணலாம்.

முத்துராமன், சுந்தரராஜன், சிவகுமார், 'தேங்காய் சீனிவாசன், மனோரமா ஆகியோரும் நடிக்கிறார்கள். க. தேவராஜன் கதை, வசனம் எழுத, கே. விஜயன் டைரக்ட் செய்கிறார்!

## கலையுலகில் வளர்ந்து வரும் நல்ல கலைஞர்!



சிறுவயதில் இருந்தே நாடகப் பித்தேறிய திரு. சண்முகநாதன் பாடசாலையில் படிக்கின்ற காலங்களிலே, அங்கு நடாத்தப்படும் விழாக்களில் பங்குகொண்டு முன்னணியில் நின்று நாடகங்களை நடாத்திப் பலருடைய பாராட்டுக்களையும் பெற்றவர்.

தாவடியைச் சேர்ந்தஇவர் இப்போது'காந்திகலை வளர்ச்சிமன்றம்' என்ற ஒரு கலையகத்தை நிறுவி இசை,நாடகம், வில்லிசை என்பனவற்றை வளர்த்து வருகிறார். இவர் ஒரு சிறந்த வில்லிசைக் கலைஞரும்கூட,

'மன்னிப்பு' என்ற சமூக நாடகத்துடன் மேடையேறி நடித்த இவர், இரத்த பாசம், சங்கிலியன், வீரபாண்டிய கட்டப்பொம்மன், கல்லறைக் கண்ணீர், என்னும் நாடகங்களில் முக்கிய பாகமேற்று நடித்ததோடுமட்டுமல்லாமல், சாந்தி, வாழ்வளித்தவன், நடந்துவந்தபாதையிலே, மலர்ந்த வாழ்வு போன்ற நாடகங்களின் கதை - வசனம், டைரக்சன்பொறுப்பையேற்றுத் திறம்படத் தயாரித்தவருமாவார்.

கலைகளின்மேல் பித்துக்கொண்ட இவர் தமிழ்நாடு சென்று, பல நாடகங்களையும், வில்லிசை நிகழ்ச்சிகளையும் ரசித்து அதைப்போலச் செய்தாலென்ன? என்ற உணர்ச்சியும் கொண்டவர். வருடாவருடம் ஒவ்வொரு கலைஞரையும் தங்கள் மன்றமூலம் பாராட்டிக் கௌரவித்தும் வருகின்றார்.


இவருடைய கலையார்வம் ஈழத்திற்குப் புகழ் தேடித் தருவதோடு, இவரையும் ஒரு முன்னணி நடிகராக்கும் என்பதில் ஐயமில்லை வளர்க அவரின் கலைச்சேவை.

—இ. திருஞானசம்பந்தன்

## 1970-ல் சோவியத் ஜனத்தொகை

1970 ஜனவரியில் சோவியத் யூனியனில் மேலுமொரு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டது. இதன் பிரகாரம் நாட்டின் ஜனத்தொகை 241,248,000.

1959-ல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டிற்கும் இந்தக்கணக்கெடுப்பிற்குமிடையிலான 11 ஆண்டுகளில் சோவியத் யூனியனின் ஜனத்தொகை 330 லட்சத்தால் அதிகரித்தது. வேறுபட்ட வேகறிலையில் (ரஷ்ய சமஷ்டிக் குடியரசில் 11 சதவீதமும் டஜிகிஸ்தானில் 46 சதவீதம்)இந்த வளர்ச்சி 15 குடியரசுகளில் பதிவு செய்யப்பட்டது. வெவ்வேறு குடியரசுகளில் பிறப்பு விகிதாசாரம் வெவ்வேறு மட்டத்தில் இருப்பதுவும், அதிக பிறப்பு விகிதாசாரமுள்ள பிராந்தியங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்வதாலும் இந்த வித்தியாசம் ஏற்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஈழநாடு’ பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவே!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 3. ஓங்கலனூர் உரைத்த அறம்

கொடிய வெஞ்சினம் கொஞ்சிய நச்சியின்
கோபம் மெல்லக் குறைந்து வரற்குளே
கடலிலே விழுந் தென்னுயிர் மாய்ப்பனோ?
காட்டிலே சுடுக் கிட்டு மடிவேனோ
சுடலை ஆலடிக் குந்திநஞ் சுண்பனோ
தொல்லை வாழ்விதென் றெண்ணினன்-
பள்ளியில்
கடைசியாய்த் தமிழ்ப் பாடந்தொடங்கையில்
கவலை சற்றுத் தணிந்து தெளிந்தனன்.

காட்டுத் தீயையும் கட்டிடும் தென்றலாய்
காய்ந்த மண்ணை நனைக்குமோர் பெய்யலாய்
வாட்டும் நோயை மடிக்கும் மருந்துமாய்
வஞ்ச மற்ற மனத்தின் வடிவமாய்
காட்டுந் தீபக் கொழுஞ்சுடர் மேன்மையாய்
கண்ணி றைந்ததோர் கோபுர நேர்ச்சியாய்
மீட்டும் யாழிசை மெல்லொலி வெள்ளமாய்
விஞ்சும் ஓங்கல னூர்க்குரு காரணம்!

மந்தி ரக்குரல் ஓங்கல னூர்பல
மாண வர்மன மன்னவன்! அன்னவர்
அந்தரத்துறை தேவர்க ளாகவும்
ஆற்றி டைப்பட கம்பியர், மாங்கனி
கொந்திடும் அணிற்கூட்டங்க ளாகவும்
குஞ்சரத் தெழுவீரர் களாகவும்
சுந்தரத் தமிழ்ப் பாக்கள் பயில்கையில்
சொக்கி மாறிட வைப்பவர்! இன்றெனில்

‘‘தன்னலம்’’ எனுஞ் சின்னத் தலைப்பினில்
தம்பிமாரே எழுது மொர்கட்டுரை
என்னும் கூற்றொடு வந்தார் வகுப்புளே!
ஏற்ற தோதலைப் பில்லையோ என்றனர்
என்ன அர்த்தம் இதற்கென்று கேட்டனர்
எத்தனை வகை தன்னலம் என்றனர்
என்ன டாவிடை என்றுத மக்குளே
எண்ணி எண்ணி விழித்தனா மாணவர்!

தான் நலம்பட எண்ணுதல் தன்னலம்!
தன்னலம் இரு பான்மைய தாம்! அதில்
ஆன்ம மேன்மை அடைந்திட எண்ணிடும்
அந்தத் தன்னலம் நல்லது! ஒன்றிது!
நானில் வாழ்வினைத் துய்க்கவேண் டும்என
நாடி நிற்பது ஓர்வகை தீயது!
ஏன் அதெப்படித் தீயதென்பீர்? என
எண்ணத் தூற்சிலர் கேட்கிறீர்! சொல்கிறேன்!

வீடு வாசல் நிலபுலம் ஆண்டிட
மேன்மை யான பதவிகள் தாங்கிட
ஆடு மாடுகள் கோழி வளர்த்திட
ஆலை எந்திர கூடம் நடத்திட
காடை யர்கள்கை யாட்களை வைத்திட
கன்னி கள்ளிறைச் சிச்சுவை மாந்திட
ஓடும் கப்பல்கள் வண்டிகள் ஆண்டிட
உன் னுதல் இடர் தந்திடும் தன்னலம்!

இன்ன பற்பல தீத்திறத் தன்னலம்
இன்ப மென்றெ(?)ம் ஈயுமுன் னுயிரம்
இன்னலுக்கு ளேமாட்டி வதைத் திடும்
இதய சாந்தியைக் கொல்லும் இகழ்ச்சியால்!
தன்னையும் தனைச் சார்ந்தவர் தம்மையும்
சண்டை யிட்டிடத் துன்புற வைத்திடும்!
பின்னர் மூப்பினில் ஏனிதைச் செய்தனம்
பேய டாமனம் என்றழ வைத்திடும்!

பக்கத்துத் தெருப் பையன் ஒருவனின்
பட்டுச் சட்டைபோல் சட்டைதான் போட்டிட
திக்கற்ற குடும்பத்து வறிய தோர்
சிறுவ னுசைகொண் டேங்கியே மாந்தனன்!
துக்க மெய்தினன் இன்பமே தேடிப்போய்!
சோற்றைக் கண்களால் கண்டுபல் நாட்பட்ட
வக்கில் தாயையோ வாங்கித் தரும்படி
வாட்டி வந்தனன்! வாங்கியும் கட்டினன்!

மூளும் ஆசையைத் தீர்த்திட நேர்வழி
முற்றும் மூடிக் கிடக்கிது! மேலொரு
நாளும் தாங்க இனிமுடி யாதென்று
நாலு வீட்டில் பணங்கள வாடிப்பல்
வேளை அஞ்சி நடுங்கிக் கலங்கிப்பின்
மெல்லப் போய்க்கடை வாங்கினன்
சட்டையை
‘ஆளுக் கேதிந்தப் பட்டுச்சட் டைஎன்றே
அண்ணன் தந்தைஅக் காஅம்மா யாவரும்

சூழ்ந்து நின்று துளைத்த துளைப்பினில்
சொல்லி விட்டனன் உண்மையை! மானமாய்
வாழ்ந்த சந்ததி மானம் அழித்தவா
வாவென்றுகட்டி நையப்புடைத்தனர்
விழ்ந்த குத்துக்கள் வேதனை கொஞ்சமோ?
வீணவ் வாசையால் மிஞ்சிய தின்பமோ?
ஆழ்ந்து சிந்திக்கும் ஆண்பிள்ளை யானபின்
அவன்நி னைந்திதைத் துன்புறல் கொஞ்சமோ?

(வளரும்)

# ‘புது உலகு’ போ...

‘ஒன்றேகுலம்; ஒருவனே தேவன்’ என்ற பெரும் உண்மையை சொல்லளவில்வைத்துக் கொண்டிருக்காமல், வாழ்விலும் நிரூபித்துக் காட்ட ‘புதிய உலகு ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது!



புதுச்சேரி அம்மையார்

அமைதியற்றுத் தவிக்கும் மனிதகுலத்தின் ஈடேற்றத்துக்கு என உருவாகும் அந்த உலகில் ஏற்றத்தாழ்வு இருக்காது; ஆனால் செம்மையான வாழ்வுக்குமட்டும்சிறப்பான வசதிகள் இருக்கும்!

அந்த ‘உலகுக்கு நாமும் போகலாம்!

அவர்தான் எனக்கு அந்த உலகைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் பேசவில்லை, அவர் இதயம் தான் பேசியது!

யாழ்ப்பாணத்தில் பிறந்து இருபத்தொருவயதில் மலேஷியாசென்று, அங்குதலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து ஒய்வுபெற்றவர் பெரியார் சிற்றம்பலம் மயில்வாகனம்.

இளமைக்காலத்தில்யாழ்ப்பாணத்தில் படித்துக்கொண்டிருந்தபோது இவருக்கு சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், யோகர்சுவாமிகள் போன்றோருடன் இருந்த பக்தியும் தொடர்பும் இவர் இதயத்தில் புதிய சிந்தனைகளை ஏற்படுத்தின.

## அரவிந்தர் பக்தர்

மறைந்துவிட்ட பெரியார் கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் இவர் சிந்தனைகளுக்கு அப்போது நீரூற்றி வளர்த்தார். திரு. மயில்வாகனம் மலேஷியா சென்றதும் அரவிந்தரின் கருத்துக்களில் ஈடுபாடு கொண்டு அவற்றைப் படித்து படித்து அரவிந்தரின் அடியார்க்கு அடியாரானார்! இவர் ஒரு தடவை அரவிந்தரைத் தரிசிக்க இந்தியா போயிருந்த போதிலும், அவரைக்காண முடியாது போய்விட்டதாம். மலேஷியாவில் 40 ஆண்டு காலத்துக்குமேலாக ஆசிரியர் பணியைச்செய்துவிட்டு. அதிலிருந்து ஒய்வுபெற்றுக் கொண்டதும் பொருமை பூசலற்ற அமைதியான வாழ்வுவாழத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

# புதுப்பாதை காட்டும் புதுச்சேரி அம்மையார்

ஆம், அந்தப் புதியஉலகில் அவரும் வாழ போகிறார்!

எட்டு மாதங்களுக்கு மேலாக புதுச்சேரியிலுள்ள அரவிந்த ஆச்சிரமத்தில் இருந்துவிட்டு யாழ்ப்பாணத்தில் தனது பழைய நண்பர்களை சந்திப்பதற்காக வந்து சில தினங்கள் இங்கு தங்கியிருந்த சமயத்தில்தான் இந்தப் பெரியாரை நான் சந்திக்கும்வாய்ப்புஏற்பட்டது.

புனிதமான வாழ்வுக்கு வழிகாட்டப்போகும்அந்தப் ‘புதிய உலகு’ அமையப் போகும் புதுச்சேரியைச் சுற்றிச்சுற்றித்தான் பெரியார் மயில்வாகனத்தாரின் உள்ளம்பறந்துகொண்டிருந்தது.



அரவிந்தர்

பிரான்ஸிலிருந்து 47 ஆ...
டுகளுக்கு முன்னர் பு...
சேரிக்கு வந்து, அரவிந்த...
பக்தையாகி, அவரின் எ...
ணங்களையும் கருத்துக்க...
யும் சொல்லிலும், செ...
லும் கடைப்பிடித்து ம...
குலம் உய்வதற்கு தன்...

## ... பாம...

அர்ப்பணித்துவா...
பிரெஞ்சுப் பெண்மணிய...
புதுச்சேரி அம்மையா...
பணிகளைப் பற்றி அவர்...
குச் சொல்... கொண்...
போது மெய்சிலிர்த்தது!

## புதுச்சேரி அம்மையார்...

‘‘அரவிந்தர் ஒப்படை...
பொறுப்புக்களை நிறைவ...

மனவியாதி [1]

# மனவியாதிக்கு அடிப்படை க. க. க.

எங்கள் ஊரில் கணபதி என்று ஒரு கமக்காரர் இருக்கிறார். அவர் தன்னுடைய தோட்டத்தில் வாழைவைப்பார். வாழைகளால் அவருக்கு வருடத்தில் கணிசமான ஆதாயம் உண்டு. இம்முறை வாழைக்குட்டியள் பிழையில்லை, கணபதியண்ணை’ என்று யாராவது சொன்னால், ‘சீ பிழையில்லைத்தான் ஆனால் காத்தடிச்சால் எல்லாத்தையும் முறிச்சுத்தள்ளிப்போடும்’ என்று கவலையோடு கூறுவார் குலைகளை அறுவடை செய்து சந்தையில்விற்றபின்பு,‘வாழையள் இம்முறை வெளுத்து வாங்கீட்டுது’ என்று யாராவது சொன்னால், ‘ஓ, இம்முறை பரவாயில்லைத்தான். எண்டாலும் நிலத்தை உறிஞ்சி இழுத்துப் போட்டுது’ என்று பரிதாபமாகப் பதில் சொல்வார்.

கணபதிக்கு ஒருநாளும் மனதில் திருப்தி ஏற்படுவதில்லை. எந்த நேரமும் சலிப்புக் கொட்டிக் கொண்டேயிருப்பார். அவர் கலகல வென்றுசிரித்ததாகவரலாறு கிடையாது. முகத்தை எந்த நாளும் செத்தவீடுபோல வைத்திருப்பது அவருடைய சுபாவம். இந்தக்குணம் ஒரு கடுமையான வியாதிக்கு அடிப்படையென் பதை அவர் அறியமாட்டார். அவரைப்பற்றி பின்னால் விபரமாக ஆராய்வோம்.

மனிதனுக்கு ஏற்படும் வியாதிகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்றுஉடல் வியாதி. மனித உடல் ஒரு யந்திரம் போன்றது. யந்திரத்தின் ஓர் உறுப்பு பழுதடைந்துவிட்டால் அதைத் திருத்தியமைப்பதுபோல தேகத்தில் ஓர் அவயவம் பழுதுபோனால் அதை சுகப்படுத்தலாம். உடல் உறுப்புகளுக்கு உண்டாகும் பழுதுகளைசரிப்படுத்துவதில் வைத்தியக்கலை இன்று மிகவும் முன்னேறியிருக்கிறது.

இரண்டாவதுமனவியாதி. இது நோயாளி, வைத்தியர் இருவரையும் அலைக்கழித்துவிடும். மனத்தில் உண்டாகும் வியாதி மனத்தோடு இருந்துவிட்டால் பரவாயில்லை அது அடுத்தபடியாக தேகத்திலுள்ள உறுப்புகளையே தாக்கி பலவிதமான உடல்வியாதிகளைக்கொண்டு வரும். தீராததலைவலிமுதல் தொய்வு, சலரோகம், வயிற்றுவலி, அஜீரணம், வாதக்குத்து, சருமநோய்கள் முதலிய பலவியாதிகளுக்கு மூலகாரணம் மனவியாதி. மனம் அடிப்படையாயிருப்பதால் நிபுணர்கள் கூட இவ்வியாதிகளைக் கண்டுபிடித்து மாற்றுவது

— சுநாதன் —

மிகவும் கடினம், எந்த வயதினரையும் எப்படிப்பட்டவரையும் மனவியாதி தாக்கும். ஆஸ்பத்திரிக்குப்போகிறவர்களில் சரி அரைவாசிப் பேர் இதனால் பீடிக்கப்பட்டவர்கள். ஆனால் அவர்களுக்கு அது தெரியாது.

பெரும்பாலான உடல் வியாதிகளைப்போல, இது கிருமிகளாலோ அங்க சேதத்தாலோ உண்டாவதில்லை. சாதாரண வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களால் உண்டாவது. கவலைகள், கஷ்டங்கள், கரைச்சல்கள்- இவை மூன்றுமே மனவியாதிக்கு அஸ்திபாரமானவை. ஒருவன் இவற்றை மீறி தலை தூக்க முடியாத பக்குவத்தில் மனத்தாங்கல் ஏற்பட்டு அதன் காரணமாக உடல் நோய்களுக்குள்ளாகிறான்.

மனவியாதியால் தாக்கப்படக்கூடியவர்களை பொதுவாக மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில் தான் எங்கள் கணபதியண்ணர் வருகிறார். இப்பிரிவிலுள்ளவர்கள் சதாகாலமும் மனம் புழுங்கிக் கொண்டு எதிலும் திருப்தியடையாமலிருப்பவர்கள் இவர்களுக்கு மனவியாதி ஏற்பட்டுவிட்டால் அதற்கு மாற்று மருந்து இல்லையென்றே கூறலாம்.

மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் வேலையைப்பற்றியோ, வீட்டுக் கருமங்களைப்பற்றியோ, எடுத்துக்கொண்ட ஏதாவது கருமத்தைப்பற்றியோ அளவுக்கு மிஞ்சி யோசனை செய்து மன உளைச்சலை உண்டுபண்ணுபவர்கள். வேறொன்றுமில்லாவிட்டால் அடுத்த வீட்டுப் பெட்டைக்கு தாய் தகப்பன் ஏன் இன்னும் கலியாணம்செய்து வைக்கவில்லை என்றுவது மனத்தைக் குடைவார்கள்.

மூன்றாவது பிரிவிலுள்ளவர்களுக்கு க. க. க. (கவலை, கஷ்டம், கரைச்சல்) சற்று அதிகப்படியாயிருக்கும். வீட்டில் நாலு குமரை வைத்திருப்பவர்கள், வியாபாரத்தில் ‘வங்குரோட்’ அடித்தவர்கள், கணவன் மனைவியைப் பிரிந்திருப்பவர்கள்- இவர்களை இப்பிரிவில் சேர்க்கலாம். இவர்களைக் குணப்படுத்துவது சுலபம். குமர் கரையேறிவிட்டால், வியாபாரம் எழும்பிவிட்டால், கணவன் மனைவி சேர்ந்துவிட்டால் வியாதியும் தீர்ந்தது. இரண்ட...
பிரிவிலுள்ளவர்களைக் கு...
படுத்துவது இதைவி...
கடினம். அதனிலும் கடி...
முதலாம் பிரிவிலுள்ள ...
பதி பேர்வழிகளைக்குண...
குவது.

க. க. க.வினால் உட...
வியாதி எப்படி உண்டா...
தென்று ஆராயப்போ...
யோசனை என்றால் என்...
உணர்ச்சி என்றால் என்...
அவற்றின் விளைவுகள் என்...
என்பதை ... தெரிந்துகொள்ள ...
வேண்டும்.

யோசனை மூளையில் மட்...
தான் நடைபெறுகிறதென்...
நாங்கள் நினைப்பது தவ...
யோசனை நடக்கும்போ...
மூளையை கேந்திரஸ்தான...
யுள்ள பல்லாயிரக்க...
கான நரம்புகள் உட...
முழுவதும் தொழிற்...
கின்றன. உணர்ச்சிவ...
படும்போது நரம்புகள் ...
வேகமாகத் தொழிற்படு...
றன. மனத்திலுண்டா...
நிலை தேகத்தில் மாற்...
உண்டாவதையே உணர்...
என்கிறோம்.

உதாரணமாக கோ...
என்றஉணர்ச்சியைஎடுத்...
கொள்வோம். எல்லோ...
ரும் தெரிந்த ஓர் உணர்...
ஒருவருக்குக் கோபம் உ...
டாவதை எளிதில் கன...
கொள்ளலாம். முகம் க...
கும். முழிபிதுங்கும், மீ...
இருந்தால் துடிக்கும். ...
கால் நடுங்கும். மனதின்...
உடம்பில் தோற்றப்ப...
றது. அகத்தின் அழகு மு...
தில் தெரியும். ஒரு பெ...
ணுக்கு நாணம் வரும்போ...
அவளுடைய முகமும் அ...
வங்களும் படும்பாடு! ...
ருக்கு இரத்தத்தைக் கண்...
வுடனே குடலைக் குமட்...
வாந்திவரும். சிலர் மய...
மடைவார்கள்.

உடம்பில் நரம்புக...
தசைநார்களும் இரத்த...
டமும் சாதாரண நி...
விட்டு அசாதாரண நிலை...
அடையும்போது இருத...
குடல், மூளை போன்ற ...
ணிய அவயவங்கள் தாக்...
படுகின்றன. இப்படிய...
தாக்கங்கள் அடிக்கடி தே...
தில் தோன்றும்போது நே...
காண்கிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வோம்!



...ரவிந்தர்

...லிலிருந்து 47ஆண்
...முன்னர் புதுச்
...ந்து. அரவிந்தரின்
...அவரின் எண்
...கருத்துக்களை
...லிலும், செயலி
...ப்பிடித்து மனித
...வதற்கு தன்னை

## ... பாமா ராஜகோபால்

...ரித்துவாழும்
...பெண்மணியான
...ரி அம்மையாரின்
...பற்றி அவர்எனக்
...கொண்டிருந்த
...ய்சிலிர்த்தது!

### அம்மையார்

...தர் ஒப்படைத்த
...களை நிறைவாகச்

...து. இரண்டாம்
...வர்களைக் குணப்
...இதைவிடக்
...தனிலும் கடினம்
...ரிவிலுள்ள கண
...ிகளைக்குணமாக்

...ினால் உடல்
...படி உண்டாகிற
...ராயப்போனால்,
...ன்றால் என்ன,
...என்றால் என்ன,
...ளைவுகள் என்ன
...தவில் ...ாய

...ழையில் மட்டும்
...பறுகிறதென்று
...னப்பது தவறு.
...நடக்கும்போது
...ந்திரஸ்தானமா
...ாயிரக்கணக்
...புகள் உடம்பு
...தொழிற்படு
...ணரிச்சிவசப்
...நரம்புகள் அதி
...தொழிற்படுகின்
...ந்திலுண்டாகும்
...தில் மாற்றம்
...யே உணர்ச்சி

...ாக கோபம்
...சிலையைஎடுத்துக்
... எல்லோருக்
...ஓர் உணர்ச்சி.
...கோபம் உண்
...ளிதில் கண்டு
... முகம் கறுக்
...துங்கும், மீசை
...டிக்கும். கை
... மனதின்நிலை
...தோற்றப்படுகி
...ின் அழகு முகத்
... ஒரு பெண்
...ம் வரும்போது
...முகமும் அவய
...ம்பாடு! சில
...த்தைக் கண்ட
...லைக் குமிட்டி
... சிலர் மயக்க
...

...நரம்புகளும்
...ம் இரத்தோட்
...ாரண நிலையை
...ாரண நிலையை
...து இருதயம்,
...போன்ற நுண்
...ங்கள் தாக்கப்
... இப்படியான
...டிக்கடி தேகத்
...போது நோய்

செய்துகொண்டிருக்கும் புதுச்சேரி அம்மையார் நிர்வகித்துவரும் புதுச்சேரியிலுள்ள அரவிந்தர் ஆச்சிரமத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் தங்கியிருக்கிறார்கள். 800க்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி பயில்கிறார்கள். தினம் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து போகிறார்கள்...'' —அவர் பேசுகிறார்.

''புதுச்சேரிஅம்மையாரை நீங்கள் சந்தித்துப்பேசியிருக்கிறீர்களா?''

தனது பர்ஸைத் திறந்து செருகி வைக்கப்பட்டிருந்த படமொன்றை எனக்குக் காட்டுகிறார்! அந்தப்படத்தைப்பார்க்கும்போது தெய்வீக நினைவுகள்தான் ஏற்படுகின்றன.

பெரியார் சொல்கிறார்:-

'அம்மையார் கடவுள் அவதாரம். 1958-ம் ஆண்டு மலேஷியாவிலிருந்து நான் புதுச்சேரி வந்திருந்த சமயம் அம்மையாரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது ஓரிரு வார்த்தைகளுக்குமேல் பேசமாட்டார். என்னை வாழ்த்தி ஆசி கூறினார். அதன்பின் அம்மையார் சொன்ன அந்த வார்த்தைகள் இப்போது என் நெஞ்சத்திலிருந்து நீங்காது தெய்வவாக்காக ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'இந்தத் தலைமை ஆசிரியர் என்னிடம் மீண்டும் திரும்பி வருவார்' அவர்கள் சொன்ன வார்த்தைகள் பலித்து விட்டது. நான் அவர்களிடமே திரும்பிப் போய்விட்டேன்'.

### அரவிந்தர் ஆச்சிரமம்

'மனித ஒற்றுமைக்கும் உலக அமைதிக்கும் உழைப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்கரிய செய்து வரும் 92 வயது புதுச்சேரி அம்மையார் நிர்வகித்துவரும் அரவிந்தர் ஆச்சிரமம் எவ்வளவு சிறப்பான முறையில் இயங்குகிறதென்பதை 8 மாதங்கள் அங்கு தங்கியிருந்த காலதில் தெரிந்து கொண்டேன். 400 கட்டடங்கள்— 100 ஏக்கர் நிலத்தில் இருக்கின்றன. காலமெல்லாம் அங்கேயே இருந்துவிடவேண்டுமென்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது' என்று கூறிய பெரியார் மயில்வாகனம்—

புதுச்சேரி அம்மையார் இப்போது உருவாக்கிக் கொண்டுவரும் 'புதிய உலகு' பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

### புது உலகு

'ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இந்தப் 'புது உலகை'ச் சிருஷ்டிப்பதற்காக வாங்கப்பட்டிருக்கிறது அரவிந்தர் நினைவாக 'அரோவில்' என்று பெயரிடப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வேண்டிய அளவு இடத்திற்கு முற்பணம் கொடுக்கிறார்கள். இங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படும். இந்த ஆயிரக்கணக்கான வீடுகளிலும் குடியிருப்பவர்களுக்கு வசதியாக ஆஸ்பத்திரி, தொழிற்சாலைகள், கடைகள், பாடசாலைகள் போன்ற எல்லா வசதியும் செய்து கொடுக்கப்படும். புதுச்சேரியிலிருந்து ஆறுமைலுக்கு அப்பால் கடற்கரையோரத்தில் இந்த உலகு சிருஷ்டிக்கப்பட்டு வருகிறது. சாதிமத வேற்றுமை பற்றிப் புதிய சமூகமொன்றை இந்தப் 'புது உலகில்' வளர்ப்பதே அம்மையாரின் நோக்கம்.

சீரற்ற அவலநிலையிலிருக்கும் உலகஅமைதிக்கு ஒரே வழி இவ்வுண்மையைக் கடைப்பிடிப்பதே. பல நூற்றாண்டுகளாக மனிதன் அரசியல்முறையில் எடுத்த முயற்சிகளெல்லாம் ஏன் வீணாகப்போயிற்று. ஏன் இந்த வித்தியாசங்களும், இன முரண்பாடுகளும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. மனிதன் பல சாத்திரங்களையும், கலைகளையும் கற்றாலும் தன்னை அறியும் அறிவை அறிந்திலன். பொய், உண்மையை உணர்ந்தால் எல்லாச் சங்கடங்களும் தீரும். மனிதகுலம் ஈடேறும் உலகத்தில் அமைதிநிலைபெறும் இந்த உண்மையை யோகநெறியில்தான் காண முடியும். அதனால்தான்,

புதுச்சேரி அம்மையார் போட்டி பொறாமையற்ற வாதமிடும் சமய நெறிக்கப்பாலுள்ள ''யோக நெறியைத் தெரிந்து எடுத்துள்ளார்கள். இந்த நெறியே மனித ஈடேற்றத்துக்கு வழிகாட்டி. 'புது உலகான 'அரோவி'லில் மனிதன் இனவேற்றுமைகளை அகற்றி தன்னலத்தை நாடுவதனால் வரும் முரண்பாடுகளுக்குள் அகப்படாமல், நிம்மதியான சுதந்திர வாழ்வைக் கடைப்பிடிக்கலாம். உலகம் இப்போதுள்ள அமைதியற்ற நிலையில் இப்படியான அமைதியான ''புது உலகு'' ஒன்று அவசியம்தான்.''

(12-ம் பக்கம் பார்க்க)

## தேவாரத் திருவமுது

# அப்பர் சுவாமிகள் உணர்ந்து காட்டிய அருள் நெறி நிலை

## — க. வை. ஆ. சர்மா —

கடவுளைக் கண்டவர் யார்? இறைவன் திருவடி நீழலிலே திளைத்திருக்கும் அந்தப் பேரின்பம் எப்படி இருக்கும்? இதுபோன்ற வினாக்கள் பலருடைய மனத்திலே எழுந்து குடைந்தும் விடைகாணமுடியாமலே மறைந்திருக்கலாம். சைவ சமயத்திலே பிறந்து வளர்ந்தும், ஏதோ வினைவசத்தினால், சைவசமயத்தை விட்டுப் புறச்சமயமாகிய சமண சமயத்திலே புகுந்திருந்த திருநாவுக்கரசர் இறைவன் திருவருள்கூட்டச்சூலைநோய் கொண்டு வருந்தி, இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றவர். அவர் அவனருளே கண்ணாகக்கொண்டு இறைவனைக் கண்டவர் அது மாத்திரமல்ல, இறைவன் திருவடியிலே பேரின்பம் திளைத்தவர். அவர் கூறுவனகொண்டு மேலெழுந்த வினாக்களுக்கு நாம் ஒருவாறு விடைகாணலாம்.

உலகத்திலே மனிதர் கொள்ளும் ஆசைகளை எல்லாம், மண், பெண், பொன் என்னும் மூன்றினுள்ளே அடக்கிவிடலாம். அதிகார ஆசை, புகழ்விருப்பு என்பனவும் இவற்றினுள் அடங்கும். எந்த ஆசையும் துன்பத்திற்கே காரணமாம், அதனால் பேரின்பம் அனுபவிக்க வேண்டுவோர் ஆசையை முற்றாக விட்டுவிடவேண்டும். கடவுளை வணங்கு, ஆனால் கடவுளை அடைய வேண்டுமென ஆசைப்படாதே. 'ஆசை' என்பது அவ்வளவுக்குப் பொல்லாதது. இக்கருத்தையே,

'ஆசை அறுமின், ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசையறுமின்' என்றும், 'எம்கடன் பணிசெய்துகிடப்பதே' என்றும்,

'பற்றுக பற்றற்றான்
பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்றும் எழுந்த மேற்கோள்கள் எமக்கு வலியுறுத்திக் காட்டுகின்றன.

எவன்தன்னாலும் தன்னைக் காப்பாற்ற முடியும் என நினைக்கிறானோ, காக்க முயலுகிறானோ, அவன் கடவுளைக் காணமாட்டாதவன். காண முயலாதவன் ஆவன். பொறுப்பு முழுவதையும் ஆண்டவனிடத்தே முற்றாக ஒப்புவித்தவனுக்கு ஒரு கவலையுமே இல்லை.

துரியோதன மன்னனது அரசசபையிலே, அறிவான் முதிர்ந்த பலரது சமூகத்திலே, ஏன்? - கணவன்மார் ஆகிய பஞ்சபாண்டவர்கள் மலைபோலக் கண்முன்னே பார்த்துக் கொண்டிருக்கவே அவர்களின் மனைவியாகிய திரெளபதியை மானபங்கப் படுத்தும் நோக்கமாக துச்சாதனனால் அவள் துகில்உரியப்பட்டாள். பாவம் - பெண்ணல்லவா, தன் ஒரு கையினால் சேலையைப் பற்றியபடி மார்போடு அணைத்துக் கொண்டு மற்றக் கையை மாத்திரம் உயர்த்தி, ஓ! கருணைக்கடலாகிய இறைவா! கண்ணபிரானே! தமியேனைக் காப்பாய்!' என ஓலமிட்டாள். அப்போதும் அவளது வஸ்திரம் உரியப்பட்டுக்கொண்டேயிருந்தது. பின்பு, உண்மையை உணர்ந்தாள். உடனே தன் இரு கைகளையும் உயர்த்திக் கொண்டு ஓலமிட்டாள். என்ன ஆச்சரியம்! அவளது சேலை உரியப்பட்டுக் கொண்டே இருந்தது. ஆனாலும் வெங்காயத்தின்தோலை உரித்துப் பார்க்க உள்ளே தோலிருப்பதுபோல, அவள் சேலை உடுத்தபடியே காணப்பட்டாள். இதுவே ஒருவன் ஆண்டவனிடத்தில் தன்னை முற்றாக ஒப்பிக்கும் நிலைக்குரிய விளக்கமாகும்.

அப்பர் சுவாமிகள் இறைவனால்ஆட்கொள்ளப்பட்டுச் சமணசமயத்தை விட்டு மீட்டும் சைவம் புகுந்தபின் சமணர்களது சூழ்ச்சியால் பல்லவ அரசனது கட்டளைப்படி காற்றுப்புகாத சுண்ணாம்பு அறையினுள்ளே அவரை இருத்தி அறையைப் பூட்டி விட்டார்கள். ஒரு சில மணி நேரம் அல்ல, ஒரு நாள் அல்ல ஏழு நாட்கள் அவரை அப்படியேகிடக்கும்படி வினை விளைத்தார்கள், பாவம் என்ன செய்வார்!

நாம் தாம்பூலந்தரிக்கும் போது வெற்றிலையிலே பூசும் சுண்ணாம்பு சிறிது அளவுக்கு அதிகமாகிவிட்டால் எமது வாயெல்லாம் வெந்து என்னபாடுபடுகிறோம். ஆனால் அப்பர் சுவாமிகளது உடல் முழுவதுமே காற்றுப்புகாத சுண்ணாம்பு அறையினுள் அடைத்தும் பூட்டி ஏழு நாள் கிடப்ப தென்றால் எப்படி இருக்கும் எனச் சிறிது சிந்திக்கவேண்டும்.

எட்டாவது நாள் அறையைத் திறந்துபார்த்தபோது அப்பர் பெருமான் ஆனந்தமாக வீற்றிருப்பதை யாவரும் கண்டனர்; திகைத்தனர். எப்படி அமைந்தது? அவர் தமக்கென ஒரு பற்றுமின்றித் தம்மை முற்றாக இறைவனிடத்தே ஒப்புவித்தார் என்ற உண்மையை அப்போது அவர் பாடிய திருக்குறுந்தொகைப் பாசுரத்தினால் அறியலாம். அப்பதிகத்தையும் அதன் விளக்கத்தையும் அறிந்து பயன் பெறுவோம்.

மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை
இணையடி நீழலே.

அப்பர் சுவாமிகளிடத்தே மெய்யன்புகொண்ட அடியார் ஒருவர், அவரை வணங்கி, சுவாமீ! இந்தப் பாவிகள் தங்களைக் கொடியஇந்த நீற்றறையிலே இருத்திப் பூட்டிவிட்டார்களே! சென்ற ஏழு நாட்களும்தங்கள்உடல் வேக, மனம் எப்படியெல்லாம் வருந்தியதோ?' எனக் கேட்டிருந்தால், அதற்கு வாகீசவள்ளலார் அளித்த விடையாக அமைந்ததேஇப் பாசுரத்தின் பொருளாம்.

அன்பரே! அப்படியா செய்தி? அதனைத் தமியேன் உணரவில்லையே! எனது அனுபவத்தைக் கூறுகிறேன் கேட்பீராக.

### எந்தை இணையடி நீழல்

செவிக்கு இதமான இன்பந்தரும் வீணாகானம், மாலைப்பொழுதினிலே தண்ணொளிபரப்பும் பூரண சந்திரோதயம் வீசுகின்ற இளந் தென்றற் காற்று. இளவேனில் பருவகாலம், ரீங்காரம் செய்யும் தேனீக்கள் பொருந்திய தாமரைத் தடாகக் கரை ஆகிய இவையாவும் ஒருங்கே அமைந்தால் எப்படியிருக்குமோ, அப்படியான ஆனந்தநிலையிலன்றோ, இரவுபகல் பேதம் உணர முடியாத எம்இறைவன் திருவடி நீழலிலே வீற்றிருந்தேன்.

'நமச்சிவாய'

என்னும் நன்னெறி
நமச்சி வாயவே ஞானமும்
கல்வியம்
நமச்சி வாயவே நானறி
விச்சையும்
நமச்சி வாயனே நாநவின்
றேத்துமே
நமச்சி வாயவே தன்னெறி
காட்டுமே.

'நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தே யான்கற்ற கல்வியும் அதனால் பெற்ற ஞானமும் ஆகும். இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என மூன்று வல்லமை

(12-ம் பக்கம் பார்க்க)

## முத்துச் செல்வம் (2)

# விலக்கப்பட்ட கனி

கசகசாச் செடிகள் பூத்துக் குலுங்கும் காட்சி கண்ணுக்கு ரம்மியமானது விவரிக்கமுடியாதகொடுமையான சோக உணர்வும் அதில் ததும்புகிறது. தொடுவானம் வரையில் பரந்து கிடக்கிறது கசகசாத் தோட்டம். செடிகள் ஆடியசையும்போது ஏற்படுகின்ற லயத்துடன் கூடிய ஊசலாட்ட ஒலியலைகளை காற்று காவிச் செல்கிறது. ஒரு கணம் நீங்கள் நின்று நிதானிப்பின் உடனடியாக இனம் புரியாத சஞ்சல உணர்வு உங்கள் உள்ளத்தில் எழவே செய்யும். உங்கள் மனக்கண் முன் முற்றிலும் பல்வேறுவகையான படங்கள் விரியும்.

மங்கலானசுருக்கம் நிறைந்த ஒடுங்கியமுகங்கள்... ஊசிமுனையளவுக்கு ஒடுங்கிப்போன பாவைகளையுடைய கண்கள்...காய்ந்துபோய் அகாலத்திலேயே நரைத்துவிட்டதால் வெண்தூசி படிந்தவையாய் காட்சிதரும் தலைமயிர். பழுப்பேறிய உலர்ந்த நகங்கள், வெளிறிப்போன தோல் ... மெலிந்த தேகம்... பிரதேசங்களை சொட்டும் அந்த மனிதனின் நடையில் தெரியும் இடறலும் தள்ளாட்டமும் அபின் பிரியன் ஒருவனின் பரிதாபகரமான தோற்றம்...இதுதான் கசகசாத்தோட்டத்தில் வளர்ந்து முற்றிய ''மெதுவாகச் சாவதற்கான'' நூற்றுக் கணக்கான ''டோஸ்''கள் அவனை ஒரு நடைப் பிணமாக்கிவிட்டன. அபின் போதைக்கு ஒரு தடவையேனும் ஆட்படுகின்ற மனிதன் பின்னர் தனது கைவசமுள்ள கடைசித்துட்டையும் அபினுக்காய் விட்டெறியுமளவுக்கு அதற்கு அவன் அடிமையாகிவிடுகின்றான்.

கிழக்குலகில் அபினைப் பரப்புவதில் மேற்கத்திய கலோனியல் வாதிகள் முக்கிய பாத்திரம் வகித்தனர். ஒடுக்கப்பட்ட மக்களிடையே இந்த ''விலக்கப்பட்ட கனி''யை உண்ணும் வழக்கத்தை அவர்கள் வேகமாக வளர்த்தனர். கனவுலகுக்கு ஆட்பட்டுப் போகும் மனிதன் ஒருவனால் அவனைச்சுற்றி நிலவும் அநீதியைக் காணமுடியாது. போராடுவதற்கான மனவிழைவோ அவனுக்கு ஏற்படாது. கலோனிஸியத்தின் பாசறையில் துப்பாக்கி, பீரங்கிகளுடன் மயக்க மருந்துகளும் சேர்ந்துகொண்டன. சீனாவைமட்டும் எடுத்துக்கொண்டாலே, கடந்த நூற்றாண்டில் இங்கு பிரித்தானிய வெள்ளையரால் புகுத்தப்பட்ட அபின் தின்னும் பழக்கம் பல லட்சம் மக்களின் ஆரோக்கியத்தை சீரழித்திருக்கிறது. போதை மாத்திரைகள் உண்ணுவது துரிதமாகப் பரவி வருகின்ற பாரசீகம், எகிப்து இந்தியா ஆகிய நாடுகளும் இந்தக் கபடக் கொள்கைக்கு பலியானவையே.

—...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் கவிநயம் – 2

# அண்ணன் ஆடும் கிளித்தட்டு

— இரசிகமணி கனக செந்திநாதன் —

எங்கள் கிராமங்களிலே முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால்கூட கிளித்தட்டு மறித்தல், கிட்டிப்புள் அடித்தல், வார்ஒடுதல், கெந்தி அடித்தல் முதலிய விளையாட்டுகளைச் சிறுவரும் வாலிபரும் விளையாடுவர். ஒருசதம் செலவுமின்றி உடல்களைக்க உற்சாகமாக விளையாடும்விளையாட்டுக்கள் இவை. பிறநாட்டு நாகரிகம் வந்தபின் கால்பந்து, கைப்பந்து, கிரிக்கட்போன்ற விளையாட்டுகள் நம் சிறுவரையும் வாலிபரையும் வசீகரித்துவிட்டன. பணம் செலவுசெய்து விளையாடும் விளையாட்டுக்கள் இவை. சுதேச விளையாட்டுகளைப் பற்றிச் சிந்திப்பதே அநாகரிகம் என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுவிட்டோம், இந்த நிலை மாறவேண்டும். மாற்றியே தீரவேண்டும்.

இந்த நினைவோடு எங்கள் நாட்டுக் கவிஞர் ஒருவர் பாடுகிறார். மற்றக் கவிஞர்கள் சிந்தியாத கிளித்தட்டு என்னும் விளையாட்டைப் பற்றிப் பாடுகிறார்.

பின்னேரம் ஐந்துமணி. நல்ல வேப்பமரத்து நிழலில் பத்துச் சிறுவர்கள் கூடுகிறார்கள். நாலுதட்டுகளாகக் கோடுகள் கீறப்படுகின்றன. நடுவிலே ஒருகோடு முள்ளி. ஐந்து ஐந்து பேராகப் பிரிந்துகொண்டார்கள். நான்கு பேர் கோடுகளில் நின்று மறிக்க தலைவர் முள்ளியில் நின்று விளையாட்டை ஆரம்பிக்கிறார்.

விளையாட்டு ஆரம்பமாகிறது. முள்ளியில் நின்ற தலைவர் நான்குபுறக் கோடுகளிலும் நடுக்கோட்டிலும்ஒடி விளையாடுகிறார். மற்ற நால்வரும் இறங்குகிற ஐவரையும் மறிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் எதிராக ஒவ்வொருவர் நின்று மறிக்கிறார்கள்.

கந்தையா இறங்கி விளையாடுபவர்களில் ஒருவன். பொன்னையா அவன் தம்பி வேப்பமரத்தின் நிழலில் நின்று அண்ணனின் விளையாட்டைப் பார்க்கிறான். சந்தோஷப் படுகிறான்.

அந்தச் சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்கிறான்; பாடுகிறான்.

கிளித்தட் டாடும்
அண்ணனைக்
கிட்ட நின்றுபார்க்கிறேன்

அண்ணன் எப்படியெல்லாம் விளையாடுகிறான் என்பதைத் தம்பி அடுக்கிக் கூறுகிறான்.

உன்னி உன்னி உச்சுறார்
உச்சி உச்சிக் குத்துறார்
முன்னும் பின்னும்
திரும்புறார்
மூலை வந்து தாவுறார்.

இவை மாத்திரமா? ஆளை உற்றுப் பார்த்து அலுப்புப் போலநடித்து. காளைபோலக் குதித்து என்னவெல்லாமோ செய்து பார்க்கிறார். வாய்க்கவில்லை. காரணம் நடுக்கோட்டிலே முள்ளியிலே தலைவர் அண்ணனை மறித்து நின்றதுதான். அரைவாசித் தட்டிலே அவரால் விளையாட முடியுமா? என்ன? முள்ளியில் நின்ற தலைவர் அடுத்த தட்டுக்குப் போய்விட்டார். கந்தையாவுக்கு வெகு புழுகம். ஒரே உச்சலில் உச்சிவிட்டார்.

கந்தையா ஒரே உச்சுதலில்போனது தம்பிபொன்னையாவுக்கு மகாசந்தோஷம். அந்தச் சந்தோஷத்தில் பாடுகிறான்.

துள்ளி ஓடத் துணிந்தவர்
முள்ளி ஓடக் கண்டதும்
தள்ளி நின்று பார்க்கிறார்
தட்டி உச்சிப் பழுத்தனர்.

பழம் என்றால் வெற்றி. வெற்றி முழுவெற்றியல்ல. பாதிவெற்றி. இறுதிக்கோட்டுக்கு அப்பாலே போனால் பாதிவெற்றிதான்.

அப்பால் நடந்ததையும் தம்பி பாடக்கேட்போம்.

ஒதுங்கிக் காய்கள்
நின்றன
ஒட்டம் அண்ணர்
பிடித்தனர்
பதுங்கி மறிக்க வந்தவர்
பதறச் சுழல ஆடுறார்.

தன்னை மறித்தவரைகுத்தி குதித்து ஏமாற்றி வென்றுவிட்டார். அப்பாலும் அபாயம் காத்திருக்கிறது. அதையும் அண்ணன் வென்றுவிட்டதாகத் தம்பி பாடுகிறான், கைதட்டுகிறான்.

காத்து முள்ளி நிற்குது
கையை நீட்டிப் பார்க்குது
பார்த்து அண்ணர்
உச்சுறார்
பழமும் கரையிற்
சேர்ந்ததே

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடக்கும் பாடல்களை ஒருசேரப் பாருங்கள். பாடச் சுலபமாக இருக்கும்.

கிளித்தட்டாடும்
அண்ணனைக்
கிட்டநின்று பார்க்கிறேன்
- நான்
கிட்டநின்று பார்க்கிறேன்

உன்னி உன்னி உச்சுறார்
உச்சி உச்சிக் குத்துறார்
முன்னும் ,பின்னும்
திரும்புறார்
மூலைவந்து தாவுறார்.

துள்ளி ஓடத் துணிந்தவர்
முள்ளி ஓடக் கண்டதும்
தள்ளி நின்று பார்க்கிறார்
தட்டி உச்சிப் பழுத்தனர்
கிளித்தட்டாடும்
அண்ணனைக்
கிட்டநின்று பார்க்கிறேன்
- நான்
கிட்டநின்று பார்க்கிறேன்
ஒதுங்கிக் காய்கள் நின்றன
ஒட்டம் அண்ணர்
பிடித்தனர்
பதுங்கி மறித்து வந்தவர்
பதறச் சுழல ஆடுறார்
காத்து முள்ளி நிற்குது
கையை நீட்டிப் பார்க்குது
பார்த்து அண்ணர்
உச்சுறார்
பழமும் கரையிற்
சேர்ந்ததே,

— (கிளித்)

இந்தக் குழந்தைக் கவிதையில் கிளித்தட்டு விளையாட்டில் பேசப்படும் உன்னுதல், உச்சுதல், குத்துதல் முதலிய சொற்களும், காய்கள், பழம், முள்ளி, முதலிய பரிபாஷைச் சொற்களும் வந்து கவிதையை உயர்த்துகின்றன. சிறிய பையன பேசும் மொழியில் கவிதை பாடப்பட்டிருப்பது இன்னொரு விசேடமாகும்.

'கவியரங்குகளிற்புகழ்பெற்றவரும், இலக்கிய உலகில் சிட்டுக்குருவி, கீரிமலையினிலே, ஏனிந்தப்பெருமூச்சு என்ற கவிதை நூல்களை ஆக்கியவருமாகிய கவிஞர் வி. கந்தவனத்தின்குழந்தைப் பாடல் இது. வெகுவிரைவில் அவரது குழந்தைப் பாடல்தொகுதி வெளிவர இருக்கிறது.

# லூயி பாஸ்டர்

( எவெலின் ஆட்வூட் )

பிரான்ஸ்நாட்டின் கிழக்குப்பகுதியில் சுவிர்ஸ்லாந்தின் கரைப்பகுதியோடு 'ஜூரா' எனப்படும் மாகாணம் அமைந்துள்ளது' அங்கேயுள்ள சலின் என்ற கிராமத்தில்தான் எமது கதை ஆரம்பமாகின்றது.

1815-ம் ஆண்டு வாட்டர்லூ யுத்தம் முடிந்தது, நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டான். போர் வீரர்கள் சோர்வோடு வீடு திரும்பிவிட்டனர். உலகத்தின் தலைவிதியை மாற்றியமைப்போம் என எழுந்த தலைவரதும், அவர்களது போர்வீரர்களதும் முயற்சி பயனளிக்காது போயிற்று.

சாலின் நகரத்தின் மேயர் ராஜகுடும்பத்தை ஆதரிப்பவராகையால் இத்தோல்விக்குக் கருணை காட்டாதிருந்தார். எனவே நெப்போலியனை ஆதரித்துப் போர் செய்த போர்வீரர்கள் தங்கள் வாள்களைத் திருப்பித் தம்மிடம் கொடுக்கவேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தார்

இவர்களுள் ஜீன் ஜோசப் பாஸ்டரும் ஒருவர். மனவருத்தத்தோடு தமது வாளைக் கொடுத்தார் யுத்தத்தின்போது பல சாகசங்களைச் செய்துகாட்டிய இந்த வாட்களை மரியாதைசெய்ய வேண்டியதற்குப் பதிலாக வேறு உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளப் போகிறார்களே என அவரதுமனம் வெதும்பியது. அவர் தமது வாளை ஏக்கத்தோடு பார்த்தார். எத்தனையோ ஆபத்துக்களில் அவரைப் பாதுகாத்துள்ளது இந்த வாள். நண்பன்போல நின்று பகைவர்களை வெட்டி வீழ்த்தியது.

பிரான்சிய மேயரைவிட அவுஸ்திரேலிய ராணுவ அதிகாரி தாராளமான மனப்பான்மையுடையவராகையால் வாளைத்திருப்பிக் கொடுத்து விட்டார் பாஸ்டர் வாளைப் பெற்றுக் கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார்.

பாஸ்டர் யுத்தத்தில் எவ்வளவோ அனுபவங்களைப் பெற்றாலும் அவருக்கு வயது 25தான். யுத்தம் முடிவடைந்துவிட்டதால் வாழ்வதற்கு உழைக்க வேண்டும். அவர் நல்ல உழைப்பாளி. அவர் எந்த வேலையைச் செய்தாலும் நன்றாகவும், அவதானமாகவும் செய்வார். இது அவருடைய முழு வெற்றிக்குக் காரணமாகும்.

பாஸ்டர் தனது தந்தை பாட்டனார் செய்துவந்த தோல்பதனிடும்தொழிலையே செய்யஎண்ணினார்.

இவர் இருந்த வீட்டிற்கருகில் ஒரு சாதாரண குடும்பம் இருந்தது. அவர்களுடைய தொழில் கமம்செய்தல். அவர்களுடைய தோட்டத்தில்ஓர் இளம்பெண் ஒவ்வொரு நாளும் சுறுசுறுப்பாக வேலைசெய்வதை பாஸ்டர் தமது வீட்டிலிருந்தபடியே கவனித்துவந்தார்.

சிலநாட்கள் செல்ல பாஸ்டர் அப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அவளுடைய பெயர் ஜீனே எட்டினெற்றேகுயி. திருமணமான பின் அந்த வீட்டில் அமைதியும் சந்தோஷமும் நிலவின. இளந்தம்பதியரின் வாழ்க்கை மிக்க இன்பமாகக் கழிந்தது.

பல குழந்தைகள் பிறந்தன. அவர்களுள் ஒருவராக எமது கதாநாயகனை லூயி பாஸ்டர்1822 ல் பிறந்தார். விஞ்ஞான அறிவில் மேம்பட்டு விளங்கவேண்டும் என விரும்பினார். தமது தந்தை யுத்தத்தின்போது எவ்வளவு நன்றியுணர்ச்சியோடு ஒத்துழைத்தாரோ-நாட்டின் அமைதிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் எவ்வளவு பாடுபட்டாரோ அதேபோல பிற்காலத்தில் இவரும் விஞ்ஞானத்தில் சிறந்து விளங்கினார்.

(தொடரும்)

சிந்தனைச்சுருள் [2]

# சங்கற்பத்தின் முதல் வெற்றி

காலை ஐந்து மணி!

உற்சாகம்நிறைந்த காலைப் பொழுது!

உயிரினங்கள் உற்சாகத்துடன், உள்ளத் தெளிவுடன் புறப்படும் நேரம் மட்டுமல்ல இயற்கைகூட அழகையும், நறுமணத்தையும் அள்ளிச் சிந்தும் ரம்மியமான நேரம்!

இக்காலைப் போதில் படுக்கையை விட்டு எழுபவர் எத்தனைபேர்?

சூரியனின் கதிர்கள் உடலிலே பட்டு உறைக்கும்வரை போர்வையை இழுத்துப் போர்த்தபடி புரண்டு புரண்டுபடுப்பவர்கள் பலர்! அவர்களைப் படுக்கையை விட்டு எழுப்புவதற்குள் பேதும் போதும் என்றாகிவிடும்.

எமது சங்கற்பத்தில் முதன் முதலாகக் காலையில் எழும் நேரத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆரம்பத்தில் ஐந்துமணிக்கு எழுவது கஷ்டமாகத்தான் இருக்கும்.

ஆனால்—,

எழும் நேரத்தை ஒரு பழக்கத்திற்குக் கொண்டு வந்துவிட்டால் நாளடைவில்—

வழக்கமான அந்நேரத்தில் எம்மையறியாமலே எழுந்துவிடுவது சாத்தியமாகிவிடும். நமது முயற்சியே நமக்குப் பயன்தரும் வரப்பிரசாதமாகிவிடும்.

நமது முதல்வெற்றி முழுவெற்றியாக மட்டுமல்ல, நாம் எடுத்துக்கொள்ளப் போகும் ஒவ்வொரு முயற்சிக்கும் ஆரம்ப வெற்றியாக நமது. உற்சாகத்திற்கும் தன்னம்பிக்கைக்கும் திறவுகோலாக அமையமுடியம் என்பதில் சந்தேகம் இல்லை

## காலையில் எழுந்ததும்

பெட் கோப்பி—!

இப்பானத்தின் மணம் உறக்கத்திலிருந்து உரியவர்களை எழுப்பியதும் அதன் சுகத்தில் எழுந்து பல் துலக்காமல் அதை வயிற்றுக்குள் இறக்கிவிட்டுத்தான் சிலர் அசையத் தொடங்குகிறார்கள்,

இன்னும் சிலரோவெனில் படுக்கையால் எழுந்ததும் எழாததுமாக ஓடிப்போய் குசினிக்குள் புகுந்துகொண்டால் அம்மா கலக்கித்தரும் கோப்பியைக் குடித்துவிட்டுத்தான் வெளியே வருவார்கள்.

இதனால் எத்தனை தீமைகள் ஏற்படுகின்றனவென்று கொஞ்சமாவது நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

பல்லீறுகளில் அழுக்குகள், கிருமிகள் உறைந்திருக்கும் போது, சுத்தம் செய்யாத வாயுடன் நீர் பருகினால் அத்தனை அசுத்தமும் நம் உடம்பில் சென்றுதானே சுவறிவிடுகின்றன. நாளடைவில் அதைத்தொட்டு எத்தனை எத்தனை வியாதிகள் நம் உடம்பைப்பீடிக்க ஆரம்பித்து விடுகின்றன.

இதற்கெல்லாம் காரணமாக நாமே விளங்கலாமா? கூடவே கூடாது!

ஆதலால்—,

காலையில் எழுந்ததும் காப்பிக்குப் பதிலாக இரண்டு கிளாஸ் குளிர்ந்தநீர் அருந்துங்கள். அதன்பின் வீட்டைச்சுற்றி இரண்டு தரம் ஓடுங்கள். புதிய உற்சாகத்தைக் காணுவீர்கள்!

—நீலா

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தை பாதிக்கும் தீமைகள்!


**எமது வாழ்கையைப் பாதிக்கும் காபரேக் 'ஜாம்செஷன்ஸ்' காட்சிகள், வன்செயல்கள், சினிமா ஆகியன பற்றி சிறந்த சமூக சேவகியான திருமதி லீலாவதி முன்ஷி 'பவான்ஸ் ஜர்னலில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்குதரப்படுகிறது.**

எமது வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கியமான சில அம்சங்கள் இப்பொழுது நம் சமூகத்திலே காணப்படுகின்றன. அவற்றைப்பற்றி என் மனத்தில் தோன்றும் சிந்தனைகளை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். அவை அரசியலோடு தொடர்புடையனவல்ல. உங்கள் அரசியற்கொள்கை யாதாக இருப்பினும் அவ்வம்சங்கள் உங்கள் யாவரையும் பாதிக்கின்றன. நீங்கள் யாவரும் மனைவியாகவோ, தாயாகவோ, சகோதரியாகவோ இருகிறீர்கள் நமதுகுடும்பத்தைப் பாதிக்கும் தீமைகளை நாம் முதலிற் கவனிக்க வேண்டுமென்பதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள்

கேடு விளைவிக்கும் பல தீங்குகள் எம்குடும்பங்களைத் தாக்குகின்றன. முன்னேற்றம் என்னும் பெயரினல் அத்தீங்குகள் வளர்க்கப்படுகின்றன.

**காபரேக் காட்சிகள்**

முதலாவதாக, காபரேக் காட்சிகளைப்பற்றி நான் கூற வேண்டும். அங்கு மங்கையர் தம் ஆடைகளை ஒவ்வொன்ருக அகற்றுவர். ஆடையற்ற மங்கையர் பல வகையான குறும்புகளைச் செய்து கொண்டு அங்குவரும் ஆண்களோடு பழகுவர். மதுபானம் ஆண்களுக்கு மட்டுமன்றிப் பெண்களுக்கும் வழங்கப்படும். பெண்களும் அதனைவிரும்பிப்பருகுகின்றனர். எனவும் அறிகிறேன். இந்த காபரேக்காட்சிகளில் ஆண்களையும் விரைவில் ஈடுபடச் செய்வரென அறிகிறேன். குறைந்த ஆடையணிந்த ஆண்கள் தங்கள் மனைவியரோடு பழகுவதைக்கண்டு அவர்கள் கணவன்மார் மகிழ்ச்சியடைவார்களோ என்பதை நான் அறியேன்.




சில பத்திரிகைகளில் இத்தகைய காட்சிகளுக்கான விளம்பரங்கள் வெளிவருகின்றன. ஆடையற்ற மகளிரைப் பல்வேறு கோணங்களிற் காட்டும் படங்களை இவ்விளம்பரங்கள் கொண்டுள்ளன. இந்திய மகாராஷ்டிர அரசாங்கங்கள் இத்தகைய காட்சிகளுக்கும் விளம்பரங்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்குவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

**ஜாம்செஷன்ஸ்**

இளம் வயதினருக்காகவும் இத்தகைய காட்சிகள் நடாத்தப்படுகின்றன, அவற்றை 'ஜாம்செஷன்ஸ்' என அழைக்கிருர்கள். இவற்ருல் இளம் வயதினர் நடனமாடவும் மதுபானம் அருந்தவும் பழகிக்கொள்கிருர்கள்.

**மேல்வகுப்பினரின் ஆர்வம்**

எமது சமூகத்தில் முன்னேற்றமடைந்துள்ள மேல்வகுப்பினர் எனக் கூறப்படுபவரே இவற்றிற் பேரார்வம் காட்டுகின்றனர். பிற நாட்டவர் எதனைச்செய்கிருர்களோ- 'முன்னேற்றம்' என்னும் பெயரால் தாமும் அதனைச் செய்யவேண்டுமென விழைகிருர்கள். கலாசாலையில் மாணவிகளும் பள்ளிக்கூட மாணவிகளும் இளைஞரோடு தேதிகுறித்துச் செல்லத்தொடங்கிவிட்டார்கள். திருமணத்துக்கு முன் அனுபவம்வேண்டுமென அவர்கள் எண்ணத்தலைப்பட்டுவிட்டார்கள் சினிமாவின் வாயிலாகவே இவ்வெண்ணங்கள் தோன்றி அவர்கள் மனங்களை நிரப்புகின்றன தம்மிலும் பார்க்க வயதாற் கூடியவர் அனுபவித்து மகிழ்வதைத் தாமும் அனுபவித்து மகிழ்வதில் தவறில்லையென அவர்கள் எண்ணுகிருர்கள்.

**வன்செயல்கள்**

எமது குடும்பங்களை அச்சுறுத்தும் இன்னேர் ஆபத்தும் உண்டு. சமூகத்தில்

— லீலாவதி முன்ஷி —

எல்லா நிலையில் இருப்பவர்களிடையேயும் முக்கியமாகப் படித்தவர்களிடையே பரவிவரும் வன் செயல்களே அவ்வாபத்தாகும் அரை அறிவு படைத்தவரும். படித்துவிட்டுத் தொழிலின்றி நிற்பவரும் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றனர். எமது கல்வித்திடமும் இந்நிலைக்கு ஒரு காரணமாகும். தம் உடம்பால் உழைக்க அவர்கள் விரும்புவதில்லை. குஷியான உத்தியோகங்களையே தேடுகிருர்கள். அவை கிடையாதுவிடின் வெடிகுண்டுகள் செய்யவும், யன்னல்களை உடைக்கவும், வீடுகளை எரிக்கவும் பொதுச்சொத்தை அழிக்கவும், இரகசியச் சங்கங்களை அமைக்கவும் கற்றுக்கொள்கிருர்கள். ஒழுக்கமற்றவர்களாவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. பொய்பேசவும், கொலை செய்யவுங்கூட அவர்கள் அஞ்சுவதில்லை. சமூகத்துக்கு அவர்கள் வேண்டப்படாதவர்களாகின்ருர்கள்.

சினிமாவிலிருந்தே இளைஞர் பலர் குற்றங்களைப்பற்றியும் பாலுணர்ச்சியைப் பற்றியும் பல கருத்துக்களை அறிந்துகொள்கிருர்கள். இப்பொழுது எவ்விடத்திலும் படங்காட்டுமிடங்கள் தோன்றிவிட்டன. சிறுவர் சிறுமியரே சினிமா பார்ப்பதில் அதிக ஆர்வங் காட்டுகின்றனர். பெற்ருேரும் எவ்விதமான படத்துக்கும் தங்கள் குழந்தைகளையும் கூட்டிச் செல்கின்றனர். தாம் வெளியிற் செல்லும்போது தங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு ஒருவரும்இல்லாமையிஞலேயே அவர்கள் அங்ஙனம் செய்கின்றனர்.

சில ஆண்டுக் காலத்தில் நமது நாட்டை ஆளப்போகும் இளைஞரின் மனங்கள் முழுவதும் வேண்டத்தகாத பாலுணர்ச்சியைப் பற்றிய எண்ணங்களாலும் குற்றம் முதலியன பற்றிய விரும்பத்தகாத கருத்துக்களாலும் நிறைந்திருக்கின்றன.

பொருள்களின் விலைகள் உயர்வதனுலும் பொருளாதாரத் தேவைகளினலும் பெண்கள் பலர்தொழில்கள் பார்க்கச் செல்கின்றனர். பிள்ளைகள் வீட்டுக்கு வரும்போது அவர்களைவரவேற்று வேண்டியன கொடுப்பதற்கு வீட்டில் தாயில்லை. வேலை செய்து களைத்து வீட்டுக்கு வருகிருள் மனைவி. தொழிலகத்திலிருந்து திரும்பும் கணவனுக்கு வேண்டியதைச் செய்யவோ ஒரு புன் சிரிப்புத்தான் காட்டவோ அவளால் முடியவில்லை. இது வேருெரு பிரச்னை.

நம்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் வன் செயல் பரவிவருகிறது. நம்இளைஞரிடையே இது பரவும்படிநாம் விட்டு விடுவோமாயின், நம் நாட்டைக்காப்பாற்ற இறைவனுலும் முடியாது

(13 -ம் பக்கம் பார்க்க

# உள்ளம் தெளியத் தியானம் வேண்டும்

— டாக்டர் ஜோனக் மாத்னர் —

திருமணமானவுடன் 'தனிக்குடித்தனம்' நடத்தி குஷியாக இருக்க வேண்டுமென்று கனவு காண்கிற இளம் ஜோடிகளுக்கு ஓர் எச்சரிக்கை. தனிக்குடித்தனம் நடத்தும் பெண்களுக்கு நாளடைவில் சலிப்பும் தவிப்பும் ஏற்படுவதற்கு. 'தனிக்குடும்ப சூழ்நிலையே' காரணம் என்று ஜெர்மன் நிபுணர்கள் கருதுகிருர்கள். பழையகாலக் கூட்டுக் குடும்பத்தில் கலகலப்பும், அமைதியும் அதிகமிருந்தது என்பதை இவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இன்றைய நாகரீக உலகில் ஒருவித உள்ளத்தவிப்புடன் மனக்குழப்பத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள் ஏராளம். 'இனம் தெரியாத ஏதோ ஒன்று அவர்களின் உள்ளங்களைக் கவ்விப் பிழிந்து கொண்டிருக்கும். மூளைக் கோளாறு அல்ல இது. இவ்விதம் உள்ளக் கோளாறுகளிஞல் தவிப்பவர்களின் உள்ளங்களில் புதைந்துள்ள 'ரகசியங்களை'த் துருவித் துருவி ஆராய்ந்து பரிகாரம் காண மனோதத்துவ நிபுணர்கள் முயல்கிருர்கள். அலுவலகத்தில், குடும்பத்தில், நெருங்கிய உறவினர்கள் நண்பர்களிடத்தில் நடந்துகொள்ளும்விதம் சிறுவயது ஆசைகள். அவை நிறைவேருமல் ஏற்பட்ட ஏமாற்றம் ஆகியவற்றை இந்நிபுணர்கள் கேட்டறிவார்கள் யாரிடமாவது தனது மனக்குமுறலைக் கொட்டிவிட்டால் போதும். அவர்களின் மனத்தை அழுத்திக்கொண்டிருக்கும்பாரம் வெகுவாகக் குறைந்துவிடும். இவ்வித மனோதத்துவ ஆய்வு முறையை சிக்மண்ட் பிரீட் உருவாக்கினர். சமீபகாலம் வரைக்கும் மனோதத்துவ நிபுணர்களிடம் சென்று சிகிச்சைபெற பல மாதங்கள் பிடிக்கும். இவர்களின் உள்ளத்தில் புதைந்துள்ள காரணத்தை அறிந்து அதற்குத் தகுந்த பரிகாரம் கூறுவதற்கு இப்போதெல்லாம் சில வாரங்களே பிடிக்கின்றன. இவ்வித சிகிச்சை முறை இப்போது அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் மற்றும் பிற நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது.

**'தவிக்கும் உள்ளம் அமைதியடைந்து ஆற்றல் பெற 'தியானம்' செய்வது ஒரு சிறந்த வழி...''**

மூளைக்கோளாறுக்கும், இவ்வித உள்ளத் தவிப்புக்கும் சம்பந்தமில்லை. உள்ளத் தவிப்பு காரணமாக உடற் கோளாறுகளும் ஏற்படுகின்றன. உள்ளத்தவிப்புக் காரணத்தை அறிந்து நோயாளியிடம் தெரிவித்து அதனைத் தவிர்க்கச் சொல்லிவிட்டால், உடல் கோளாறுகளும் நாளடைவில் மறைந்துவிடும்.

இன்றைய நாகரீக உலகில் தனிப்பட்டவர்களைவிட, இன்றைய சமுதாயமே மனக்குழப்பத்தில் மூழ்கிக் கிடக்கின்றது, சமுதாயமே ஒரு நோயாளியாகிவிட்டது என்று ஜெர்மன் மனோதத்துவ நிபுணர் பேராசிரியர் விசன்ஹட்டர் கூறியிருக்கிருர். தனிநபர்கள் கூட்டத்தையும் சிந்தனைச் சிற்பிகள், தானியங்கி இயந்திரங்களையும் வெறுக்கிருர்கள். இவ்வித மனக்குழப்பத்தை தவிர்ப்பதற்கான வழிகளில் ஒன்று, பாரதத்தில் கடைப்பிடிக்கப்படுகின்ற 'தியானமுறை' என்று போசிரியர் டூர்ஹீம் என்ற நிபுணர் கருத்து தெரிவித்துள்ளார்.

இன்னும் சிலர், விடுமுறையில்கூடச் செல்ல மறுக்கிருர்கள். அவர்கள் இன்றி வேலை சீராக நடந்து விட்டால் எங்கே தங்களைப் புறக்கணித்துவிடுவார்களோ என்ற அச்சம் இவர்களுக் காரணம், எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதற்கும் இதுவே காரணம். இன்றைய சிறு குடும்பத்தில் வாழுகிற பெண்களுக்கும் உள்ளத்தவிப்பு உண்டு. அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பத்தில் சலசலப்பும் மகிழ்ச்சியும் நிரம்பி இருந்தன. இப்போது தனிக்குடித்தனத்தில் குறைந்து விட்டது என்கிருர் ஜெர்மன் நிபுணர்.

## அழகுக் குறிப்புகள்

அரைப்படி அரிசியோடு ஓர் ஆழாக்கு பாசிப்பயறையும் கலந்து நன்ருய் அரைத்து வைத்துக் கொண்டு, அதோடு சிறிது சீயக்காய், வெட்பாலரிசி, கஸ்தூரி மஞ்சள் இவற்றை நன்ருக இடித்துப் பொடிசெய்து கலந்து வைத்துக்கொண்டு தினம் ஒருசிறு கரண்டியளவு மாவு எடுத்து உடம்பில் தேய்த்துக் குளித்தால் அழுக்குப் போவதோடு உடலில் ஒருவித நறுமணமும் வீசும்,

0 0 0

சுக்கை நன்ருக இடித்து தலையில் பற்றுப் போட்டுக் கொண்டால் தலைவலி போகும்.

0 0 0

தூங்கச்செல்வதற்கு2மணி நேரத்திற்கு முன்பே சாப்பிட்டுவிடுங்கள். படுக்கைக்குப் போகுமுன் ஒருடம்ளர் வெதுவெதுப்பான வெந்நீர் குடியுங்கள். மலச்சிக்கல் குணமாகும்.

— கற்பகம்

உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளைப் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை [வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னுதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நூல் நிலையம்

**செழுங்கமலச் சிலம்பொலி**

ஆசிரியர்: க. வீரகத்தி
வெளியீடு:
வாணி கலைக்கழகம்,
கரவெட்டி.
விலை ரூ. 2-25

என்னிதயத் தூடுருவி
ஏதம் செய்த
எரிபண்பு களையெல்லாம்
அறக் களைந்து
தன்னரிய தியாகத்தால்
நோன்பி னாலே
தண்மையுறச் செய்துவிட்ட
பெண்மைத் தெய்வம்!
பொன்னனைய புதல்வர்க்குப்
பொலிவை யூட்டி
புகழ்விளக்கம் தந்துநிற்கும்
மனை விளக்கம்
என்னருமை மனைவிக்கு
இது காணிக்கை
இளமுருகின் சிலம்பொலியும்
இதனை வாழ்த்தும்.

என்ற அழகான காணிக்கைக் கவிதையுடன் ஆரம்பமாகின்றது. பழம்பெரும் எழுத்தாளர் பண்டிதர் வீரகத்தியின் 'செழுங்கமலச் சிலம்பொலி' என்னும் கவிதைநூல்

'வாணியெனுந்தோணியிலே
வாழ்க்கைப் பெருங்கடலில்
ஞான உலாவருவேன் நான்'

என, இறந்து சித்திரமாகி விட்டபின்னும் சொல்லாமல் சொல்லும் ஆசிரியர் தம் வாழ்க்கைத் துணைவியாரின் அழகுப்படத்தை முதற் பக்கத்தில் தாங்கி வெளிவந்திருக்கும் இக்கவிதைநூல் 'கந்தன் கருணை', 'வல்லவன் பாதம் வாழ்வு வழங்கும்' 'குமரலீலை' போன்ற தலைப்புகளில் கந்தன் பெருமையைப் பொதுவாக அறிமுகப்படுத்துவதோடு அவனுக்கென்று நமது நாட்டில் கட்டிக் கொடுக்கப்பட்ட அறுபடை வீடுகளைப் புதிதாகவும் அறிமுகப்படுத்துகிறது. கல்லால் உருவான அந்த ஆறுபடை வீடுகளோடு மற்றும் கரவைத்தாளங்குழி மயிலிட்டி காசநோயாளர்வைத்தியசாலை, பேராதனை போன்ற இடங்களில் குடிகொண்டுள்ள முருகன் கோவில்களும் காலத்தால் அழியாத ஆசிரியர்தம் கவிதைகளால் மெருகேறிச்சிறக்கின்றன. மாவையைப்பற்றிப் பேசுங்கவிதைகளில் மிருக இயல்பைநீக்கி மனித இயல்பைக் கொடுக்கு முருகனின் தன்மை, நவநீத கிருஷ்ணபாரதியாரின் நற்றமிழ்வண்மை, வெப்புதவிர்க்கும் அவ்வூர் வெற்றிலையின் திண்மைகளெல்லாம் இடம்பெற்று மாவையைச் சிறக்க வைப்பதோடு பண்டிதர் தம் பாவையும் சிறக்க வைக்கின்றன. இதுபோலவே சந்நிதி, நல்லூர்போன்ற ஏனைய ஊர்களும் அவ்வூர் முருகனோடு எழிலுறச் சித்தரிக்கப்படுகின்றன. அதேவேளையில் மனித இயல்பு கொடுக்கின்ற மாவை முருகனின் கோபுர வாசலிலே இன்று மனிதன் தன்இயல்புநீங்கிநிற்கும் அவலம், வாழப் பிறந்த மனிதரெவாம் கண்ணீர்சிந்திநிதம் ஊழைபோடும் பரிதாபம், அரசியர் செய்குன்றம் அமைத்துவிளையாடி மகிழ்வது போல் பணக்காரர் ஜனநாயகத்தை உருவாக்கிப் பயன் பெற்று மகிழ அதைப் பார்த்து தினமும் ஏங்கிப் பெருமூச்சுவிடும் ஏழைகளின் துயரம் போன்ற சமுதாயக் குறைபாடுகளும் இந்நூலில் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்படுகின்றன. 'காசம் நாசம் செய்யாதே' என்று கூறும் கவிதைகள் மயிலிட்டி வார்ட்டில் கிடந்து புரளும் காச நோயாளரின் கஷ்டங்களைக் கண்கலங்கச் சித்தரிப்பதோடு ''வெப்பொடு...... பித்தம்... வந்து நலியா...'' என்ற சம்பந்தர் தம் தேவார வரிகளை நினைவூட்டி, திமிர்ந்த ஞானச்செருக்கோடு திகழ்கின்றன. 'எல்லோரும் இன்புற்றிருக்க' என்ற தலைப்பில் வரும் கவிதைகள் புதியதொரு சோஷலிசத்தை அறிமுகப்படுத்தி எம்மை இன்புறவைக்கின்றன. இன்னும் மாவையிலுள்ள தொழில் ஆலைகளினால் உண்டாகும் புகை வானத்தை மறைக்க அது கண்ட பக்தர்கள் மழைவரப் போகிறதென்றஞ்சித் தம் குடைகளை விரிக்க அதைப் பார்த்து அவ்வூர் மங்கையர் சிரிப்பதாகவும். மயிலிட்டி வார்ட்டில் 'மருந்துவத்தங்கச்சிகள்' குருத்துவிரல்களில் ஊசிகொண்டு குத்தவரும் பொழுது நோயாளர்முன் முருகன் சிரித்தமுகத்துடன் அபயமளிக்கத் தோன்றுவதாகவும் பேராதனையில் மிளகு தின்ற குரங்கு, அதனால் ஏற்பட்ட உறைப்பை எருமைகளின் பாலைக்குடித்துப் போக்கிக்கொள்வதாகவும் சொல்லப்படும் நகைச் சுவைக் கற்பனைகள் நம்மை வாய்விட்டுச் சிரிக்கவைக்கின்றன.

இவ்வாறு, முருகனை இரவு பகலாகத்தோத்தரிக்கவிரும்புவோர், ஈழத்து மண்வாசனையை இலக்கியங்களில் எதிர்பார்ப்போர், இசைக் கச்சேரி செய்வோர், இனிய சோஷலிசம் பேசுவோர் எல்லோர்களுக்கும் விருந்து வைத்து அழகு முருகனிடம் ஆசைகொள்ள வைக்கும் அழகு தமிழ் கவிதைகளை உள்ளடக்கிய இந்நூல் அட்டையிலும் அவன்றன் அழகுக் கோலத்தை தாங்கிவந்திருந்தால் இன்னும் அழகாகத் திகழ்ந்திருக்கும் எனலாம்.

என்றாலும் சக்தியைப் பிரிந்து சஞ்சலமுறும் ஆசிரியர் வீரகத்தியின் இதயத்திற்கு சாந்தியளிக்கத்தோன்றிய இச்செழுங்கமலச் சிலம்பொலி நம் சஞ்சலங்களைப் போக்கி நம் மனதிற்கும் சாந்தியளிக்குமென நிச்சயமாக நம்பலாம்.

— புலவர்.

**நூல்: வரதர் மாணவரின் அகராதி.**
[ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ்]
வெளியீடு: வரதர்வெளியீடு.
226, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
விலை: ரூபா 5 00

ஆங்கிலபாஷை உலக பாஷை என்றும் முதன்மை குன்றாது எக்காலத்திலும் திகழும் எனலாம். அப்பாஷையின் முக்கியத்துவத்தை அறிந்து ஆங்கிலத்தை ஒரு கட்டாய பாடமாக மாணவர்களுக்கு 3-ம் வகுப்பிலிருந்து பாடசாலைகளில் போதிக்கப்படுகின்றது.

நவயுகத்தில் வரவிருக்கும் அறிஞர்களையாக்குவதற்காக நவநவமாய விவேக புத்தகங்களைக் கல்வித்திணைக்களப் பாடநூற் சபையினர் ஆக்கி வெளியிடுகின்றனர். அந்நிய பாஷையில் வளங்காண - தேர்ச்சிபெற நல்லாசிரியரின் கருத்துவிளக்கம் ஆரம்பத்தில் அவசியம். 8-ம் வகுப்புக்குமேல் சுயமுறையில் தம்மைத்தாம ஆக்கிக்கொள்ள தகுதியுடைய மாணவன் அவசியம் அகராதி பாவிக்கவேண்டும் என பாவிப்பதற்குப் பலபல ஆங்கில — ஆங்கில — தமிழ் அகராதிகள் தந்தோர் பலர்.

கடினபதங்கள்எதிர்ப்படும் பொழுதெல்லாம் தேவையான பொருளறிய தன்னுடன் எந்நேரமும் அகராதியைக் காண்கிறதாகப் பிறர் கண்ணில் பட்டுவிடுமோ என்றும் கூச்சப்படுவோருமுளர். அவ்வித கூச்சமெதுவுமின்றி எங்குற்றாலும் அங்கெல்லாம் தன்னுடன் கொண்டுசெல்லக்கூடியதாய் சாதாரணபுத்தக வடிவத்தில் கையடக்கமாய் நல்ல அமைப்புக் கட்டுடனும் வெளியிட்டிருக்கும் விவேகம் மெச்சுதற்குரியது.

அகராதியின் அனுபந்தம் போல் வினையடிகளின் காலமாற்றம், இடைச் சொற்களுடன் வினையடிகள், மரபும் இலக்கணமும் லத்தீன், பிரஞ்சுபோன்ற அந்நிய பாஷைகளின் வார்த்தைகளும்இலக்கியங்களும் சாதாரணமாய் பாவிக்கப்பெறும் சுருக்கங்கள் ஆதியனவும் சேர்க்கப் பெற்றுள்ளன.

நீண்ட நாள் சிந்தித்து அநுபவத்தில் கைவந்த பல கல்விமான்களின் யோசனையில் வெளியிடப்பெற்றுள்ள வரதன் அகராதி தமிழ் பாஷை உள்ள இடமெல்லாம் மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் என்றும் பாவிப்பதற்குரியது.

என் ரி

## சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தைமட்டம் தட்டிவிட்ட அந்த அல்ஷேசன் நாயைத் திட்டித்தீர்த்து, என் தலைவிதியைநானே நொந்துகொண்டேன். நான் தற்கொலைசெய்யப் புறப்பட்ட நேரம்சரியில்லைப்போலும்!

சரி, சரி — யாழ்தேவி எங்கே போய்விடப்போகிறது? கொழும்புக்குப் போனால் திரும்பவும் நாளை மதியம் யாழ்ப்பாணம்திரும்பத்தானேவேண்டும்.

'சொக்கண்ணை, அப்போதை வடை திண்டிட்டு மிச்சக்காசை விட்டிட்டுப் போட்டன்' — என்றுகூடு மிகுதிப்பணத்தையும் பெற்றுக்கொண்டு வீடு நோக்கினேன்.

என்றாலும் எனக்கு உயிர் ஒரு ... ...,

(யாவும் கற்பனை)

# "புது உலகு"

(9ம் பக்கத் தொடர்ச்சி)

—இப்படி அந்தப் புது உலகைப்பற்றி அவர் சொல்லிக்கொண்டிருந்தார். அந்த உலகை என் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துவது போல் இருந்தது அவர் விளக்கம்!

### இளைஞர்களுக்கு இடமுண்டா?

''இளைஞர்களுக்கு இந்தப் புது உலகில் இடம் கிடைக்குமா?''— நான் கேட்கிறேன்.

''நிச்சயமாக! இளைஞர்களை இந்தப் புது உலகில் சேர்த்துக்கொள்வதையே அம்மையார் பெரிதும் விரும்புகிறார்கள். காலம் மாற மாற இளைஞர்கள் போக்கு திசைதிரும்பிக்கொண்டு போவதுடன் பலவிதமான தீய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இப்படியான நிலை மாறி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க இளைஞர்களுக்கு இந்த உலகில் இடமுண்டு, ஆனால் அம்மையாரின் நன்மதிப்பைப்பெற்ற இளைஞர்களுக்குத்தான்!''

—அவர் பதில் இது.

''இந்த உலகில் குடியேறுபவர்களுக்கு வருவாய் எங்கிருந்துவரும்?''

''தொழிலைப்பற்றி என்ன. ஒன்றைப்பற்றியுமே கவலை தேவையில்லை. சகலவும் இந்த உலகில் இருக்கும். வேறு எங்குமே போகத் தேவையில்லை. யார்கையையுமேஎதிர்பார்க்கத் தேவையில்லை.''

### மனித தெய்வம்

புதுச்சேரி அம்மையாரை எனக்குத்தெரியாது; ஆனால் பெரியார் மயில்வாகனத்தாரின் இதயத்திலிருந்து வெளிவந்துகொண்ட வார்த்தைகளிலிருந்து அவர்கள் அன்னைக்கு அன்னையாகக் காட்சியளித்தார்கள். அரசாங்கங்களினால் சிருஷ்டிக்க முடியாத இனமத சார்பற்ற ஒரு சமுதாயத்தை அவர்கள் உருவாக்குகிறார்களே! உலகம்உய்யப்பிறந்தமகான்களில் ஒருவரான அரவிந்தரின் கனவுகளை நனவாக்கிக்கொண்டிருக்கும்- புதுச்சேரி அம்மையார்- 'மனிதஉருவில் நடமாடும் தெய்வம்' என்ற பெரியார் மயில்வாகனத்தாரின் கருத்தை ஏற்கத்தான் வேண்டும்.

அம்மையார் நிறுவும் புது உலகில் வாழப்போகும் யாழ்ப்பாணத்துப் பெரியார் மயில்வாகனத்தார் அதிர்ஷ்டசாலிதான்!

போட்டி பொறாமையற்ற 'புதுஉலகு' ஒன்றுக்குப்போய் வந்த மனநிறைவுடன் அந்தப் பெரியாரிடமிருந்து விடைபெறுகின்றேன்.

## தேவார...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எம்மை இயக்குவன. இச்சை-விருப்பம், ஞானம்-அறிவு, கிரியை-செயல்! 'நமசிவாயவே' விரும்புவதும் அறிவதும் 'நமசிவாய' என்றே எனது நாக்கு இடைவிடாது உச்சரித்துப் போற்றியபடி இருக்கிறது. 'நமசிவாய' என்ற பஞ்சாட்சரமே எப்போதும் எவருக்கும் மிக மிகமேலான நல்லவழியைக் காட்டுவது. (2)

### பெரிய குற்றம்

பொதுவாக மனிதன் நின்று விளையும் பயனைப் பற்றி எண்ணிப் பார்ப்பதே இல்லை. உடனே விளையும் பயனைப் பெறவிரும்பி அவசரப்படுகிறான். இதுவே மனிதனிடம் உள்ள பெரிய குற்றமாகும்.

—டாக்டர் மு. வ.
—'குழந்தை'—




குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுகள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமதி மறைந்தது !

நீலவானத்தில் நீந்தி விளையாடும் தாரகைக் கூட்டங்கள் தரை நோக்கி விழுவதை அடிக்கடி பார்த்ததுண்டு. ஆனல் முழுமதியே உருகிவந்து முற்றத்தில் விழுந்துவிட்டால் இத்தரையில் வாழ்வோர் எக்கதிக்கு உள்ளாவர். மதி விழுந்த காட்சியை மக்கள் கண்டு மலைத்து நின்ற நிலையை

சோதிடக் கலாநிதி திருமலை
— க வேலுப்பிள்ளை —

வாய்விட்டுக் கூறுந்தரம் எனக்கில்லை. பகுத்தறிவு வானில் சுடர் பரப்பிக் கொண்டிருந்த பால் நிலவு ஒழுகி விழுந்து மறைந்து விட்டான் திருமலையில்.

புரட்சிப் பூங்காவில் புதுமை மணம் பரப்பிக்கொண்டிருந்த அழகுமலர் வெங்கொடுமைச் சாக்காட்டில் விழுந்து வெந்து கருகிவிட்டது.

காலஞ்சென்ற சி, இராயப்பு ஒரு சிறந்த எழுத்தாளன்; சிந்தனையாளன். திருகோணமலையில் இராயப்புவைத் தெரியாதார் இல்லை. திருகோணமலை அரசியலிலே அது வளைந்து, நெளிந்துவந்த வரலாற்றிலே திரு. இராயப்பு ஒரு தனி மனிதனுக வாழவில்லை ஒரு பெரும் ஸ்தாபனமாகவே பணிபுரிந்தார். ஆட்சிமன்ற உறுப்பினர்களை உருவாக்கும் பணியில் அவர் பல சாகஸங்களைப் புரிந்துகாட்டியிருக்கிறார். அரசியல் வானிலே பல அப்போலோக்களை அடுத்தடுத்து ஏவி வெற்றி பல கண்ட வீரர். திருகோணமலையில் தமிழரசுக் கட்சி இன்னும் தனது ஸ்தானத்தை உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறதென்றல் அதற்கு வித்திட்ட வித்தகன் திரு. இராயப்பு அவர்கள்தான் என்பதை எவரும் மறுக்கவோ, மறக்கவோ மாட்டார்கள். திருமலையில் கட்சியை உருவாக்கியவர் அவர், கட்சியின் முதற் செயலாளரும் அவரேதான்.

திருகோணமலை மக்கள் மத்தியிலே பல புதுமைகள் புரட்சிகள் செய்துகாட்டிய விந்தை மனிதர் இராயப்பு, என்றென்றுமே ஒரு நிலையான இடத்தைப் பிடித்து விட்டார்.

பொங்கலென்ருல் வீட்டிலே பொங்கி சுற்றந்தழுவி சுற்ருடல் கூட்டி உண்டு களிப்பதுதான் என்ற நிலை இருந்துவந்த நேரத்திலே 'பொங்கல் ஒரு விழா: அது உழவர்கள் எடுக்கும் உன்னதத் திருவிழா; உழைப்பாளிகளின் உடலில் இருந்து சிந்தும் உதிரத்திற்கு பலன் கிட்டும் நாள். பொங்கல் திருநாளில் அரிசிப் பொங்கல்மட்டும் ஆக்கக் கூடாது. அறிவுப்பொங்கலும்சமைக்க வேண்டும்' என்று குரலெழுப்பி முதலிலே பொங்கலுக்குத் திருமலையில் விழா எடுத்த பெருமை திரு. இராயப்புவிற்கே உண்டு.

மிகமிக எளிய முறையில் தனது வாழ்க்கையை மேற்கொண்டிருந்த திரு. இராயப்பு ஒருபடிக்கல்லாக, படகாக, பரண் ஏணியாக வாழ்ந்து மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு உழைத்து எத்தனையோ ஆசிரியர்களை. எத்தனையோ கலைஞர்களை, எழுத்தாளர்களை, கவிஞர்களை உருவாக்கிவிட்டு இன்று நம்மிடையே இருந்து பிரிந்துவிட்டார் அவர் தொட்டதுறையெல்லாம் இனித்தன. அவர் எடுத்த முயற்சியெல்லாம் மணத்தன. நாடகத்துறையில் அவர் எடுத்த, எழுதிய பல நாடகங்கள் மிகவும் புரட்சிகரமானவை.

எல்லார்க்கும் இனியவராக வாழ்ந்த திரு இராயப்பு திருகோணமலையில் அண்ணு அவர்களை அறிமுகம் செய்துவைக்கும் பொருட்டு இருபது ஆண்டுகட்கு முன் 'அண்ணு மன்றம்' என்ற ஒரு கழகத்தை ஆரம்பித்து அதனுற்பட்ட வேதனையும், துன்பமும் கொஞ்சநஞ்சமல்ல. எதிர்ப்புகள் பலவற்றையும் ஒரு புன்னகையால் அவருடைய அடக்கத்தால், அறிவுத் திறனுல் வெற்றிகண்டு பலரும் மதிக்க, இறுதியில் மூதூரில் ஆசிரியை ஒருவரைத் திருமணம் செய்து கிழமையில் ஆறு நாட்களைத் திருமலையிலும் ஒரு நாளை மூதூரிலுமாகக்

## குடும்பத்தை

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

சமூகநலனுக்கு மதிப்பு

சமூகநலன்களை மதிப்பதற்கு நம்இளைஞர் தவறுவாராயின் நம்நாட்டினர் யாவருமே பலவீனமடைவர். அதனுல் நம் நாடு முழுவதுமே சிதறிவிடும். மீண்டும் நாம் பலம்பெற்று எழுவதற்குப் பலநூறு ஆண்டுகள் செல்லக் கூடும்.

இங்ஙனம் நிகழாமற் காப்பாற்ற வேண்டுமென மகளிர் நிறுவனங்கள் யாவற்றையும் நான் வேண்டிக் கொள்கிறேன்.

இதனை வாசிக்கும் ஆடவர் மகளிர் யாவரும் தமது மொழியில் இதனைப்பெயர்த்துப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்குமனுப்பிப் பொதுமக்களுக்கு நல்லபிப்பிராயத்தை உண்டாக்குவார்களென நம்புகிறேன்.

## வாதநோயாளிக்கு விளையாட்டுப் போட்டி

ஜெர்மன்கூட்டாட்சிக் குடியரசில் புகழ்பெற்ற விளையாட்டுச்சங்கங்கள்பல இருக்கின்றன எனினும் நடமாடத் தெரிந்த மனிதர்களுக்குத் தெரியாத விளையாட்டுச் சங்கங்களும் ஜெர்மனியில் இருக்கின்றன.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் 50,000 பேர்கள் பாரிசவாதநோயினுல் பீடிக்கப்பட்டு, எழுந்து நடமாட முடியாதநிலையில் இருக்கிருர்கள். இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியில்தான் கழிக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் பிறரதுஉதவியை எதிர்பார்க்கவேண்டும். நடமாட முடியாவிடில் என்ன? உள்ளத்தையும் உடலையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள முடியுமே! இதற்குவிளையாட்டுக்கள் உதவிசெய்கின்றன. விளையாட்டுக் காரணமாக இவர்களின்உடல் ஆரோக்கியத்துடன்திகழ்கிறது முன்பு எதிர்பார்த்ததைவிட நீண்டகாலம் வாழ்கிருர்கள்

ஜெர்மனியில் பாரிசவாத நோயினுல் பீடிக்கப்பட்டவர்களின் நலனுக்காக 12 விளையாட்டுச் சங்கங்கள் இருக்கின்றன இவைபெரும்பாலும் மருத்துவ மனைகளுக்கு அருகாமையில் இருக்கின்றன. பிராங்பேர்ட் சங்கத்தில் மட்டும் 54 உறுப்பினர்கள் இருக்கிருர்கள் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை இவர்கள்கூடி, பலவித விளையாட்டுகளில் ஈடுபடுகிருர்கள்.

# அரசமைப்பின் தோற்றம

ஆதித் தமிழகம் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்து வகைப்பட்ட நிலங்களையுடையதாக இருந்தது. குறிஞ்சி மலையும் மலை சார்ந்த இடமுமாகும். இங்குள்ள மக்கள்தொழில் வேட்டையாடுவதும் தினை முதலிய சிறுதானியம் செய்வதுமாகும் முல்லை நிலம் காடும் காடுசார்ந்த நிலமுமாகும். இங்குள்ள மக்கள் அனேகமாக மந்தை மேய்த்துவந்தனர் பாலை, மணல்வெளியைக்கொண்ட வனுந்தரத்தைக் குறித்தது. இங்கு உற்பத்தித் தொழில் கிடையாது குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடைப்பட்ட நிலமாகையால் வழிப்போக்கர்களிடம் பொருட்களைச் சூறையாடுவதே இங்கு வதிவோர் தொழிலாக இருந்தது. மருதத்தில் வயல் வெளிகள் நிறைந்து காணப்பட்டன. மருத நிலத்தார் வேளாண்மை செய்து வந்தனர். இவர்களிடம் சொத்து அதிகமாக இருந்தது நெய்தல் கடலும் கடல்சார்ந்த இடமுமாகையால் மீன்பிடித்தல் இவர்கள் தொழிலாக இருந்துவந்தது. இவர்களிடமும் பெருமளவுக்குச் சொத்துக்கிடையாது.

இந்த ஐந்துவகை நிலங்களுள் சொத்துக்கள் குறைந்த நிலங்கள் குறுஞ்சி, பாலை நெய்தலாகும். இங்கு வாழ்ந்தமக்கள் தம் சொத்துக்களைப் பாதுகாக்கப் பெருமளவு முயற்சிகள் செய்ய வேண்டிய அவசியமேற்படவில்லை. முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்களிடம் பெருந்தொகையான மந்தைகள் இருந்தன. அயல்பகுதியான பாலையில் பெருந்தொகையானகள்ளரும் இருந்தனர். இதனுல் தங்கள் சொத்தைப் பாதுகாத்து சூறையாடுவோர்களை ஒன்றுபட்டு ஒழிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. இதனுல் இப்பகுதி மக்கள் ஒன்றுபட்டு எல்லைப்புறங்களில் சென்று பாடி வீடு அமைத்துப் பகைவரைத் தோற்கடித்துத் தம் சொத்துக்களைப் பாதுகாத்தனர். இது ஒருநாள் இரண்டு நாளில் முடிவதாக இருக்கவில்லை இதனுல் இவர்களைக் குறித்த நேரத்தில் ஒன்றுபடுத்திப் பாசறைகளுக்குக் கொண்டு போவதற்கு ஒருவர் அவசியம் தேவைப்பட்டார். தங்களுக்குள் புயபலபராக்கிரமமும் புத்தியும் நிறைந்தஒருவரிடம் இப்பொறுப்பை ஒப்படைத்தனர். இவர் தனக்கு உதவிக்கு ஒருசிலரை வைத்துக்கொண்டு எல்லோரையும் ஒன்றுபடுத்தித் லும் முல்லைநிலமக்கள் நிரந்தரமாக வசிப்பவர்களாகக் காணப்படவில்லை அவர்கள் தங்கள் மந்தைகளுக்கு எங்கு புல்லுண்டோ அங்கெல்லாம் இடம் மாறிச்சென்றனர் இதனுல் இவர்கள் ஒரு குறிப்பிட்ட நிரந்தரமான நிலப் பகுதியிலே தொடர்ந்து சீவிக்கவில்லை. இதனுல் நிலையான அரசாங்கம் போன்ற ஒரு தாபனத்தினை அவர்கள் அமைக்கமுடியவில்லை.

மருதநிலந்தான் பொருத்தமானதாகக் காணப்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் குறிக்கப்பட்ட நிலத்தினைப் பண்படுத்தி விவசாயம் செய்துவந்தனர் இதனுல் இவர்கள் நிரந்தரமாகவே

— க. கணேச பி. ஏ —

தனது அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தார். இவர் பசுக்களைக் காப்பாற்றும்தலைவனுகையால் இவரைக் கோ என்றும் கோன் என்றும் அழைத்தனர் இக்கோனே பிற்காலத்தில் மன்னன் என வழங்கப்பட்டது.

அடுத்து மருதநிலத்திலும் சொத்துக்கள் அதிகமாகவிருந்தன. அந்நிலத்தில் விளைவுகள் அதிகமாக இருந்ததுடன் இயற்கை வளமும் நிறைந்து காணப்பட்டது. நீர்வளம்மிக்க அப்பகுதி செல்வம் கொழிக்கும் சிங்காரபூமியாகக் காணப்பட்டது கலைக்கும் கலைவளர்ச்சிக்கும் அதுவே தாயகமாக விருந்தது. நாகரீகத்தின் பிறப்பிடமாகவும் பண்பாட்டின் தோற்றுவாயாகவும் விளங்கியது. உலகத்திலே நாகரீகம் தோன்றிய நிலம் மருதம் என்பதனை அந்தந்த நாடுகளின் வரலாறு மூலம் அறியலாம். உதாரணமாக எகிப்தில் நைல் நதி பாயும் மருத நிலப் பகுதியில், மொசப்பத்தேமியாவில் யூப்பிறற்றீஸ், தைக்ஸ் கிறீஸ் பாயும் மருதநிலத்தில், இந்தியாவில் சிந்துநதி பாயும் ஹரப்பா, மொகஞ்சதாரோ, மருதநிலப் பகுதியில், சீனுவில் கோயாங்கோ, யாங்சிக்கியாங் நதிபாயும் மருத நிலப்பகுதியில்தான் நாகரீகம் தோன்றியிருந்தது. ஆகவே மருதநிலத்துக்குப் பாதுகாப்பு அவசியமானதாக இருந்தது. பிற நிலமக்கள் இப்பகுதிச் செல்வங்களைக் கொள்ளையிடுவதில் நாட்டங்கொண்டிருந்தனர். இதனுல் இப்பகுதி மக்களுக்கு ஒரு நிலையான தலைவன் தேவைப்பட்டான். தலைவனுக்கு நிலையான கடமைகள் இருந்ததால் இறை என்றழைத்தனர். அதற்கு அமர்த்தப்பட்டவர். இறைவன்என்றழைக்கப்பட்டார். முல்லை நிலத்தலைவன் கோன் என்றும் மருதநிலத்தலைவன் இறைவன் என்றும் அழைக்கப்பட்டனர். முல்லைநிலத்தலைவன் நிலையில்லாது மந்தைக்குப் பின்னே திரிபவன். மருதநிலத்தலைவன்நிலையாக இருப்பவன். இதனுலேதான் வள்ளுவர்

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட்கு இறை என்று வைக்கப்படும்'

என்ருர்.

ஒரு குறிக்கப்பட்ட எல்லைக் குட்பட்ட நிரந்தரமான நிலப்பரப்பினைக்கொண்டதாகவும், மக்கள் தொகையினைக்கொண்டதாகவும் அதிகாரத்தையுடையதாகவும் ஓர் அரசாங்கத்தினைக்கொண்டதாகவும் உடையதனையே அரசியற் கோட்பாட்டின்படி அரசு என்கின்ருேம். இதற்கிணங்க பண்டைய முல்லை, மருதமாகிய இரண்டு நிலமுமே அரசின்தோற்றத்துக்கு ஏதுவானதாக இருந்தபோதி

சீவிக்கத்தொடங்கினர். அப்பகுதியிற் தோன்றிய தலைவன் தனக்குத் தேவையான ஆட்களை உதவிக்கு நியமித்துக்காரியங்களைச் செய்து வந்தான் அவர்கள் காரியங்களை நடத்துவதற்கு ஒரு நிரந்தரமான அலுவலகம் அமைக்கப்பட்டது. இவைகளே பின் அரசாங்கமாக மாறியது. அரசு என்பதற்குரிய நான்கு அங்கங்களும் இங்கு இருப்பதனைக் காணலாம். இங்குதான் அரசு தோன்றியதனைக்காணலாம். எனவே விவசாய இடம் தான் - மருதநிலந்தான், அரசின் பிறப்பிடம். கலைகளின் பிறப்பிடம். பண்பாட்டின் தோற்றுவாய். இதனுற்ருன் விவசாயிகள் உயர்ந்தோர்களாகக் கணிக்கப்படுகின்றனர். அதனுலேதான் வள்ளுவப் பெருந்தகை இவர்கள் பெருமையினை

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம், தொழுதுண்டு பின்செல்வர்"

என்று கூறினுர்.

## சேவலா கோழியா?

இதுவரை முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சு கோழியா சேவலா என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடியாதிருந்தது.

இன்று இதை அறிந்துகொள்வதற்கு லெனின்கிராட் விஞ்ஞானி ஓ.புத்னிகோவ் தயாரித்துள்ள அட்டவணை உதவியாயுள்ளது. ஆணு பெண்ணு என்பதையும் மின்சார அதிர்ச்சியைசமாளிக்க- முட்டைக்குள்ள ஆற்றலையும் முட்டையின் வெள்ளை மஞ்சள் கருவின் அமைப்பையும் வைத்து நிர்ணயிக்கலாம் என்று முடிவாகியுள்ளது. இதில் உயர் கணித சாஸ்திரம் பிரயோசனப்படுத்தப்படுகிறது. இதற்கான அட்டவணையை எலக்ரோனிக் கம்பியூட்டர் உதவியுடன் தயாரித்துள்ளனர் இதனுல் குஞ்சு பொரிக்கும்கருவியின் திறமையை இரண்டு மடங்கு உயர்த்தலாம்.

கழித்து, சேவைக்கு இலக்கணமாக வாழ்ந்து, 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 28 ம் திகதி மாலை 5-30 மணியளவில் இவ்வுலகைவிட்டு நீங்கினுர் திரு. இராயப்புவின்

துன்பத்தைக் கண்டு கசியாதமனம் நல்ல மனமன்று. அது அட்டையின் மனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

0 0

துன்பம் தான் உள்ளத்தின் அன்பை அளந்து வெளிப்படுத்த வல்லது

டாக்டர் மு.வ, அவ்வி

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 22-9-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி. 6-25சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற் சிந்தனை, 6- 35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 இவ்வார பிரமுகர், 8-00 வாத்திய இசை 8-15 ஞானுமிர்தம். 8-30 சைவ நீதி 9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00தொழிலாளர்களுடன் 10-30 படத்திலிருந்து, 11- 15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதிகள்: 1-00 குங்குமம்.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 வயலின், 6-15 பாமாலை, 6-30 பஜனை, 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-45 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட பலன்

# இன்று பிறந்ததினமா?

## 22 -9- 1970

அடுத்த பிறந்ததினம்வரை நடக்க இருப்பது என்ன? கோள்கள், எண்கள் அமைவு கொண்டு பலாபலன் தரப்படுகின்றது.

கடந்த ஆண்டில் கஷ்டங்கள் பலவற்றைச் சமாளிக்கவேண்டியிருந்தது. உழைப்புப் பணம் பற்றாக்குறை. செலவினமதிகரிப்பு. இன்று தொடக்கம் நடக்கவிருக்கும் ஓராண்டுக்காலம் குதூகலமான வாழ்வளிக்கும் தொழில் உயர்ச்சி கிட்டும். இல்லாளுடன் தொழில்விஷயமாய் பிறதேச சஞ்சாரம் மேற்கொள்ளுவீர். அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு உண்டு. அவ்வழிப் பேருதவியும் கிட்டும். 1971 சித்திரை மாதத்தின்பின் புத்திர உற்பத்தி உண்டெனினும் கருச்சிதைவு ஏற்பட ஏது உண்டு. வியாபாரிகளுக்கு மேன்மையான யோகபலன் கிட்டும்.

காணிக்கொள்வனவு தவிர்க்கப்படல் நன்று. பொன், பொருள் பிறரால் அபகரிக்கப்படலாம். எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் நடக்கவும் மாதாவழி உதவி கிட்டும் அறிகுறி காணப்படுகின்றது.

1- 4- 5 எண்கள். இவ்வெண் கொண்ட தேதிகள் ஆண்டுபூராவும் அதிர்ஷ்டம் கொடுக்கும். 8 எண் எதற்கும்தவிர்த்துக் கொள்ளவும்.

# உங்கள் இராசி பலன்

22—9—1970 — 28—9—1970

**மேடம்**

வாழ்வில் உன்னதகாலம், குடும்பவாழ்வில் ஒளி பிரகாசிக்க இடமுண்டாகும். வாகனக் கொள்வனவு விற்பனவு பெருநிதி கொடுக்கும், பகைமை கொண்ட உற்றார் சினேக பான்மை கொள்வர், தெய்வ சிந்தனை காணலாம், தொழிலுயர்ச்சியுண்டு.

**இடபம்:**

சகோதரருடன் பகைமை கொள்வீர், காணித்தகராறு தலைகாட்டும், பின்னிப் பிணைந்த காதல் வாழ்வு உண்டாகும் தொழில் சகபாடி ஒருவரால் பணவகை ஏமாற்ற காண்பீர், திடீர் பிரயாணம் உண்டு' உத்தியோக உயர்ச்சி கருதிய முயற்சிகளுண்டு, குடும்பப் பெரியாரொருவரின் உதவியும் கிட்டும்.

**மிதுனம்:**

கலைவாழ்வு பெறுவீர், மக்களின் மதிப்புண்டு, கலைத் தொண்டில் பெரிய பாராட்டுதல்களும் பட்டமும் காத்திருக்கிறது, எனினும் குடும்ப வாழ்வில் பணமுடை அல்லல் கொடுக்கும், பலர்க்குத் தொழிற்பேறு உயர்ச்சி கிட்டலாம். சுவாசம் தொடர்பு கொண்டு நோய் தோன்றலாம்.

**கடகம்**

வெளியூர் பிரயாணத்திற்கு ஆயத்த முண்டெனினும் இடையில் தடைப்பட ஏது உண்டு, பொன், பவுண் சேரும் வாய்ப்புண்டாகும், கமத்தொழில் விருத்தியுண்டாகும், வாகன வகைக் கொள்வனவில் பெரு நட்டம் காத்திருக்கிறது, விபத்து சம்பவிக்கலாம், கடற் பிரயாணம் தீது.

**சிங்கம்:**

தேவையற்றுப் பெற்றார் பிதா மாதா வழியாருடன் பகைத்துக் கொள்ளாதீர், சொத்து சேரும் நிலையில் பிணக்குண்டாகும். கடல் கடந்த யாத்திரைக்கு இடமுண்டு.

**கன்னி**

பவிஷயத்திலும் மந்த நிலை காண்பீர், இறைவழிபாடு சிக்கல் பல நீக்கும். மனச்சாந்தி கொடுக்கும், உறவினர் வழிச் செலவும் அதிகரிக்கலாம், வியாபாரப் பெருக்கு வியாபாரிகட்குண்டு, கள்வர் பயமுண்டு, வாரஇறுதியில் சிறு யாத்திரை மேற்கொள்வீர், புத்திரர் நோய்வாய்ப்பட இடமுண்டு.

**துலாம்:**

பணவிரையம் உண்டெனினும் நினைத்ததை இலகுவில் சாதித்துவிடுவீர், கல்வி ஈடுபாடு காண்பீர், மாணவர் பலர் படிப்பில் மேல்நிலை காண்பர், தொழிற் கல்வி சித்தி கிட்டும், பிறநாட்டுப் பிரயாணம் கூடுதலானவர்க்குக் கிட்டும், குடும்பத்தில் அபிப்பிராய பேதம் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:**

சனி, குருபகவான் நிலை அவ்வளவு திருப்தியளிப்பதாயில்லை, குடும்பத்தில் ஏற்படும் சிறு பிணக்குகளைப் புத்தியாகச் சமாளித்துக் கொள்ளவும். விபரீத விளைவுகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும், காணிக் கொள்வனவு சிறுக உண்டு, தனிமையில் இன்பம் காண்பீர், திட்டங்கள் பல உண்டு. அவை பூரணமாக நிறைவேறமாட்டாது.

**தனு:**

குடும்பசுகம் காண இடமுண்டு, ஆடம்பரச் செலவினம் காண்பீர், குடும்பத்தாருடன் உல்லாசப் பிரயாணம் மேற்கொள்வீர், படிப்பில் நாட்டமுண்டு, தொழிலிடத்தில் பூசல் உண்டு, சக ஊழியர் பலருடன் நேச பான்மை கொண்டு வாழவும், வாகனக் கொள்வனவு தீது, புத்திரப்பேறு கிட்டும்.

**மகரம்**

நினைத்த போக்கில் போய் ஆபத்தில் மாட்டிக் கொள்வீர். பெரியாரை மதித்து நடக்கவும், உற்றாரின் ஒத்தாசை வேண்டும், இரும்பு, பித்தளை பாத்திர வியாபாரிகட்கு உன்னதகாலம், குடும்பத்தில் சகஜநிலையுண்டு. உத்தியோகத்தில் திடீர் இடமாற்றம் ஒருசிலர்க்கு உண்டு

**கும்பம்**

அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கிறது. வியாபாரிகள், பங்குதாரர் நல்ல நிலை காண்பர் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுவகை ஈடுபாடு பெருநிதி கொடுக்கலாம், உடலில் உஷ்ணரோகங்கள் தோன்றலாய்.

**மீனம்:**

அரசியலாருடன் ஈடுபாடு காண்பீர், ஒரு சிலரின் உதவியால் தொழில் முன்னேற்றமுண்டு, பலருக்கு விவாக பந்தம் ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. விவசாய அபிவிருத்தி காணலாம் நெல், அரிசி வியாபார வகைப் பெருக்கு காணலாம், தர்மசிந்தை கிட்டும்; விபத்து நிகழலாம் பிறநேரப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

ஜோதிஷமணி மேல்கரவை காவ. சிவப்பிரகாசன்

# இறப்பைவிட

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தரத்தை வழங்க முடியுமா?

உணவைப் பொறுத்த வரையில் இன்றைய உலகில் உணவு உற்பத்திப் பெருக்கத்தின் விகிதம் ஜனப்பெருக்க விகிதத்துக்குப் பின்னடைந்து நிற்கவில்லை. பரஸ்பரம் அனுகூலமான சர்வதேச வர்த்தகத்தின் மூலம் தேவைப்பட்ட உணவை இன்றைய உலகில் வினியோகம் செய்துவிட முடியும்.

## உணவுப் பிரச்னை

சொல்லப்போனால், உணவுப் பஞ்சமோ, கனிவளப் பொருள்களின் பற்றாக்குறையோ மின்விசைத் தட்டுப்பாடோ மனிதகுலத்தை அச்சுறுத்தவில்லை என்றே கூறலாம். நமது உலகம் தாங்கிக்கொள்ளக்கூடிய மக்கள் 'பாரத்தின்' அளவைக் கோடானு கோடியாகத்தான் கணக்கிட வேண்டும் என்றுதான் நிபுணர்களின் கணக்கீடுகள் காட்டுகின்றன. ஆயினும் கொள்கை ரீதியான இந்த அளவைக் கொண்டு நாம் ஏமாந்து விடக் கூடாது, வரவிருக்கும் ஆண்டுகளில் வளரும் நாடுகள் பலவற்றிலும் ஜனத்தொகையின் துரிதமான பெருக்கப் போக்குக்கும் பொருளாதாரமும், கலாசாரமும் போதிய அளவு துரிதமாக முன்னேறாத நிலைமைக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி தோன்றும். மிகவும் வளர்ச்சி பெற்ற நாடுகள் அளிக்கும் உதவி இந்த இடைவெளியைக் குறைக்க உதவும்.

தமது வளர்ச்சியில் பின்தங்கிநிற்கும் இளம் ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு உதவுவதில் துர்ப்பாக்கிய வசமாக மேலைநாடுகள். பொருளாதார, அரசியல் நிபந்தனைகளை விதிப்பதிலேயே குறியாக இருக்கின்றன.

ஆயுதப் பெருக்கப்போட்டிக்கு முடிவு கட்டுவதில் சமாதானத்தை நேசிக்கும் சக்திகள் வெற்றி பெறுமானால் மிகவும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள் பிற நாடுகளில் நவீன காலனியாதிக்கத்தை திணிப்பதை நிறுத்திவிடுமானால் வரவிருக்கும் சிரமமிக்க ஆண்டுகளையெல்லாம் அனைத்துலகமும் மிகச் சுலபமாகச் சமாளித்துவிடும். அடுத்த நூற்றாண்டு பிறப்பதற்கு முன்னுள்ள இந்த ஆண்டுகளில் வளரும் நாடுகளின் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் வளர்ச்சியுற்ற நாடுகளின் பொருளாதார, கலாசாரத் தரத்திற்கு உயர்த்தியாக வேண்டும் இயல்பான ஜனத்தொகைப் பெருக்கத்தையும் கணிசமான அளவுக்கு மட்டுப்படுத்த வேண்டும்.

---

# வெள்ளி மல்லிகை

சிறுகதை, கட்டுரை கவிதை என்பன தொகுப்புகளாகவும், கோவைகளாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன கோவை, மாலை திரட்டு, மஞ்சரி என்ற வகை இலக்கியம் பழைய காலத்திலுமிருந்தது தான். நமது உடலமைப்பே பார்க்கப்போனால் பஞ்சபூதங்களின் ஒரு தொகுப்பு— கூட்டுத் தொகுப்பு, எலும்புக் கோவை! எங்கள் வாழ்க்கையோ சில ஆண்டுகளின் தொகுப்பு. தென்னைமரம், பனைமரம் என்று அண்ணாந்து பார்த்து அம் மரங்களின் நாற்பது ஆண்டு வளர்ச்சியைத்தானே சொல்கிறோம். ஆகவே பூமியில் நாம் வாழ்வு என்று கணிப்பதெல்லாமே இப்படி வெறும் காலச் சுழலும் தோற்றமும். மறைவும். கனவும், நினைவும்... முடிவில் ஏதுமே சாஸ்வதமாக இல்லையா?

சே! இதென்ன சூன்யம்! மறுபடியும் இலக்கிய வழிக்குத் திரும்புவோம். என்ன சொன்னேன்? கதைகளின் தொகுப்பு...

ஆம் தனித்தனியாக கதைகளை எழுதி அவை பத்திரிகைகளில் வெளியானபின் எல்லாவற்றையும் தொகுத்துப் புத்தகமாக வெளியிடுகிறார்கள். பல அத்தியாயங்களைத் தொகுத்து நாவல் இலக்கியம் படைப்பதில்லையா? அதுபோல. ஆனால் நாவல் என்ற நெடுங்கதையிலே கதை முழுமைக்குமாக ஒரு மையக்கருத்து

இத்தனை சிறப்பு ஆற்றல் படைத்த வால்மீகியிடம் கதை இரவல் வாங்கி கவி பாடியதால்தானே கம்பர் மகன் அம்பிகாபதி அவர் மேல் சீற்றங்கொண்டான்! மூலக்கதை வால்மீகியின் கதையானாலும் கம்பர் தான் பாடிய காவியத்தில் பல மாறுதல்கள் புகுத்தி அதனை தமது சொந்தக் காவியம் ஆகப் படைத்துள்ளார் என்பதை ஒப்புக்கொள்ளலாம்.

இராம கதையை வடமொழியில் வகுத்த வால்மீகி திருமணத்தின்முன் இராம சீதையர் ஒருவரை ஒருவர் கண்டு காதல்கொண்டதாய் கூறிற்றிலர். அச்சரிதையைத் தமிழ் செய்ய வந்த கம்பரோ தமிழ் மரபிற்கேற்ப,. அத்தலைவனும் தலைவியும் திருமணத்தின் முன்னரே கண்டு காதல் கொண்டனரெனக் கற்பிக்கின்றார். இப்படி இன்னும் பல. கம்பன்மட்டுமல்லாது இந்திய மொழிகள் அனைத்திலும் இராமாயணம் பாடியவர்கள் ஆதி காவ்யமான வால்மீகிகதையில் இதுமாதிரிப் பல மாறுதல்களைப் புகுத்தித்தான் பாடியிருக்கிறார்கள். இதற்கும் மேல், இடைச் செருகல்களாகவும், நாடகமாகவும் கர்ணபரம்பரையாகவும் நாடெங்கிலுமே இராம காதை பல ரூபம் பல வடிவம் பெற்று ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்கள் சிந்தைக்கு வற்றாத இன்சுவை அளித்துக்கொண்டேயிருக்கிறது.. எத்தனை

# கதைக்கடல்!

இழையோடும். கதை வளர வளர வளர்ந்த மரம் கிளை பரப்புவதுபோல, கிளைப் பொலிவு கதைக்கு ஊட்டமளித்தாலும் தொடக்கம் முதல் முடிவுவரை தண்டு மரமே பிரதானமாக ஓங்கி உலகளந்து நிற்கும்.

உலக இலக்கிய நோபல் பரிசுபெற்ற கதைகள் பல தமிழினும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. பெர்ல்பக் எழுதிய பூமித் தாய் ஹெமிங்வே எழுதிய 'கடலும் கிழவனும்' — அவற்றில் எனக்குப் பிடித்த இரண்டு கதைகள் இரண்டும் திரைப்படமாகவும் வெளிவந்தன. கதைகளை வாசித்தபோதும். பிறகு இரண்டினது திரைச் சித்திரிப்பைப் பார்த்தபோதும் அந்த கதை இலக்கிய லயிப்பில் எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. இலக்கிய உலகம் எந்த அளவுக்கு என்கருத்தை ஒப்புக் கொள்ளுமோ சொல்லத்தெரியவில்லை. பிறமொழிப்படங்களை டயலாக் பேச்சு உரையாடல்களை மொழி மாற்றி தமிழிலே டப் செய்வது போலவும், அதற்கும்மேல் நடிகர்களையும்கூட தமிழ் நடிகர்களாக மாற்றிப் போட்டு ஒரே செட்டிங்கில் ரீடேக் (மறு தடவை படப்பிடிப்பு) எடுப்பது போலவும் பிறமொழிக் கதை இலக்கியச் செல்வங்களைத் தமிழ்ப்படுத்தி நமது நாட்டு மண்மணம் வீசும்படி கருத்தமைந்த நல்ல கதைகள் எழுதமுடியாதா? கம்பன் கூட வால்மீகியைத் தழுவித்தானே இராமாயணம் பாடினார், ஆனால் எல்லோரும் கம்பனாக முடியாதுதான். ஒரு கம்பனால் அது முடிந்தது. கம்பனுக்கு கருத்துப் பஞ்சம் இருந்ததில்லை. கற்பனைப் பஞ்சம், புலமைப் பஞ்சம் இருந்ததில்லை. புலமை நயம் வற்றாத ஊற்றாகப் பெருகிய மகாகவி அல்லவோ அவன்!

பெரும் மக்கள் இலக்கியம், சமுதாய காவியம் அ ்!

'பூமித்தாய்' நாவல்பழைய நாள் சீன பூமியின் புதல்வர்களது வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒரு வயல் காவியம். நம் நாட்டுக்கதைகளில் பெரும் பகுதியும் முடிவில் தானே கலியாணம். பூமித்தாய் கதையில் கல்யாணம் கதையின் தொடக்கத்திலேயே நடக்கிறது அத்துடன் அந்நாள்மட்டில் தனித்து நின்று பேராடிய குடியானவனின் வாழ்க்கையில் புதுவாழ்வு புதிய தோள்வலியுடனே பிறக்கிறது. முதற் பிரசவம்கூட உதவிக்கு ஓர் ஆள் இல்லாத் தனிமையிலேயே நடந்துமுடிகிறது. உணவளிக்கும் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாயிருப்பவர்களால் கொடுமை. வெட்

**அ. செ. மு.**

டுக்கிளி வண்டுகளின் படையெடுப்பால் பயிர்நாசம். இத்தனைக்கும் மேல், வானம் பொய்த்து நிலம் காய்ந்து பாளம்பாளமாக வெடித்து பாடுபட்டவர்கள் ஆற்றாக் கொடுமையில் "புனித" மண்ணையே அள்ளி உண்ணும் பயங்கரமான பஞ்சம் சூழ்கிறது. அப்படியும் குடியானவனின் வாழ்க்கைப் போராட்டம் மனத்திண்மையுடனே தொடர்கிறது. மாளாத போராட்டம். ஊர் விட்டு ஊர்போகிறார்கள்- அகதிகளாக. ஊர் ஊராகப் போய்க்கொண்டேயிருக்கிறார்கள். நிலத்தில் போட்டுக்கிடந்த ஒரு முத்துமாலை குடியானவன் கைக்கு அகப்படுகிறது. அதனைப் பார்த்த போது பூமித்தாய் தங்களுக்கு வரிசைவைத்து மீண்டும் அழைப்பதாக ஒரு புது

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மனையியலில்விசேடபயிற்சி பெற்ற பட்டதாரிகள் அல்லது டிப்ளோமா (Diploma) பட்டம் பெற்ற அனுபவமுள்ள ஆசிரியர்களும், பாலர் கல்வியில் கூடிய திறமையுள்ள ஆசிரியர்களும், சைவமங்கையர்சபையால் நடாத்தப்படும் வகுப்புகளுக்கு தேவைப்படுகின்றனர். ஆங்கிலம், சங்கீதம், சித்திரம், கைப்பணி ஆகியவற்றில் தகைமைகள் கவனிக்கப்படும். விடுதி மேற்பார்வையாளராக கடமையாற்ற ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். தகைமைகளுக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ஒக்டோபர் 6-ந் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். திருமதி ம. திருச்சிற்றம்பலம், காரியதரிசி, சைவமங்கையர்சபை, மயிலணி, சுன்னாகம். 2967

தையல் நிலையத்திற்குப் பெண்கள் உடனே தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் அனுபவம் வாய்ந்தவர்களாயிருத்தல் வேண்டும். 232/B, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்றவிலாசத்திற்கு நேரில் வரவும். 2965

பெண்கள்:

2 வருடம் நெசவு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. டொபி வேலைகள் தெரிந்தால் மிகவும் நன்று. போடிங் வசதி உண்டு. 30-9-70-ந் திகதி வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். இ. சபாலிங்கம், கௌரவ காரியதரிசி, நெசவு நுண்கலை நிலையம், 426, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். 2963

### விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம், வைமன் ரோட்டில் 2பரப்புவிஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: அ. த. ஜெயசிங்கம், 5 முருகேசு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 2966

தென்புலத்தாருக்கு ஏன் இக்கடமைகளைச் செய்ய வேண்டும்? இதனால் நாம் அடையும் பயன்கள் யாவை? இவைகளை மஹாளயபட்சம் விளக்குகின்றது. சைவ மக்கள் இல்லங்கள் தோறும் இருக்கவேண்டிய அரிய கைநூல். தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைந்த இந்த நூலின் விலை 25 சதம் மட்டுமே. கிடைக்குமிடம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம். 2968

உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதால் காங்கேசன்துறை-கீரிமலை வீதியிலுள்ள ''துரை பேக்கரி'' சகலதளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்க. 2950


எப்பொழுதும் நவநாகரீக ஆடைகளுக்கு

ரொலறம்ஸ்

★ லங்கா மணிப்புரி சேலைகள்
★ லங்கா கைத்தறி சேலைகள்
★ நைலெக்ஸ் சேலைகள்
★ அச்சடித்த வொயில் சேலைகள்
★ பூப்போட்ட நைலெக்ஸ் சேலைகள்
★ சூட்டிங் ★ சேட்டிங்

மற்றும்
வாசனைப் பொருட்களும் மலிவாகப் பெறக்கூடிய இடம்

ரொலறம்ஸ்

46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7099.


# பச்சை வாழை

(4-ம் பக்கத் தொடர்ச்சி

இளங்கன்றுகளை நோய்கள் தாக்குதில்லை.

இதன் பின்னர் முறையாக உரிய காலங்களில் பாசனம் செய்வது முக்கியச் செயலாகும். 15-ம் நாளன்று களையெடுத்துக் கொத்திவிட்டு, 20 கிலோ சணல் விதைக்க வேண்டும். விதைத்து 40 நாட்களில் சணல் வளர்ந்து பூவுடன் இருக்கும் நிலையில் அவற்றை உழவர்கள் மண்வெட்டிகளால் வெட்டி மடக்கத் தவறக்கூடாது. மூன்றுவது திங்களுக்குப் பிறகு ஏக்கருக்கு 50 வண்டிச் சுமை தொழு உரம் அல்லது நன்கு மக்கிய கலவையுரத்தை, கன்றுகளைச் சுற்றிலும் கிண்ணம்போல் குழி பறித்து வைக்கவேண்டும்.

**உரமிடுதல்**

குள்ளக்காவண்டிஸ் பயிர்களுக்கு இரண்டு மடங்கு உரங்கள் தேவை. நட்ட நான்காம் திங்கள் இறுதியில் கலவையுரம்-8ல் (6: 6:18) ஏக்கருக்கு 1170 கிலோ உரமிட்டு, பின்னர் அடுத்த திங்கள் இறுதியில் 10: 0: 30 என்ற விகிதத்திலுள்ள 'கலவையுரம் 9-ல் ஏக்கருக்கு 1500 கிலோவும் உரமாக இடவேண்டுவது அவசியம்.

மேலும் அவ்வப்போது பக்கக்கன்றுகள் சருகுகளை நீக்கல், களையெடுத்தல், பூச்சி மருந்துகளைத் தெளித்தல் போன்ற முறைகளைக் கையாண்டுவரின் நட்ட பத்தாவது திங்களில் பச்சை வாழைப்பயிர் பயன்தரத் தொடங்குகிறது.

ஓர் ஏக்கரில் குள்ளக்காவண்டிஸ் பயிரிடுவதற்கு ஏற்படும் செலவு சுமார் ரூ. 3.520 மட்டுமே. இதில் ரூ 1, 520உரங்களை வாங்குவதற்கும், ரூ 800 உழவு செய்ய, சுற்றுக்கால் வெட்ட 100 வண்டிச்சுமை தொழு உரம் வாங்குவதற்கெனவும் செலவாகும். மேலும் 2400 கன்றுகளைப் பெற்றுநடுதற்கு ரூ. 500 தேவையாகும். களைகளெடுத்தல், கன்றுகள் நீக்குதல் போன்ற காரியங்களுக்கும் மற்றும் பாசனத்திற்கெனவும் ரூபா 700 செலவிடுதல் வேண்டும்.

2,400 வாழைகளிலிருந்து சுமார் 2,300 தாறுகள் கிடைக்கும். தார் ஒன்றிற்கு ரூபா 6 எனக் கணக்கிடினும் 13,800க்குத் தாறுகள் விற்பனையாகும். செலவு கழித்து எஞ்சும் இறுதி ஆதாயம் ஏக்கருக்கு ரூ 10 280 ஆகும்.

**உழவர்களுக்குக் கிடைக்கும் உதவிகள்**

வாழைகளைப் பயிரிடும் உழவர்களை ஊக்குவிப்பதற்கெனத் தொழில் நுட்ப ஆலோசனைகளும், குறுகிய காலக்கடன்களும் வழங்கப்படுகின்றன. செங்கற்பட்டு, வடஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஏக்கருக்கு ரூ. 1000 கடனுக வழங்குகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏக்கருக்கு ரூ.1400 வரை கடனளிக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடித் துறைமுகத்தைச் சுற்றி சுமார் 4,000 ஏக்கர்களில் பச்சை வாழையைப் பயிரிடுதற்குச் சிறப்புத் திட்டமொன்று உருவாக்கப்பெற்றுச் செயற்படுத்தப்படுகிறது.

குள்ளக்காவண்டிஸ்எனப்படும் இவ் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதால் ஏராளமான அந்நியச்செலாவணி நம் நாட்டிற்குக் கிடைக்கிறது. 1000 ஏக்கர் நிலத்தில் மிளகு, முந்திரி, கரும்பு, காப்பி ஆகியவற்றைப் பயிரிடின் சுமார் ரூ. 4லட்சம் முதல் 20லட்சம் வரைதான் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆனால் அதே ஆயிரம் ஏக்கரில் இவ் வாழையைப் பயிரிட்டு, ஏற்றுமதி செய்வதால் ரூ.79 லட்சம்வரை ஓர் ஆண்டில் அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

அமோக ஆதாயம் தரும் பச்சை வாழையைப் பயிரிடும் உழவர் பெருமக்கள் மிகுந்த ஆதாயத்தைத் தாங்கள் பெற்று மகிழ்வதுடன், நம் நாட்டிற்குத் தொடர்ந்து தேவைப்படும் அந்நியச் செலாவணியையும் அதிகமாகப் பெற்றுத் தருகின்றனர்.

(தமிழக அரசு கிராமநலத் திட்ட மக்கள் தொடர்பு அலுவலரால் வெளியிடப் பட்டது

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: G. C. E. (O/L) வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழி பகுதி I ; II புதுமுறை மாதிரி கை விஞக்கள் விலை ரூபா 3. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2964

### கேள்விவிளம்பரம்

வடமராட்சி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கட்டிடம் கட்டுவதற்கு கூலி ஒப்பந்தம்கோரப்படுகிறது. கேள்விப்பத்திரம் மேற்படி காரியாலயத்தில் ரூபா 5 கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரம் 10-10-70க்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

S. P. ராஜா,
செயலாளர்.

வடமராட்சி கூட்டுறவு
வைத்தியசாலைச் சங்கம்,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

2466


"கராட்டே"

உங்கள் எதிரிகளிடமிருந்து உங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமா! இன்றே எமது தற்காப்பு பயிற்சி வகுப்பில் சேருங்கள். விபரங்களுக்கு:

School of Self Defence,
M. S. S. T.
Sangarapillai Building.
95/3, Stanley Road,
Jaffna.


## கதைக் கடல்.......

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை மனத்தில் சுடர்விட, குடியானவனும் மனைவியும் சொந்த நாட்டுக்கே திரும்புகிறார்கள்.

'பூமித்தாய்' கதை எழுதிய பேர்ல்பக் சீன பூமியில் நெடுங்காலம் வாழ்ந்த ஓர் அமெரிக்க மாது. அங்கு வாழ்ந்த காலத்தில் இந்நாவலை எழுத முடிந்ததாகச் சொல்கிறார். இதனை வாசிக்கும்போது ''நாவல் இலக்கியம் நமக்குப் புதிய சரக்கு; மேற்கேயிருந்து வந்ததுதான்'' என்பது புரிகிறது; அதனை ஒப்புக்கொள்ளவும் செய்கிறோம்.

'பூமித்தாய்' நாவல் வெளிவந்த சென்ற இருபத்

(16-ம் பக்கம் பார்க்க)


MANOHARA
Jaffna
Daily: 4-45, 7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
Rayan O'Neal
in
THE BIG BOUNCE
(Color)

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Clint Eastwood,
Lee Van Cleef
in
THE GOOD, BAD,
AND THE UGLY

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
திருடாதே


இன்று மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
பிரேம்நசீர் - ஷீலா - சாரதா
நடித்த
துலாபாரம்
(மலையாளம்)

வெஸ்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
ஜெய்சங்கர் - நிர்மலா
வாணிஸ்ரீ - மனோகர்
நடித்த
காதலித்தால் போதுமா?

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — பத்மினி — நாகேஷ்
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
எதிர்காலம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ
ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ்
நடித்த
பூவா தலையா

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30).
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரியா கம்பைன்ஸ்
துலாபாரம்
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

ஒரு நாட்டினுக்கு மேன்மையான செல்வம் ஒழுக்கமுடைய மக்களேயாகும். ஆகையினுல் நாட்டில் வாழும் முதியோர்கள் சிறுவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் பயிற்றி நாட்டினது வளத்தைப் பெருக்க முயலுதல் வேண்டும் சிறுவர்கள் முதியோர்களுடைய வாழ்க்கை முறையை பின்பற்றி வாழும் இயல்புடையராகையினுல் முதியோர்கள் முதற்கண் அறவாழ்வு நடத்துதல்வேண்டும். அப்பொழுது சிறுவர்கள் அவர்களைப் பின்பற்றி வாழ்வார்கள்.

0 0 0

உன்னுல் பிறர்க்கு நன்மை செய்யமுடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு: அதுவே நீ செய்யும் பெரும்நன்மையாகும்.

0 0 0

உன்னை நீ வெற்றி கொண்டிருந்தாலன்றி உனக்குள் நீ இன்பறும் சக்தி பெற்றிருந்தாலன்றி உண்மை மகிழ்ச்சியடைய முடியாது.

0 0 0

எந்த வளர்ச்சியாக இருந்தாலும் அதற்கு முதன்முதலில் வேண்டியது சுதந்திரமாகும்.

— விவேகானந்தர்

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீலசோப்

300 உறைகளைக் கொடுத்து ஒரு டொக்கிமென் பாக் பெற்றுக் கொள்ளவும்.

மில்க்வைற்சோப்

தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

# யாழ். இந்துக் கல்லூரியில் கனிஷ்ட பிரிவு அவசியம்

## பரிசளிப்பு விழாவில் அதிபர் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

''ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றத்துக்குள்ளாவதை எல்லாக் காலத்திலும் எம்மால் தடுத்து நிறுத்த முடிந்ததில்லை. எனினும் இவ்வாண்டு அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. கற்பித்தல் என்பது உத்தமமான ஒரு தொழிலாகும். ஆண்டுகள் பலவாக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே நெருங்கிய அன்புறவுச் சூழ்நிலையொன்றினை நாம் வளர்த்துவந்திருக்கின்றோம்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திரு என் சபாரத்தினம் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினுர்

திரு சபாரத்தினம் மேலும் பேசியதாவது:-

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு கூடுதலான மாணவர்களை நாம் அனுப்பிவிட்டோம் என்று சில பத்திரிகைகள் வயிற்றெரிச்சலைக் கொட்டியுள்ளன சுதந்திரமான போக்கும், தேசிய கொள்கையும் உடையவர்கள் எனக் கூறிக்கொள்ளும் இப்பத்திரிகைகளின் இவ்வித செயல்களை யாரும் எதிர்பார்த்திருக்கமுடியாது இவ்வித கசப்பான கருத்தை வெளியிடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதினுல் அதைத் தவறென்று யாரும் கருத முடியாது

எமது நாட்டில் பரம்பரை பரம்பரையாகச் சிறப்புடன் விளங்கும் தொழில் நுட்ப வல்லுநர்கள் ஒரு புறமாகவும், நவீன தொழில்நுட்ப புலமை உடைய பொறியியலாளர்கள் இன்னெரு புறமாகவும் இருக்கிறுர்கள் இவ்விரு பகுதியினருக்கும் இடையே பெரியதோர் இடைவெளி இருந்துகொண்டேயிருக்கிறது தொழில் முறையில் முன்னேறிய நாடுகளில் இவ்விடை வெளியை நிரப்ப, தொழில் பயிற்சியாளர்கள், தொழில் நுட்ப முதல்வர்கள், அனுபவம் மிகுந்த தொழில் நுட்ப இயக்குநர்கள் இருக்கின்றுர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இப்பணியைச் செய்யமுடியாமல் இருப்பது வேதனைக்குரியது

இப்பிரச்னைகளின் காரணங்களைமட்டும் ஆராய்ந்து கொண்டிருக்கவோ, அதன் விளைவுகளை ஆராய்ந்து கொண்டிருக்கவோ நாம் விரும்பவில்லை எமது நாட்டுக்கு புதிய அரசியல் திட்டத்தை வகுக்கவேண்டுமென்ற உணர்வு எவ்வாறு ஏற்பட்டதோ அவ்வித செயல்முறை உணர்வுதான் எமக்கு இன்று இருக்கவேண்டும் கல்வி சம்பந்தமாக ஏற்படப்போகும் புனரமைப்பு அல்லது இவ்வித குறைபாட்டை நீக்கக்கூடிய புதிய திட்டம் எதுவாயிருந்தாலும் பொருளாதார நிலையில் காணப்படும் இவ்வித இடைவெளிக்கு பாலமாய் அமையக்கூடிய ஆதாரக் கல்வித் திட்டம் உதவும் என நம்புகிறேம்

1971ம் ஆண்டிலிருந்து 8-ம் வகுப்பு நீக்கப்படலாம் இது பாரதூரமான ஒரு செயலாக இருப்பதனுல், இவ்வகுப்புகள் இக்கல்லூரியில் தொடர்ந்திருக்க பெற்ருேர்கள் பெருமுயற்சி எடுத்துவருகின்றனர்

யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு ஒரு கனிஷ்ட பிரிவு அமையவேண்டியது மிகவும் அவசியம் பெற்ருேர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று அமைச்சு தனது அநுமதியைத் தளர்த்தும் என நம்பிக்கொண்டிருக்கிறேம்''

செனட்டர் நடேசன் கியூ சி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் போட்டிகளில் வெற்றிபெற்றேருக்கு வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கே சரவணமுத்து பரிசில்களை வழங்கினுர்

## களவு போன சைக்கிள்

### 19 ஆண்டின் பின் கண்டுபிடிப்பு

### ஆனல் புகார் செய்தவரைக் காணவில்லை

மட்டுவில், திங்கள்

19 வருடங்களுக்கு முன்பு களவுபோன சைக்கிள் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனல் சைக்கிள் களவு போய்விட்டதாக பொலிசில் புகார் செய்தவரைக் கண்டுபிடிக்கும் முயற்சி தோல்வியில் முடிந்து விட்டது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

தமது புதிய சைக்கிள் ஒன்று களவுபோய் விட்டதாக மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இராமநாதன் எனபவர் 1951-ம் ஆண்டு பொலிசில் புகார் செய்திருந்தார். தற்போது அந்தச் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் கொடுத்துள்ளது. முறைப்பாட்டுக்காரரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரும்படி சாவகச்சேரிப் பொலிசார் மட்டுவில் தெற்கு கிராமசேவையாளருக்கு அறிவித்துள்ளனர். கிராமசேவையாளர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கதிர்காமநாதனிடம் கையளித்துள்ள அறிக்கையில் ச. இராமநாதன் என்ற பெயரில் மட்டுவில் தெற்கில் எவருமில்லை என்று தெரிவித்துள்ளார்.

— —

## கதைக் கடல்......

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

தைந்து ஆண்டு காலத்திற்குள்ளாக,போராடப்பிறந்த வாழப்பிறந்த இவர்களைப் போன்ற அதிசய 'மக்கள் சேனை'யின் வாழ்க்கைக் காவியமாக எத்தனை கதைகள் வெளிவந்து விட்டன. ஹெமிங்வேயின் 'கடலும் கிழவனும்'....மலையாள மொழியிலே சிவசங்கரம்பிள்ளையின் 'செம்மீன்' தமிழிலே கூட தென் தமிழ் நாட்டு சங்கரராம்படைத்த மண்ணுசை—இன்னும் பல,

'இன்ஸ்பிரேசன் (மனக்கவர்ச்சி) என்று இதனைத் தான் சொல்கிறுர்களோ.

'ஆமாம்எல்லாம் அழகாக அமைத்து நயம்பட உரைக்கும் டரீட்மெண்டிலே இருக்கும் சார்'

'தலைஅமைப்பு என்றும் ஒன்று இருக்கிறதாமே'

'ஆகா அதுவும் இருக்கு சார்.'

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு செப்டம்பர் மீ 22-ந் உ அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இடமாற்றம் ரத்து

பூநகரி, வெள்ளி

உருத்திரபுரம் மஹாவித்தியாலயத்திலிருந்து புங்குடுதீவுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்ட திரு சி. இராசநாயகத்தின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

உருத்திரபுரம் மஹாவித்தியாலய பெற்ருேர் ஆசிரியர் சங்கம் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி மூலம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

## தம்பிரான் சுவாமிகள் இந்தியா பயணம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இம் மாதம் 27-ந் திகதி விமான மூலம் இந்தியா செல்கின்ருர். இவர் ஒரு மாத காலம் அங்கு தங்கியிருந்து [illegible] திரும்புவார்.

## மொழிப் பிரச்னை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் இந்த முன்னணி மூலமே வடமாகாண அபிவிருத்தி வேலைகளைச் சீர் திருத்தவேண்டும்.'

சிங்களத் தேர்ச்சிபெருத புதிய அரசாங்க ஊழியர்களுக்கு அவகாசம் தரப்படுமென பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு பீலிக்ஸ் பண்டாரநாயக்கா அண்மையில் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனல் அதற்கிடையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தார் இதைத்தொடர்ந்து தமது வக்குறுதிகளை நிறைவேற்ற முடியாதென அமைச்சர் எம்மிடம் கூறிவிட்டார்

சர்ச்சைக்குரிய விடயங்களை தமிழ் எம் பிக்கள் இரகசியமாக, மௌனமாக செயற்படுத்தாமல், பகிரங்கமாகச் செய்வதினுல் ஏற்படக்கூடிய விளைவுகள் இது போன்றதாகவேதான் இருக்கும். பகிரங்கமாகச் செய்வதினுல் அவர்களது திட்டங்கள்பிரயோசனமில்லாமலும் போய்விடுகிறது''

நல்லூர் எம் பி திரு சி. அருளம்பலம் கூறியதாவது: நமது நாட்டுக்குச்சுதந்திரம் கிடைத்தாலும் பூரண சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. எதற்கும் வெளிநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து எமக்குப் பொருட்கள் கிடைக்காவிட்டால் பட்டினி கிடக்கவேண்டிய நிலைதான் ஏற்படும். ஆதலால் பொருளாதார அபிவிருத்தி செய்தால்தான் சுதந்திரமாக வாழமுடியும்.

திரு. எஸ் ஜெயரத்தினம், திரு என். கணேஷ் ஆகியோரும் பேசினுர்கள்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. தமிழரசுக்கட்சியாருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

அடுத்த வாரம்

'எங்கள் கிராமம்'

தங்கத் தாத்தாவின் சொந்தக் கிராமமான நவாலியுடன் ஆரம்பித்து வைக்கிருர் பிரபல எழுத்தாளர்

வி. என். பி.

29-9-70 ''ஈழநாடு வார மலரில்

## 'உடையில் பெருமையில்லை சேவையேசேவை'

யாழ்ப்பாணம், செவ்

சாரணர் பெருமை உடையில் இல்லை. அவர்களது சேவையிலேயே தங்கியுள்ளது. சாரணர் சேவைசெய்வதையே இலட்சியமாகக் கொள்ளவேண்டும், இதனல் இந்நாட்டில் சாரணர் சேவையிலீடுபட்டுள்ளமாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரசைகளாக உருவாக முடியும்..

இவ்வாறு வடபிராந்திய கல்வியதிபர் திரு வீ சங்கரலிங்கம் நேற்று நடைபெற்ற சாரணர் சபையின் வருடாந்தவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற இவ்விழாவில் முன்னுள் சாரணர் இயக்கக் கமிஷனர் திரு, குக் அனுப்பிய அறிக்கையை சாரணர் மாகாண ஆணையாளர் திரு. ஜே. எஸ். அரசரத்தினம் வாசித்தார்.

சாரணர்களுக்கான பரிசில்களை திரு சங்கரலிங்கம் வழங்கினுர். காரியதரிசி திரு ஆர் ஈ இராசநாயகம் நன்றியுரை கூறினுர்,

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபரும்சாரணர் இயக்கத் தலைவருமான திரு ஜே எம் சபாரத்தினம் முன்னுள் கல்வியதிபர் எஸ் யூ சோமசேகரம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்,

கு. வி. ம,

கேரள

## முன்னணிதலைவர் அச்சுதமேனன்

திருவனந்தபுரம், செப் 21

கேரளத்தில் பாரத கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான கூட்டணியின் தலைவராக திரு அச்சுதமேனன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற முன்னணியினர் கூட்டத்தில் இந்த முடிவு செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது

## தேசிய ஒற்று...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென்றும், விஞ்ஞானம் முதலியவற்றில் கலைச்சொல்லாக்கம் எங்கும் உபயோகிக்கக்கூடியதாக உருவாக்கப்படவேண்டுமென்றும் இதில் தனித்தமிழ் என்று யாருக்கும் விளங்காத தமிழைப் பாவிக்கவேண்டியதில்லையென்றும் கூறினுர்.

தமிழரின் வருங்காலம் மிகக் கஷ்டமானதென்று கூறிய செனேட்டர் நடேசன் எதற்கும் அரசாங்கத்தையோ அரசாங்க உத்தியோகத்தையோ, ஆட்சிமன்றப் பிரதிநிதிகளையோ நம்பியிராமல் சிக்கனமாகவும் தங்கள் உழைப்பையே நம்பியிருக்கவேண்டுமென்றும் கூறினுர். (கு. வி. ம.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org